# அறுவடை

(குறுங்காவியம்)

கலையார்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடை

(குறுங்காவியம்)



கலையார்வன்

ஜெயந்த் சென்ரர்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடை

குறுங்காவியம்

நூலாசிரியர் : கலையார்வன் (கு. இராயப்பு)
வெளியீடு : ஜெயந்த் சென்ரர், 165, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
கணினி, வடிவமைப்பு, அட்டை : ஜெயந்த் சென்ரர்
அச்சுப்பதிப்பு : யே. எஸ். பிரிண்டர்ஸ், பண்டத்தரிப்பு
முதற்பதிப்பு : மார்கழி 2014
பதிப்புரிமை : ஆசிரியர்
பக்கங்கள் : 16 + 184
விலை : 300/=

# Aruvadai

Short Epic

**Author :** Kalayarvan (K.Rayappu)
**Published by :** Jeyanth Centre, 165, Vempady Road, Jaffna.
**Computer, Layout, Cover :** Jeyanth Centre
**Print by :** J.S.Printers,Pandathruppu
**First Edition :** December 2014
**Copy Right :** Author
**Pages :** 16 + 184
**Price :** 300/=

International Standard Book Number
ISBN 978-955-0197-04-0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதரவற்ற நிலையில் அறுவடையில் பலியான
அத்தனை பேருக்கும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முகப்புக் குறிப்பு

நாட்டில் அசாதாரண சூழல் நிலவிய காலத்தில், 10.06.1986 - 22.10.1987 இடைப்பட்ட நாட்களில் நெய்தல் நிலத்துக் குருநகர், தன் மக்களில் பலரை பலிகொடுத்துள்ளது. இலங்கை மற்றும் இந்திய படையினரால் மேற்கொள்ளப்பட்ட இச்செயல்கள் நிகழ்ந்தபோது நான் இலங்கையில் இருக்க வில்லை. ஆயினும் அவைபற்றி பின்நாளில் அறிந்த தகவல் களில், குழுவாக அமைந்த இழப்புகளை மட்டும் அப்படியே கவிதை வடிவில், குறுங்காவியமாய் வெளிக்கொண்டு வந்துள் ளேன். இந்தக் குறுங்காவியம் விபரிக்கும் நிகழ்வுகளாவன:

- ☞ தமது ஜீவனோபாயத் தொழிலுக்கெனப் படகில் சென்று கரைவலைத் தொழிலில் ஈடுபட்டுகொண்டி ருந்தவேளை மண்டைதீவு முனைக் கடலில் 31 பேர் கொல்லப்பட்ட நிகழ்வு.
- ☞ அகதிகளாய் பள்ளிக்குடா சென்றிருந்த மக்களில் நோயுற்ற சிலரை யாழ். வைத்தியசாலையில் சேர்க்கும் நோக்கில் படகில் ஏற்றிவந்தபோது முகத்துவாரக் கடற்பகுதியில் 05 பேர் கொல்லப்பட்ட நிகழ்வு.
- ☞ வீடுகளில் வசிக்க முடியாமல் யாழ்/ புனித பத்திரி சியார் கல்லூரியில் அகதிகளாய் தங்கியிருந்த நாளில் 04 பேர் கொல்லப்பட்ட நிகழ்வு.
- ☞ அதேநாள் புனித பத்திரிசியார் கல்லூரியில் காயப்பட்ட வர்களை வாகனத்தில் ஏற்றிச் சென்றபோது வைத்திய சாலை முன்பாக 11 பேர் கொல்லப்பட்ட நிகழ்வு.
- ☞ அராலியிலிருந்து தீவகம் நோக்கி வள்ளங்களில் இடம்பெயர்ந்து சென்றநாளில் 15 பேர் கொல்லப்பட்ட நிகழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அணிசெய் குறிப்பு

கலையார்வன், 'உப்புக்காற்று' (2012) என்ற நாவலின் மூலமாக என்னைக் கவர்ந்தவர். யாழ்ப்பாணத்து குருநகர் பகுதியில் வாழும் மீனவர்களின் வாழ்க்கையை மையமாகக்கொண்டு அவர் எழுதிய உப்புக்காற்று என்னும் நாவல் இலங்கையில் விருதுகள் பலவற்றை வென்றெடுத்தது சாதாரணமானது; ஆனால், 'உப்புக்காற்று' ஈழத் தமிழ் நாவல் உலகில் அழியாத ஓரிடத்தை பிடித்துக் கொண்டது என்பதுதான் கலையார்வனின் அயராத முயற்சிக்கு கிடைத்த பெருவெற்றி.

போர்க்காலச் சூழலில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்களின் அவலம் நிறைந்த வாழ்வை எடுத்துக்கூறுவது இவரது இரண்டாவது நாவலான 'வேப்பமரம்' (2013). சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இந்த மண்ணிலே நடைபெற்றுவந்த போராட்டங்களின் மத்தியில் மக்களோடு மக்களாக வாழ்ந்து போரின் அவலங்களைத் தானும் அனுபவித்த ஒரு கலைஞனின் உள்ளத்தில் தீயாய்க் கொளுந்துவிட்டெரியும் எண்ணங்களுக்கு உருக்கொடுப்பனவே கலையார்வனின் எழுத்துக்கள்.

இவரது எழுத்துக்கள் தான் வாழ்ந்த மண்ணையும் மக்களையும் விட்டு விலகிச் செல்லாதவை. கதை கூறும் போதும் காவியம் படைக்கும்போதும் அவரின் பாடு பொருள் மண்ணில் நடந்த அவலங்களாகவே இருப்பது, அவர் இந்த மண்ணோடும் மக்களோடும் கொண்டுள்ள பிரிக்கமுடியாத பிணைப்பின் இறுக்கத்தையே எமக்கு எடுத்துக் காட்டுவதாயுள்ளது.

கலையார்வனின் பதினேழாவது நூலாக வெளிவருகின்ற அறுவடை கவிதைவடிவில் எழுதப்பட்ட ஒரு குறுங்காவியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையெனது கற்பனையல்ல கலங்கலற்ற உண்மை
காலத்தால் அழியாத கருங்கல் பொழிப்புக்கள்
இதயத்தை பிழிந்திடும் இழப்புகளின் அட்டவணை
இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தவர் இங்கில்லை

என்ற ஆதங்கத்தோடு,

குருநகர் மண்ணை உலுப்பிய அவலங்களை
குவலயம் அறிந்திட உரைத்திடலே என்நோக்கம்

எனக் கூறியவாறு காவியத்துள் நுழைபவர் முகமன், விளைநிலம், கதிர்கள் - 1, கதிர்கள் - 2 ஆகிய நான்கு தலைப்புக்களில் 579 பாடல்களைக் கொண்டமைந்ததாகத் தனது காவியத்தை அமைத்துள்ளார். முகமன் என்ற தலைப்பிலான பகுதியுள் காப்பு, அவையடக்கம், இறை வேண்டுதல், வினயம், பாயிரம் ஆகியவை பதினொரு பாடல்களில் அமைய ஏனைய பகுதிகளில் காவியத்தின் பாடுபொருள் விரித்துச் செல்லப்படுகின்றது.

கலையார்வன், தான் வாழ்ந்த குருநகர் பிரதேச மக்களின் வாழ்வில் ஏற்பட்ட அவலங்களையே காவியத்தின் பாடுபொருளாகக் கொண்டிருப்பினும், ஆரம்பத்தில் விளைநிலம் என்ற தலைப்பில் காவிய மரபிற்கேற்ப குருநகர் பிரதேசத்தின் புவியியல் நிலை, மக்களின் வாழ்க்கை முறை, தொழில் முயற்சி முதலியவற்றை விபரித்துச் செல்கின்றார். இவ்வாறு விபரிக்கும்போது நாட்டில் ஏற்பட்ட அவலங்களுக்குக் காரணமான இனரீதியிலான முரண்பாடுகளுக்கான அரசியல் வரலாற்றையும் தொட்டுக் காட்டுகின்றார்.

பிரித்தானியரது ஆட்சிக் காலத்தில் இலங்கை ஒற்றையாட்சி முறைக்குக் கொண்டுவரப்பட்டதையும் சுதந்திரத்தின் பின்னர் அந்த நடைமுறையே பின்பற்றப்பட்டதையும் வரலாற்றுத் தவறாகக் கூறும் கலையார்வன், அதுவே இலங்கையில் இன முரண்பாட்டுக்கு வழிவகுத்த தென்பதைச் சுட்டிக்காட்டுவதோடு சுதந்திர இலங்கையில் மேற்கொள்ளப் பட்ட பல்கலைக்கழக தரப்படுத்தல், தமிழாராய்ச்சி மாநாட்டுக் குழப்பம் ஆகியவற்றால் தமிழர் தரப்பில் சாத்வீகப் போராட்டம் வலுவிழந்து வன்முறையிலான போராட்டம் ஆரம்பித்ததையும், அதன் பின்னர் ஏற்பட்ட அவலமான விளைவுகளையும் சுட்டிக் காட்டியவாறு குருநகர் மக்களின் அவலங்களை விவரிக்க முற்படுகின்றார்.

10.06.1986 அன்று அதிகாலையில் வழக்கம்போல தொழிலுக்குச் சென்ற கடற் தொழிலாளர்கள் 31 பேரும் மண்டைதீவுக் கடலில் தமது கரைவலைத் தொழிலை செய்துகொண்டிருந்த வேளையில் கறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையணிந்த ஆயுததாரிகள் குறுக்கிடுகிறார்கள். குறுக்கிட்ட ஆயுததாரிகள் ஏதும் அறியாத அப்பாவித் தொழிலாளர்களில் ஒருவனை அழைக்கும் சம்பவத்தைக் காட்டிய ஆசிரியர், பின்னர் நாவல் எழுதும் பாணியில் கதையை முறித்து, வாடியில் ஒருநாள் நடைபெற்ற கட்டாப்பாரை மீன் விலை கூறும் காட்சியை விபரிக்க முற்படுகின்றார். இதன் பின்னரே முப்பத்தொரு தொழிலாளர்களும் பிணமாக வந்து சேருவது பற்றிய கதை கூறப்படுகின்றது.

அவ்வேளையிலும், பிணமாக வருகின்ற தொழிலாளர்களின் உடல்களைக் கண்ணுற்ற மக்களுக்கு பதினாறு வருடங்களுக்கு முன்னர் பாலைதீவு பயணத்தில் ஏற்பட்ட படகு விபத்தில் பலியான எண்பது பேரின் நினைவு வருவதாகக் கூறி அச்சம்பவத்தை விவரிக்கிறார். பின்னர் மண்டை தீவுக் கடலில் பலியான முப்பத்தொரு உடல்களையும் அடையாளம் காண்பதும், அவற்றை குருநகர் சனசமூக நிலையத்தில் சேர்ப்பித்ததுமான நடவடிக்கைகள் எடுத்துக்கூறப்படுகின்றன.

தொழிலாளரின் கொலைச் சம்பவத்தால் குருநகர்ப் பிரதேசமே சோகத்தில் மூழ்கியிருப்பதாக கவிஞர் விவரிக்கின்றார்.

"காலையில பஞ்சியா யிருக்கெண்ட மனுசன்
சொன்னதக் கூடவும் கேக்காம அனுப்பினேனே
சொல்லச் சொல்ல நாய்கள் ஊளையிட்டுதே
முன்னால விடியச்சோறு முழுசாத் தவறிச்சுதே..."

எனக் கதறியழும் கனகத்தின் வேதனையையும், திருமணமாகிப் பதினாறாம் நாளில் தொழிலுக்கனுப்பித் திரும்பி வரும்வரை தன்னுணர்வை அடக்கித் தனித்திருந்த பெண் பொட்டிழந்து, பூவிழந்து ஊராரின் பழிச்சொல்லுக்கு பாசத்தை இரையாக்கிப் பதறித் துடிப்பதையும், கறுத்த எறும்மையே நசிக்காத தந்தையை நினைத்துக் கதறும் மகன் ஆனந்தனின் சோகத்தையும் ஆசிரியர் கூறும் விதம் நெஞ்சை நெகிழ வைப்பதாகவே உள்ளது.

இறுதி ஊர்வலம் நடைபெற்ற நாளில் குருநகர் மண்ணே சோகத்தில் ஆழ்ந்திருந்தது.

"எவருக்கும் உறக்கமில்லை எரியவில்லை அடுப்படி
எதுவும் பெரிதாய் இருந்ததில்லை கடுந்துயரால்
ஒவ்வொரு குடும்பமும் இழப்பாகக் கருதியதால்
ஓலங்கள் கதறல்கள் ஒப்பாரியுடன் இணைந்தன..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறும்போது, இது முப்பத்தொரு வீடுகளில் ஏற்பட்ட சோகமாக இல்லாமல், முழு ஊருக்குமே ஏற்பட்ட இழப்பாகவே காட்டப் படுகின்றது.

கதிர்கள் - 2 என்ற பகுதியில், இந்திய இராணுவம் அமைதி காக்க வந்து ஆயுதப்போரில் இறங்கியதால் ஏற்பட்ட இழப்புக்கள் எடுத்துக் கூறப்படுகின்றன.

"அணைக்க வந்தவர் அழிவைத் தந்ததால்
ஆலாய்ப் பறந்தனர் ஆயத்த மின்மையால்
இணைத்துப் பொட்டலம் உணவாய்ப் போட்டவர்
இந்நிலை தந்ததால் எல்லையற்ற கலக்கம்
இணைந்து குடும்பமாய் பிணைந்த குழுக்களாய்
இடம்பெயரத் தொடங்கினர் இன்னுயிர் காத்திட..."

என, இந்திய அமைதி காக்கும் படை விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபட்ட காலத்தில் குருநகர் மக்கள் தொழிலை இழந்து, வீடு வாசல்களை இழந்து, ஏதிலிகளாக இடம்பெயர்ந்த வரலாற்றைச் சுட்டிக் காட்டுகின்றார். இவ்வாறு இடம்விட்டு இடமாக ஓடியோடி உயிரைக் காக்க முற்பட்ட வேளையில், முகத்துவாரக் கடலில் ஐவரையும், புனித பத்திரிசியார் கல்லூரியில் தங்கியிருந்தபோது வீசப்பட்ட எறிகணைக்கு நால்வரையும், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை முன்னால் பதினொரு பேரையும், அராலிப் பகுதியில் பதினைந்து பேரையும் குருநகர் மக்கள் பலிகொடுத்த சம்பவங்களை ஆசிரியர் விபரமாக எடுத்துக் காட்டுகின்றார்.

"மக்களைக் காக்கவந்த அகிம்சை வாதிகள்
முறைமாறிக் குதித்தனர் யாழ்ப்பாணப் போரில்
அக்கறையாய் உணவுகளை வான்வழி கொட்டியவர்
அழிக்கவும் துணிந்தனர் ஆற்றலை ஒன்றித்து..."

......

"யாழ்நகரில் கால்கள் இடுகையி லடைந்த
ஏமாற்றம் ஜீரணமற்று இருந்தது அவர்களிடம்
'ஜாலியன்வாலா' மைதானப் படுகொலைப் பாணியை
எடுத்தது கைகளில் இந்தியன் இராணுவம்..."

என, இந்திய இராணுவத்தின் செயல்களை கண்டிக்கும் ஆசிரியர், அராலிக் கடலில் ஆதரவற்று நின்ற அப்பாவி மக்களை இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானப்படை அழித்த செய்தியை ஊடகங்கள் திரிபுபடுத்தி;

"அராலிக் கடலில் இருபது புலிகளை
அழித்து சாதனை புரிந்தது ஆகாயப்படை..."

எனக் கூறியதைக் கண்டிப்பதோடு,

"எண்பத்தி எட்டுநாள் கொன்சனா உட்பட
எழுபது வயதுள்ள கிறிஸ்ரியனும் புலிகள்
கண்பார்வை அற்றோரும் குடுகுடு கிழவிகளும்
குழந்தைகள் பலரும் கணக்கில் புலிகள்
கணக்குப் பார்த்தால் மருண்டவன் கண்ணுக்கு
காரிருள் எல்லாம் பேயெனும் நிலைதான்
காண்பவ ரெல்லாரும் கொடியவராய் தெரிவது
காரணம் பிறப்பால் தமிழராய் இருப்பதே"

எனக்கூறி முடிப்பது ஆசிரியரின் விபரிக்க முடியாத வேதனையின் வெளிப்பாடு போல்த் தெரிந்தாலும் தமது விதியை நினைத்து ஏங்கும் ஈழத் தமிழ் மக்களின் வேதனையின் பிரதிபலிப்பாகவே இதனைக் காண முடிகின்றது. ஆனால், பேரழிவுகளைச் சந்தித்த பின்னரும் குருநகர் மக்கள் மீண்டும் தமது மண்ணில் தலைநிமிர்ந்து நிற்பதைக் காணும்போது காலம் என்பது கறங்குபோல் சுழன்று மேலது கீழாய், கீழது மேலாய் மாறிடும் என்ற உலகத்தியற்கையை நம்பிக்கையோடு நினைத்துக்கொள்ளவே முடிகிறது.

முடிவாக வரலாற்றில் மறக்கப்பட முடியாத சம்பவங்களை ஆவணப்படுத்தும் வகையில் குறுங்காவிய வடிவில் தொகுத்தளித்த கலையார்வனின் முயற்சி பாராட்டப்பட வேண்டியது. அவரது இலக்கிய முயற்சி மென்மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் கலாநிதி ம.இரகுநாதன்**
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாசிப்புக் குறிப்பு

'கலையார்வன்'!

மிகப் பொருத்தமான புனைபெயர்! காரணம் இவர்,

மனிதனில் மனிதம் மலரத் தூண்டும் அறிவியல் கலைகளை வளர்ப்பதில் ஆர்வன்!

தான் பிறந்த மண்ணின் புகழையும் பெருமையையும் உலகறியச் செய்யவேண்டும் என்பதில் ஆர்வன்!

துணிந்து எடுத்த நல்ல விடயங்களை எத்தடை வரினும் முடித்து மகிழ்வதில் ஆர்வன்!

குருநகர் மண்ணின் வளர்ச்சிக்கு உழைத்தவர்களின் பணியின் பதிவுகளை நிரைப்படுத்தி ஆவணப் படுத்துவதில் ஆர்வன்!

மண்ணின் மக்கள் அனைவரும் கல்வியிலும் கலைகளிலும் சிறந்து வளர்ந்து உயர்ந்திட பல்துறைப் பணிகளை முன்னெடுப்பதில் ஆர்வன்!

தனது தாய் மண்ணின் வரலாற்று அனுபவப் பதிவுகளை அடுத்த தலைமுறைக்குப் பகிர்ந்து பரிமாற்றம் செய்து புதுயுகம் படைப்பதில் ஆர்வன்!

தமிழில் ஆர்வன்! இலக்கியத்தில் ஆர்வன்! மொத்தத்தில் ஆயகலைகள் அனைத்திலும் ஆர்வன்!

இந்த ஆர்வத்தின் வெளிப்பாடுகளே கலையார்வன் கு.இராயப்பு அவர்களின் பெருமைசேர் கலை இலக்கியப் படைப்புகளுக்கு ஆத்ம பலமாகிறது. அவருக்கு அடுத்தடுத்துக் கிடைத்த மாவட்ட, மாகாண, தேசிய அதிஉயர் விருதுகள் இதற்குச் சான்று!

இவற்றைப் பெற்றதற்கான எந்தப் பெருமையும், சலசலப்பும், விளம்பரமும் இன்றி சாதாரண மனிதனாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பிலும் பண்பிலும் அமைதியிலும் அடக்கத்திலும் வாழ்வது வியப்புக்குரியது!

தான் பிறந்த குருநகர் மண்ணின்மேல் கொண்ட பேரன்பாலும், அதன் வளர்ச்சியில் கொண்ட தணியாத தாகத்தாலும் இடாம்பீகமான வெளிநாட்டு வாழ்வைத் துறந்து தாய்மண்ணின் வளர்ச்சிக்காய் பல்துறைப் பணிகளில் துடிப்புடன் ஈடுபட்டு வருவது எல்லோராலும் இயலாத ஒன்று.

அரிய பொக்கிஷங்களான பல்துறைசார் நூல்களை வெளிட்ட கலையார்வன், குருநகர் மக்களின் குருதி தோய்ந்த குரூரக் கொலை நிகழ்வுகளான மண்டைதீவுமுனைக் கடல், முகத்துவாரக் கடல், பத்திரிசியார் கல்லூரி, யாழ். போதனா வைத்தியசாலை, அராலிக் கடல் போன்றவற்றில் நிகழ்ந்த படுகொலைகளை வரலாற்றுப் பதிவாக ஆவணப்படுத்தும் வகையில் வெளியிடும் 'அறுவடை' என்னும் இந்நூல் படிப்போர் இதயங்களில் வேரூன்றிப் பதியும் என்பதில் ஐயமில்லை

அழகு தமிழ் எடுத்து!
இலகு நடை புகுத்தி!
இனிய வரி தொடுத்து!

கவிதை நயம் படைத்த இந்த வரலாற்றுப் பதிவுக்கு ஆதாரமாக அறுவடையானோர் விபரம், கலைச் சொற்களின் பொருள், நினைவூட்டல் படங்கள் போன்றவற்றையும் இணைத்துத் தனது கவியார்வத்தின் ஆற்றலை வரலாற்றுப் பதிவு படைப்பொன்றில் குவித்திருப்பது விந்தை!

இவரது கவித்திறனுக்குப் பின்வரும் கவிதை ஆதாரமாகிறது:

வெளிவர முடியாமல் முடங்கிய உண்மைகள்
வரலாறாய் பதிவாகும் வருங்கால சந்ததிக்கு
வெளிச்சம் உருவாக மறையும் இருள்போல
விளைவுகள் வெளியாக வாழ்வும் ஒளியாகும்
பழங்கால புராணங்கள் படிமங்கள் முதலாக
புடமிட்டுக் காட்டுவதும் மொழிவதும் இதுவாமே
செழிப்பான வாழ்வுக்காய் செங்குருதி சிந்தியோர்
சிதையாத உறுதியும் செழிப்புறும் ஒருநாள்!

கலையார்வனின் புதைந்து கிடக்கும் கரைதெரியா ஆர்வமும், ஆற்றலும், திறமையும், புதுமையும் இதுபோல் இன்னமும் வெளிப்பட வாழ்த்துகின்றேன்.

அன்புடன்

**கவித்தென்றல் செ. அ. அழகராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆக்கக் குறிப்பு

*என்னைக் காத்தனன் இறைவன்*
*ஏற்றபணி செய்வதற்கே!*

நினைவில் நிறைந்த நாட்கள் சிலவற்றில்
நெஞ்சைத் தொட்டு நீங்காத நாளுமுண்டு
பனுவலாய் நினைவிற் பதிவான நாள்தான்
பத்து ஈர்மூன்று இரண்டாயிரத்து பதின்மூன்று
'அறுவடை' நிகழ்ந்த இருபத்தி ஏழாவது
ஆண்டை நினைவுகூர் துயர்நாளு மந்நாள்
என்னைப் பொறுத்தவரை என்னது உணர்வுகள்
எல்லாமே முடங்கிய ஏக்கநாள் அந்நாள்!

நினைவு இழந்து ஆழ்நிலை மயக்கத்தில்
நானிருந்த மறக்க முடியாத தினம்
உணர்வு இழந்து சர்வமும் ஒடுங்கி
உயிர் ஊசலாடிய உறுதியற்ற தினம்
நினைவு பெற்றிட நல்வழி கிட்டிட
நினைத்துப் பலரும் வேண்டிய தினம்
வேண்டுதல் நிறைவேறி விழித்து எழுந்ததால்
வரைய முடிந்தது வரலாற்றுக் காவியத்தை!

காவியம் எழுதுவதில் குழந்தைக்கு நிகர்,
கலக்கம் காவியம் எழுதி முடியும்வரை.
இம்மண்ணில் எனது பதினேழாவது நூலை
இயற்றிய மகிழ்வை பகிர்கிறேன் உங்களுடன்.
காவியத்தின் பாடுபொருள் புதிதான ஒன்றல்ல,
கதையாய் கவிதையாய் வெளியான நிகழ்வுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையாய் கவியாக்க விருத்தத்தை எடுத்தேன்
சொல்வதற்கு இதுவே சிறந்ததாய் உணர்ந்தேன்.

நிகழ்ந்த முறைமையை நிதர்சனக் கவிதையாக்க
நானெடுத்த முயற்சிகள் நிச்சயம் பயனளிக்கும்
எளிமை நிறைந்த கவிதைகள் முற்றிலும்
எல்லோரும் புரிந்து கொண்டிடும் வகையில்
கற்றோரும் மற்றோரும் கருத்தாய்ப் படித்திடும்
காலத்தின் தேவையை கருத்தில் கொண்டதால்
பிழையென்று தெரிந்தும் யாப்பை மீறினேன்
பொறுப்பீ ரென்தவறை கவிப்புலன் மிக்கோரே!

கதையெனது கற்பனையல்ல கலங்கலற்ற உண்மை
காலத்தால் அழியாத கருங்கல் பொழிப்புக்கள்
இதயத்தை பிழிந்திடும் இழப்புகளின் அட்டவணை
இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தவர் இங்கில்லை
என்றொரு ஆதங்கம் எனைப்போல் பலருக்கு
என்பதால் எடுத்தேன் எவரதும் நிர்ப்பந்தமின்றி
குருநகர் மண்ணை உலுப்பிய அவலங்களை
குவலயம் அறிந்திட உரைத்திடலே என்நோக்கம்!

வாசித்துக் கவிதையைச் சுவாசித்து அவற்றின்
வழுக்களைய உயரிய வழிகாட்ட லுரைத்து
பாசமாய் கலங்கலற்ற அணிசெய் குறிப்பினை
பகிர்ந்திட்ட பேராசிரியர் கலாநிதி இரகுநாதன்,
வாசகனாய் காவியத்தின் விடயத்தைப் படித்து
வேண்டிய தகவலை விருப்புடன் வழங்கி
ஆசானாய் நெஞ்சை ஆக்கிரமித் திருக்கும்
அன்புக்கு உரித்தான நந்தினி சேவியர்,

சேயெனது கவிதையை சிரத்தையாய் படித்து
செம்மைப் படுத்திட செய்திடும் முறையை
தாயெனவே உணர்த்தி தன்னுடல் உபாதையிலும்
தமிழ்ப்பணி ஆற்றிய திருநாவுக்கரசு பண்டிதர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்பணி தமிழுக்கென சற்றேனும் மறுக்காது
சிரமத்தின் மத்தியிலும் சரிபார்த்து குறிப்பெழுதி
மெய்நோய் பாராமல் முகமன் கூறாமல்
மனமுவந்து ஆற்றிய கவிஞர் அழகராஜா,

இக்காவியம் உருவாக இருகரம் கொடுத்தும்
இடருறா நிலைகாண இனியவை உரைத்தும்
அக்கறை காட்டி ஆர்வத்தை உணர்வாக்கி
ஆதரவு தந்துதவிய அன்புக்கு உரியவர்கள்,
குறுகிய காலத்திலும் குறையின்றி நிறைவாக
கிரமமாய் அச்சாக்கி கைகளில் தந்தவருடன்
முறையாக நடந்த வரலாற்றைக் கூறியவர்க்கும்
விழிநீரால் நன்றியை மகிழ்வுடன் தெரிவிக்கிறேன்.

அன்புடன்,
**கலையார்வன்**
(கலாபூணம் கு.இராயப்பு)

kalayarvan@yahoo.com
Kalayarvan Rayappu@face book.com
077 724 9536



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வழிகாட்டிக் குறிப்பு


க. முகமன் ........... 01

காப்பு
அவையடக்கம்
இறை வேண்டல்
வினயம்
பாயிரம்

உ. விளைநிலம் ........... 05

ஊர் நயப்பு
மக்களும் மதமும்
வரலாற்றுப் பதிவு
முகப்பு
ஆரவாரம்
கரைவலை

௩. கதிர்கள் – 1 ........... 22

மேலாப்பாச்சி
முனைப்பு
வாலிபன்
முதியவர்
மணமகன்
பதில் மேலாப்பாச்சி
மருகன்
புதியவன்
அன்றைய புயல்
இணைதல்
இறங்குதுறை
புறப்பாடு
பாடு நோக்கி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலை உழுதிடல்
கடற்படைக் கலம்
மீன் வாடியில் ஒருநாள்
கடலில் ஒரு காட்சி
தொலைவில் ஒரு காட்சி
தெளிவற்ற காட்சி
சிறு படகில் கண்ட காட்சி
உருவான சந்தேகம்
நெருங்கியது சிறு படகு
பாலைதீவு விபத்து
அடையாளம் காணுதல்
வீதியில் உறவுகள்
உறுதிப்படுத்தல்
சனசமூக நிலையம்
உருகாத உள்ளமில்லை
சங்காரம்
சேகரிப்பு
இறுதிச் சடலம்
இறுதி ஊர்வலம்
பாரிய புதைகுழி
நினைவுகூரல்

ச. கதிர்கள் - 2 ........... 143

களமாற்றம்
முகத்துவாரக் கடல்
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ். வைத்தியசாலை
புகலிடம் தேடல்
அராலிக் கடல்
புதையுண்ட உறவுகள்
வாழ்வு ஒ ளியாகும்

ரு. பின்னிணைப்பு ........... 171

அறுவடையானவர்கள்
தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்கான விளக்கம்
மண்டைதீவு முனை அறுவடையின் அடையாளங்கள்
நினைவூட்டல் படங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடை

## (குறுங்காவியம்)




**க. மூகமன்**

### காப்பு

பேரோடு பேசிடும் மொழியாகி பன்நாடுகளில் செழிப்புற வளர்ந்து
சீரோடு இணையத்தின் இணைப்பாகி தரணியில் சிறப்புற வலம்வந்து
ஊராரும் செம்மொழி இதுவென்று உரைக்கும் தமிழாற் காதையை
சீராரும் பாவால் உரைக்க தேவதோத் திரங்கள் செய்வோம்.

01

### அவையடக்கம்

அணை கட்டும் பணிதன்னில்
அயராத இராமரின் நிலைகண்டு
துணை செய்திட மண்மேலே
தேய்த்தே தன்னுடல் உதறிவிட்ட
இணையிலாச் சின்னஅணில் செயலொப்ப
இசையுமொரு காவியம் தீட்டவென
நனையுமொரு ஆசையினால் நான்துணிந்த
நாடகமே இந்தச் செயலன்றோ!

02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறை வேண்டல்

வையகந் தனையும் வாழ்கின்ற மனிதனையும்
வாழ்வுக்குத் துணையான வரிசைபெறு விலங்கினையும்
பெய்யும் மழையையும் பெரும்பகல் ஒளியையும்
பயிர் கனிபெட்புறு பெற்றிடும் வளத்தையும்
செய்யுமெத் தொழிலையும் சிறப்புறு வழியையும்
செம்மையாய்ப் படைத்து சீர்பெறச் செய்துமே
மெய்ம்மையா யணைத்து மேதினியில் காப்பவனே
மேவிடும் களங்கம் நீங்கிட அருள்தேவா!

03

சீரோங்கு நெய்தலாய் சிறந்திட்ட குருநகரை
சிதைத்த அவலங்கள் சிலவற்றை யெடுத்து
நேரோங்கு காவியமாய் நிலைபெற ஆக்கியே
நேமிதனில் பலரும் நினைவினிற் கொள்வதற்கு
பாரோங்கு போதனையால் பண்பட்ட மனிதராய்
பரிசுத்த மாக்கிய இயேசுவை நினைத்து
நீரோங்க விழிகள் நெக்குருக நின்றுநான்
நினைவுகளாற் பாமாலை நெஞ்சாரத் தொடுக்கிறேன்!

04

பிறப்பு உண்டெனில் இறப்பு நிச்சயம்
பிறப்பின் இயற்கை இறப்பினில் இருந்ததா
துறந்த உயிர்கட்கு தோளாக நின்றுடன்
தடுத்ததா இயற்கை தன்பலங் கொண்டதை
இறந்த மாந்தர்கள் இரத்தம் சிந்திட
இயற்கை அளித்ததா ஈனத்தன அனுமதி
வறண்ட நெஞ்சமும் வன்மமும் வேண்டாம்
வணங்குதல் செய்கிறேன் வரமருள் இறைவா!

02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவிய இடர்களும் மண்டியிட் டழியவே
மனங்கொண்ட வாழ்வினை மானிடம் அடைந்திட
அரும்பெரும் தியாகத்தால் அடைந்த துன்பங்கள்
ஆதவன்முன பனியாக அகன்று வழிகாட்டிட
உருவாக்க முனைந்த உயரிய முயற்சிகள்
உருமாற்ற மில்லாமல் உரிமம் பெற்றிட
கருத்தாய்க் காத்தருள் கர்த்தாவே என்றுமை
கரங்கூப்பித் தொழுகிறேன் கடைக்கண் பாருமையா!

06

## வினயம்

இறந்தகால நிகழ்கால வரலாற்றுத் தடங்களை
இயன்றவரை அறியாதார் எதிர்காலம் சூனியமே!
அறிந்திருந்தும் தகவலை ஆவண மாக்காதோர்
அவனியில் பிறந்ததால் ஆனபயன் ஏதுமுண்டோ?

07

உள்ளபடி உண்மையை உலகறியச் செய்வதில்
எள்ளவும் பிசகாமல் ஏற்றபணி செய்துள்ளேன்
கள்ளமில்லா நெஞ்சத்தால் கவிதை யாக்குகையில்
அள்ளிவரும் சங்கடங்கள் அகத்தேற்பீர் பெரியோரே!

08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாயிரம்

நெய்தல் நிலஎழில் நிலைதடுக்கும்
நீலக் கடலலை மோதிவரும்
கையிற் கம்பு வலைகாணும்
காலத்தை வெல்லும் உழைப்பிருக்கும்
நையா மனத்தால் தொழுதேத்தும்
நாளும் கத்தோலிக் கராய்வாழும்
பொய்யா மாந்தர்கள் புகழோங்கும்
புறநகர் துயிலும் சிற்றூராம்.

09

அன்னியர் ஆட்சிக்கு முன்னர்
அணிசெய்த பெயரோ 'கரைநிலம்'
மண்ணிடை காரணப் பெயராய்
மலர்ந்தது 'குருநிலம்', 'கரையூர்'
பின்னையோர் ஆளுகை நிலையான
பெயராய்த் தந்தது 'குருநகர்'
கண்பட்டு புண்பட்டு உலகே
கலங்கிய நிகழ்வையுங் கண்டவூர்

10

விளைவின் பயனே 'அறுவடை'யாம்
விளைந்தது வரலாறு எதிர்மறையாய்
பிழைக்கச் சென்றவர் பிணமானார்
பேச்சுகளேதுவும் இலையானார்
உழைக்கும் மக்களின் உயிரெடுத்தார்
உண்மையை மறைத்தே பொய்யுரைத்தார்
நிலைக்கும் துயரால் குருநகரார்
நெஞ்சில் தீட்டிய காவியமாம்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உ. விளைநிலம்

## ஊர் நயப்பு

காலடியில் கட்டிய அணையில் கடலலை மோதலின் சிலிர்ப்பு
காலையில் எழுகின்ற கதிரோனைக் கண்குளிரக் காண்பதில் களிப்பு
மாலையில் மறையும் மறையோன் மனதைத் தொட்டிடும் காட்சி
சோலைக ளிங்கில்லை என்றாலும் சோர்விலா அழகின் மாட்சி

12

'**சிறுத்தீவின்**' முனைகடந்து ஓடிடும் சுழன்ற கடல்நீர்க் கோலம்
சீறுகின்ற காற்றில் சிதறுகின்ற சிறுதுளிகளின் வர்ணத்து ஜாலம்
விரைகின்ற இயந்திரப் படகுகளின் மிகையான ஊர்வலம் காணும்
இரைதேடும் பறவைகள் ஒன்றாய் இணைவதால் இன்பமும் தோன்றும்

13

கடலின் நடுவினை ஊடறுக்கும் கருங்கோடாய் பண்ணை தாம்போதி
படைகொண்ட ரதங்கள் போலவே பல்வேறு வாகனங்கள் பயணிக்கும்
இடைநின்று பார்த்தால் இன்பந்தரும் இளமான பச்சையில் தீவுக்கூட்டம்
தடையற்ற நிலையில் தெரியும் தெளிவான அலைகளின் நாட்டியம்

14

கிழக்கின் அடிவானில் குளித்து குளிர்ந்து முகில்கள் மேலெழும்
நிழலாக அழகூட்டி கடலுக்கு நிறமூட்டி மெருகூட்டும் அவைகள்
இழக்கும் நீலத்தை சிவப்பாக்கி இருள்தர மேற்குக் கரையில்
துலங்கும் தெற்கின் நீலநிறம் தெரியாது மறைப்பால் வடக்கில்

15

தெற்கில் வங்காள விரிகுடா தெற்றெனத் தீவுகள் தொடராய்
பற்றாய்க் குறைகள் தீர்க்கும் பவளங்கள் நிறைந்த கடலன்னை
சீற்றங்கள் தாக்குவ தில்லை சேர்ந்த இயற்கையின் கொடையது
உற்றிடும் இடர்களை களைந்திட உறுதுணை யாய்வீசும் '**சோளகம்**'

16

வடக்கே அணிவகுத்து துரிதமாய் விரைகின்ற மனிதர் கூட்டம்
இடக்கு முடக்கின்றி நிரையாய் இரைந்தபடி நகரும் வாகனங்கள்
கடலில் ஒடுங்கியே ஆழமாய் ஒளிதரும் முகத்துவாரக் கிழக்கு
படகுகள் பயணிக்க பாதையாய் பண்டைய வெட்டாறு ஆழமாய்

17

துள்ளிப் பாய்ந்து நீந்துகிற துணிவான இளையோர் '**ஜெற்றி**'யில்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று உரைத்திடா உள்ளமோ ஊரினில்
கொள்ளிட முடியாத இடராயினும் கொதிப்பின்றி சுமப்பர் பூமியாய்
வெள்ளிடை மலையென உண்மை கூறுவோர் நிறைந்த மண்ணிது

18

பாவலர் புகழும் வரலாற்றுப் பாடலாய் தூபிமாட மமைந்து
காவலரென மக்கள் மனம்நிறை தூயராம் யாகப்பர் ஆலயம்
ஆவலாய்த் தரிசிக்கும் புதுமை அன்னையின் பழமை ஆலயம்
தேவையை நிறைத்திடும் தீவனமாய் திகழும் வடகடல் தொழிலகம்

19

'**நாவாய்**' தரித்துத் செல்ல நிலையான துறைமுகம் '**அலுப்பாந்தி**'
தாவிவந்த போர்த்துக்கல் நாட்டவர் தரையேறி வந்ததும் இத்துறையே
'**நாவாய்**' ஒலியுடன் கொழும்பு நகருக்கு பயணிக்க '**வத்தை**'
காவிய பொதியுடன் பெருமளவில் கடற்கலம் ஓடியதும் இத்துறையே

20

கலையோடு கல்வியை கற்றோர் கணிசமாய் வாழ்கின் றனரிங்கே
அலையோடு மோதிடும் தொழிலினை ஆவலாய் ஏற்பாரு மொருங்கே
தொழிலென வந்தோரை வரவேற்று தயங்காது ஏற்றிடும் குணமிங்கே
செழிப்புறு நிலையான தொழிலுக்கு செப்பிடும் வரலாறும் உண்டிங்கே

21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைவலை பாச்சல் வலையுடன் கொண்டோடி வலையெனப் பலவும்
நிரையாக ஆரம்பத் தொழிலென நிமிர்ந்தன கூட்டுறவு முறையில்
விரைவாய்ப் பின்நாளில் வளமான வாழ்வின் மாற்றத்தை உள்வாங்கி
திரையற்று துலங்கின தொழில்கள் தரணியே வியந்து உரைத்திட

22

கூட்டுறவு முறைமாறப் புதிதாய் கலப்பு முறையுள் புகுந்ததால்
நாட்டமாய் துணிந்து முதலிட்டு நிறைவான '**சம்மாட்டி**' ஆயினர்
வீட்டுக்கு வீடென ஓடங்கள் விளங்கிட சிறுதொழிலை நாடியே
வீட்டுத் தொழிலாகக் கடலுணவில் மீதத்தைப் பதமாக்கி ஏற்றினர்

23

காணலாம் ஆங்காங்கு சேவையாய் கடலுணவு ஏற்றுமதி நிலையங்கள்
பேணிட மீன்களை உலரூட்டு பராமரிக்க கருவாட்டுக் கொட்டில்கள்
கண்கொளா காட்சியாய் கடலெங்கும் கனரக சிறுரக படகுகள்
எண்ணிக்கை தெரியாத வகையில் ஏற்றம் தருகின்ற தோணிகள்

24

கப்பலில் பொருள்கள் வருவதைக் காணலாம் மாரியில் வழமைபோல்
அப்பொதி ஏற்றிய தோணிகள் அணியாய் வருந்தினம் தேர்போல்
செப்பிட முடியாமல் சிறப்புற்று தெரிவதால் அகத்திலே குளிர்ச்சி
ஒப்பரும் நிலையில் எப்போதும் ஓய்ந்திடாது 'அலுப்பாந்தி' துறைமுகம்

25

தன்பணி முடிந்ததும் கப்பல் தன்வழி திரும்பிச் சென்றிடும்
பின்னாலே பயணித்த மீனினம் பதுங்கி அங்கேயே தங்கிடும்
பின்னரான மாதங்களில் அவ்வினம் பலநூறு மடங்காக பெருகிடும்
கண்ணி வைத்தாற் போல்பிடிபட கவலையற்ற சிரிப்பொலி கேட்டிடும்

26

விழாக்களில் விளங்கும் சிறப்பு மகிழ்வூட்ட போட்டிகள் நிலவும்
பழையவை குப்பையாய் மாறிட புதியவை நிரப்பிக் கொள்ளும்
சுளையான பணத்தை சேமிக்காது செலவிட ஆர்வம் பிறக்கும்
இளைஞர்க்கு திருவிழா சிறக்கும் எப்போதும் தேநீரகப் பக்கம்

27

கூட்டுக் குடும்ப முறையில் குதூகலித்து மகிழும் உயர்குணம்
கெட்டியாய் உறவாடி கவலை கண்டதும் துடித்திடும் மென்மனம்
நீட்டிய கரத்துடன் துணையென நாளும் உதவிடும் பொற்குணம்
கிட்டியது கடுகெனினும் கச்சிதமாய் களிப்பூட்டி மகிழும் நற்குணம்

28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவோரை வாழவைத்து வளங்காண வழிகாட்டும் கருணை இதயம்
சிரிப்பின் போர்வையால் துயரச் சூழலை மறைக்கும் சாதுரியம்
வாரத்தில் இரண்டு நாட்கள் விழாவினை கொண்டாடும் பக்குவம்
தூர்ந்த சிறப்புகள் ஏராளம் திகைப்பான நிகழ்வுகள் தாராளம் 29

நெருங்கிய வதிவிடச் சூழலால் நெருடலில் குடும்ப குதூகலம்
விருப்புடன் விடுமுறை இதனால் முனைப்பு பெற்றிடக் கோலாகலம்
'மருதமடு' 'பாலைதீவு' 'கச்சைதீவு' 'புல்லாவெளி' விடுமுறை இடங்கள்
வருகின்ற செலவை நினைத்து மனத்தில் இருக்காது தயக்கம் 30

சலிப்பின்றி கலையை வளர்த்ததில் செழிப்பான வரலாறு இங்குண்டு
பல்வகை தென்மோடிக் கூத்துக்கள் புகழின் உச்சியைத் தொட்டதுண்டு
நிலையான வரலாறாய் பலநூறு நாடகங்கள் மேடையேறக் கண்டதுண்டு
நூல்கள் சஞ்சிகைகள் எனச்சில நூறெனை வெளியீடாய் வந்ததுண்டு. 31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களும் மதமும்

கல்வெட்டு நாணயங்கள் கூறுமந்த திராவிட
தொல்லியல் பண்பாட்டின் தூணாக நின்றவர்கள்
துலங்கிய தமிழரசை தமிழரின் தேசியத்தை
குலையாது காத்தவர் 'குருகுல' மக்களே

32

பதின்மூன்றாம் நூற்றாண்டில் பிரவேசித்து ஆட்சியை
பாதுகாக்க முயன்ற போர்த்திறன் வீரர்கள்
துதிபாடா குருகுலத் தலைவன் 'வர்ணகுலத்தான்'
யுத்தங்கள் நடத்தி ஜெயங்கொண்ட தளபதி

33

கலப்புகள் மாறுதல்கள் கொண்டிராத பண்பாட்டுக்
குழுவினராய் காலத்தின் குறிப்பறிந்து வாழ்ந்தவர்
குழுவினர் குழுமங்களாய் 'குருகுலம்' என்றறிவித்து
கோலோச்சி வசித்தவூர் 'கரையூர்' என்பதாம்

34

திடம்மிகு தோளையும் தளர்வில்லா உடலையும்
கொடுத்திடும் குணத்தையும் கொடுத்தது நெய்தல்மண்
'பட்டங்கட்டி' குருகுலத்தை பிரதிபலிக்கும் தலையாரி
கட்டளைக்குப் பணியாதார் குருகுலத்தா ரிலில்லை

35

காலமெலாம் தரைப்படை கடற்படை பணியுடன்
கலங்களைச் செலுத்துவது கைவந்த தொழிலாகும்
இலங்கையில் நுழைந்தனர் இந்தியாவே பூர்வீகம்
புலத்தின் இந்துமதம் பிறப்பால் சொந்தமதம்

36

கத்தோலிக்க சமயம் கரையோரப் பகுதியில்
வித்திட்டது ஆயிரத்தி ஐநூற்றி எண்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தொடராய் பதினாறு இருபத்தி நாலினில்
உத்தமன் இயேசுவுக்கு உரியவராய் மாறினர் 37

கோட்டை யுள்ளிருந்த கோயிலாம் வெற்றிமாதா
ஆடம்பரமாய் நிகழ்ந்தது அரசகுமாரருடன் திருமுழுக்கு
'பட்டங்கட்டி' எண்மருடன் நானூற்றுவர் பெற்றதும்
உடையாத உறுதியில் உருவாகின ஓராலயம் 38

செவ்வனே ஆன்மீகம் சார்ந்த திரட்சியில்
செவ்வையாய் மிளிர்வது 'சந்தியோகு' ஆலயம்
பவ்வியமாய் மனிதவுயர் பண்புதனைக் கொண்டு
திவ்வியன் இயேசுவுக்கு சாட்சிய மாயாயினர் 39

பற்றுறுதி விசுவாசம் பிறரன்பு கொண்டுமே
முற்றிய எதிர்ப்பிலும் தம்முகங் கொடுப்பவர்
சீற்றம் கொள்ளினும் சிறுநேர நீட்சிதான்
ஏற்றதோர் நிலைப்பாடு எடுத்துக் காட்டாகும் 40

பிரிவினைக் குருக்களின் பொருந்தாத குறிக்கோள்
வரம்பை மீறியதால் முனைந்தது ஆக்கிரமிப்பில்
'பெரிய கோயிலை' கபளீகரம் செயவுள்ள
குருக்களின் சதித்திட்டம் காதுக்கு எட்டியது 41

ஆயிரத்து எண்ணூற்றி ஐம்பத்தி ரெண்டினில்
போயினர் காவலுக்கு பலரும் இணைந்ததாய்
கோயிலை சுற்றி கண்ணயராது காத்ததால்
முயற்சியைத் தடுத்தனர் முன்னேற விடாமல் 42

கடமையாய்க் காத்துநின்ற கரையூர் மக்கள்
முடிந்தவரை முயன்று முன்னேற்றம் கண்டனர்
விடிந்தது அவர்க்கு அவ்வாண்டு வருடப்பிறப்பு
திட்டத்தை முறியடித்த திறன்காவல் பணியுடன். 43



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்று பதிவு

தமிழர் சிங்களர் அடையாளமாய்
தனித்தனி அரசுகள் நெடுநாளாய்
தமதாட்சியை அன்னியர் தொடங்குமுன்
திறனுடன் நிகழ்ந்தது நல்லாட்சி
தம்மினக் காட்டிக் கொடுப்பால்
தன்னாட்சி இழந்தது தமிழினம்
இம்மியும் இல்லையொரு நாடென்ற
இழிவினில் புகுந்தது எம்மினம்

44

பெருநிலப் பரப்பாய் இணைத்தவர்
பிரித்திட மறந்தனர் பின்நாளில்
பரிந்துரை செய்வதற்குத் துணிவற்று
பெற்றனர் சுதந்திரம் ஒன்றிப்பாய்
வரலாற்றுத் தவறொன்று நிகழ்ந்ததே
வழியானது வர்க்கப் பிரச்சினைக்கு
அரசுடன் ஒன்றித்து இணைந்திடும்
ஆக்க முயற்சிகள் பயனற்றன

45

ஒற்றுமை வாழ்க்கை ஒவ்வாமல்
ஒப்பந்தம் சாத்வீகப் போராட்டம்
ஆற்றாமையில் சத்தியாக் கிரகங்கள்
அனைத்தும் வீணான நீராகின
ஊற்றானது தமிழர் தரப்பினில்
உரிமைப் போருக்கான உணர்வு
பொற்காலம் பாழாகி விடுமென
பகுத்தறிய மறந்தனர் பெரியவர்

46



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலை தரப்படுத்தல் முறையின்
பாதிப்பு நீறுபூத்த நெருப்பானது
உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில்
உண்டான படுகொலம் கால்கோளானது
கொலையானோர் நினைவுகள் தீச்சுடராகி
கொழுந்து விட்டெரிந்தது இனவுணர்வு
தலைமை தொடக்கிய எழுச்சியை
தனயன்கள் எடுத்தனர் தம்கையில்
47

சாத்வீகப் போராட்ட பின்னடைவை
சீர்செய்ய முனைந்தனர் இளையோர்கள்
வித்தாக ஊன்றிவிட்ட விரோதத்தால்
வரலாறாய் ஆயுதப் போராட்டம்
சத்தியத்தின் வழியென்று மக்களும்
சார்ந்து நின்றூக்கம் கொடுத்தனர்
கொத்தான வரவேற்பால் முன்னின்றோர்
காரியத்தை சாதிப்பதில் கண்ணாயினர்
48

தாக்குதல் அரசினர் எதிர்பாராமல்
தகர்ந்தன பற்பல நிலைகள்
மக்களும் இழப்பைச் சந்திக்க
மேலும் வைராக்கியம் உரமானது
அக்கறை கொண்டதால் அரசாங்கம்
அடியோடு கிள்ளிட முனைந்தது
தக்கதெனப் பயங்கர வாதச்சட்டம்
தடுப்பின்றி நிறைவேறிக் கொண்டது
49

சந்தேகமான இளையோர் கைதாகி
சுவடின்றி மறைந்தனர் கண்டபடி
வந்துறையும் எதிர்வினை தொடராக
வன்முறை மண்ணில் சரளமாயின
சந்திகளில் சடலங்கள் முறைதொடர
துரோகத்தின் தண்டனை தொடங்கின
முந்தியவர் தந்தனர் வெற்றிக்குரல்
முழுவதும் சுமந்தனர் துயர்வாழ்வை
50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியது எழுபத்தேழில் வன்செயல்
திக்குத் திசையின்றித் தமிழர்கள்
அடக்காது விடுத்து வழங்கிய
ஆசியால் விபரீதம் வானளவியது
அடாவடியாய் 'போரெனில் போரெ'ன்ற
அறிவிப்பு அக்கினியாய் எழுந்தது
காடையர் பரப்பிய வதந்தியால்
காற்றாய் பரவியது வன்செயல்

51

நெருப்பான அமைச்சரின் வகுப்புவாதம்
நெருப்பாகி அழித்தது அனைத்தையும்
இரத்தத்தின் வாடையோ வன்செயல்
ஏற்பட்ட இடமெலாம் வீசியது
சரமாரி கொலைகள் குழந்தைகள்
சிறுவர் முதியவர் பலரும்
வரலாற்றில் கறையாக பதிவாகிட
முழுலகும் வடித்தது கண்ணீர்

52

காட்டிக் கொடுப்பு களையெடுப்பு
குண்டடிப்பு வாகனத் தகர்ப்பு
ஈடாட்டம் கண்டது யாழ்ப்பாணம்
இடையிடை வன்செயல் அரங்கேற்றம்
கூட்டமாய் உயிரிழக்கும் கொடூரம்
கொத்தாக பொருளிழக்கும் பேரவலம்
நாட்டிலே நாற்புறமும் கொந்தளிப்பு
நாளைய விடிவிற்கான ஏக்கமுடன்.

53



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகப்பு

வெற்றியாய் இரண்டு வாரங்கள் தூசியையள்ளி
விசிறியவாறு சுழன்று வீசியது 'சோளகம்'
சற்றும் அயராது சுருட்டிப் புரட்டி
விரட்டி மக்களை வருந்திடச் செய்தது
காற்றின் கோலோச்சம் குவிந்த குதறலுக்கு
நேராக எதிர்த்து நிற்பதே சுமையானது
ஆற்றாமை முழுதான ஆக்கிரமிப் பாகிவிட
அகப்பட்டு உறங்கிக் கிடந்தது குருநகர் 54

சோளகக் காற்றின் அதீத உதையினால்
சுழன்று புரளும் அலைகளின் இரைச்சல்
நாள்தோறும் தங்களது நிலைகளின் இயலாமையை
நினைவூட்டி நிற்கும் மரங்களின் புலம்பல்
தள்ளி உதைத்து புரட்டும் வெறித்தன
தீண்டலால் எழுந்த பல்நிலை ஓலங்கள்
துள்ளலால் இணைந் தெழுந்த ஓசையும்
சினத்தை கொடுத்தது மக்கள னைவர்க்கும் 55

மண்ணில் மக்களின் மகிழ்ச்சி மழுங்கிட
கடலிலே தொழிலாளர் கலங்கினர் கலங்களில்
திண்ணிய காற்றின் சீறலை எதிர்கொண்டு
தணிதல் ஒன்றுக்காய் சகலரும் வேண்டினர்
எண்ணாத வகையில் இயங்கிய தொழில்கள்
எல்லாமே முடங்கிட ஈடாட்டம் கண்டனர்
கண்ணெனத் துலங்கும் குறைவற்ற செழிப்பின்
கலகலப்பு யாவுமே காலிழக்க நின்றனர் 56



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையி லுண்டான சகலரின் வேண்டுதல்
திடீரென பலிக்குமென சற்றுமெதிர் பார்க்காதது
ஆவேசமாய் வீசிய அக்காற்று தனையடக்கி
அமைதியின் காவலனாய் அடையாளம் தந்தது
தூவிய வளிமேகம் சிந்தியபெரு மழையை
தொடர்ந்து நிகழ்ந்தது சடுதியான மாற்றம்
கூவிய பெருங்காற்றின் கூக்குரல் அடங்கியதால்
குதூகலத்தில் சிரித்தது களங்கமற்று வான்வெளி 57

ஆண்டு ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எண்பத்தாறு
ஆனிபத்து உறக்கம் இழந்த நள்ளிரவு
வெண்மதியின் களங்கத்தை வான்மழை கழுவியும்
வெய்யோன் ஒளியை மிஞ்சிடக் காணவில்லை
வெண்மை இல்லாத மிளிரொளி தோன்றினும்
வெளிரான மஞ்சளை விதைத்தது அந்நேரம்
தண்ணொளிக் கதிர்களாய் சிறப்பூட்ட முடிந்தவரை
தன்னொளியை மாற்றின்றித் தந்தது தரணிக்கு 58

நிரையாய்த் தெரிந்த நடுகைக் கம்பங்களில்
நித்திரை கொள்ளாது நிதமொளிரும் மின்னொளி
வரையின்றி பூமியை விரைந்து வந்தடையும்
வெண்ணிலா ஒளியுடன் முரணற்ற இணைப்பாக
புரையோடிய மறுவின்றி பகையின்றி நெய்தலை
பகலாக ஒளியூட்டி பொலிவூட்டி நின்றன
காற்று அயர்ந்த காரணத்தால் ஒளியைக்
கறையின்றிப் பெற்றது கரைநிலப் பகுதிகள் 59

காற்றின் இரைச்சலை கணக்கின்றி உள்வாங்கி
குறுகி மரத்துக் கிடந்த செவிகளுக்கும்
சீற்றத்துக்கு முகங்காட்டி சொற்ப மென்றாலும்
சளையாது எதிர்த்துச் சலித்த உடலுக்கும்
முற்றிலும் சுகந்தம் விளைந்த மகிழ்வில்
மண்ணின் மக்கள் அனைவரு மிப்போது
உற்றதம் துயரெலாம் ஒழிந்த நிலையில்
உறக்கத்தை அணைத்தனர் ஊடறுப்பெ துவுமின்றி 60



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவில் நாய்களின் 'ஊளை' நீண்டதாய்
தொடர்பு மாறாமல் தத்தமது வேகத்தில்
விரிவடைந்து ஒலித்து முகிழ்ந்த ஓசையால்
விளங்கிய அமைதி விடைபெறத் துடித்தது
பொருத்தமற்று உறக்கம் பிறழ்ந்த காரணத்தால்
பலரும் எழுந்து படுக்கையில் இருந்தனர்
துர்க்குறி என்றொரு துர்ரெண்ணம் உள்ளத்தை
துளைத்து வருத்தியது துலங்கிய ஊளை.

61



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரவாரம்

'கடற்கரை' வீதியுடன் 'மவுண்காமல்' வீதி
குறுக்கே சந்திக்கும் குதூகல முச்சந்தி
ஊடறுத்து வானோக்கி உயரமாய்க் கிடந்த
'மேகுரி' மின்குமிழில் வெண்மை ஒளிக்கதிர்
கொடையெனக் கிடைத்த குளிர்நில வினொளிக்
கதிருடன் கலந்து குறையாமல் மெருகூட்டியது
கடுமிருளை முழுமையாய் களைந்த ஒளியானது
கண்ணுக்கு விருந்தாகி குளிர்மையைத் தந்தது
62

முன்னிரவு கொட்டிய மிகையான மழைநீர்
மண்ணில் 'ஈசல்'கள் வளர்ந்திடச் செய்தது
மின்குமிழை நாடியே வலம்வந்த 'ஈசல்'கள்
மழைத் தூவானமாய் வட்டமிட்டுப் பறந்தன
தன்நிலை மறந்து மின்குமிழைத் தொட்டுத்
தழுவிட முயன்று தோல்வியைத் தழுவின
ஒன்றன்பின் ஒன்றாய் மடிந்து வீழ்ந்தன
ஒத்தனவாய் போர்க்கள வீரர்கள் போலவே
63

பார்ப்பவர் இரங்கி பரிவு கொள்ளினும்
பரவிக் கிடப்பதால் பிறந்தது அருவருப்பு
இரவிலும் பகலிலும் எதிர்ப்பே காட்டாது
இருக்கும் மதகுகள் இருபுறமும் சந்தியில்
உரையாடு பவர்கள் ஓய்வின்றி அமர்ந்தும்
ஓலமின்றி சுமந்து உதவிடும் தாங்கிகள்
பொருளீட்டும் நோக்கம் பெரிது மின்றியே
பொழுதைப் போக்கிடும் பலரது தங்கிடம்
64



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாய் அயர்ந்த நிசப்தத்தி லுருவான
நிலவரம் தொழிலாளர் நெஞ்சை மகிழ்வித்தது
நின்றுபோன தொழில்கள் நேர்பெற சீர்செய்து
நகர்த்திடும் ஆரவாரம் நிகழ்ந்தது ஒருமித்து
என்றுமே இல்லாத எடுப்பான வரவேற்பை
ஏற்றது இன்றைய இணையற்ற நள்ளிரவு
முன்னைய நாட்களின் மிகையான கஸ்ரங்கள்
முடங்கிய நிலையில் மனதார குதூகலம் 65

முன்னிரவு பரபரப்பு முளைவிட விழித்தது
மவுண்காமல் சந்தியில் 'யோகா ரீறாம்'
மின்னொளி கண்டதும் மறுகணம் திறந்தது
மறுபுறம் இருக்கும் 'லக்ஸ்மன் ரீறாம்'
ஆண்களின் நடமாட்டம் ஆறெனப் பெருகியது
ஆவலாய் சந்திக்கு அலையாய் வருவோரால்
அன்றாடம் தேநீர் அருந்தகம் திறப்பது
அதிகமாய் பயனுள்ள மருந்ததாய் இருந்தது 66

விறுவிறு எனப்பல வீச்சுக்கள் ஆங்காங்கே
விருப்பி லமைந்த முனைப்புகள் பலவாறாய்
சுறுசுறு என்றே செல்பவ ரெல்லாம்
செழிப்பாய்க் கடலை செப்பனிடும் தொழிலாளர்
மாறிவரும் கடற்றொழில் முறைகளுக்கு என்றுமே
முள்ளந் தண்டாக முயன்று உழைப்பவர்
வீறுகொண்ட காற்றின்று விடுபடக் கண்டதால்
வீராப்புடன் உழைத்திட விரைந்து புறப்பட்டவர் 67

மனதில் தொழில்சார் முனைப்பின் கற்பனைகள்
மாற்றம் தேடிய விடியலின் நிலையில்
உணர்வில் சிலநாள் உழைப்பை இழந்து
உலையும் மெலிந்ததால் உள்ளத்தில் வலிகள்
நினைவில் வருவாய் நிறைவாய்க் கிடைத்திட
நித்தியன் இயேசுவிடம் நிதர்சன வேண்டுதல்
எனமன ஊமையொலி ஏற்றமாய் உலாவர
எங்கும் தொழிலாளரின் எழுச்சிமிகு நடமாட்டம் 68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பம் சுட்டுத்தினம் அருந்தகம் கொடுத்தாலே
அடுப்பு எரியும் அன்றைய உணவுக்காய்
எப்படியும் கொடுக்கும் எண்ணமாய் முன்சாமம்
எழுந்தும் சலிக்காது இயங்கும் வறியவர்
அப்பத்தை சுளகில் அடுக்கி யெடுத்து
அருந்தகம் விரைவர் அளித்திடும் நோக்கில்
தப்பாது மூன்று தடவைகள் கொடுத்திட
தடுமாற நடந்து திரிந்தனர் ஆங்காங்கு

69

விருந்தென உண்டிட்ட விடிகாலை அப்பம்
வயிற்றுப் பசியை விரைந்து போக்கிட
அருந்திய தேநீரால் ஆர்ப்பரித்த தாகமும்
அடங்கிச் சோம்பல் ஐயமின்றி முறிந்தெழ
உரமேறிய சரீரம் உற்சாகத்தால் மென்மேலும்
உழுதிடும் நிலைக்கு உறுதியைப் பெற்றிட
சிரத்தை நிமிர்த்தி சென்றிடும் தொழிலாளரால்
சுற்றாடல் மிகுந்த சிறப்பைப் பெற்றது

70

அதிகாலை மும்முறை அடித்த மணிகேட்டு
ஆயத்த மாயினர் '**சிறகுவலை**'த் தொழிலாளர்
மதகுகளி லிருந்து வெட்டியாய்க் கழிப்போர்
மட்டுமே தங்கிவிட மற்றையோர் புறப்பட்டனர்
புதிதான வரவாய் '**கரைவலை**'த் தொழிலாளருடன்
பலரும் இணைந்திட பெருகியது நடமாட்டம்
அதிகரிப்பால் அருந்தகம் ஆரவாரம் பெற்றிட
'**ஆளரட்டும்**' ஒலிகள் ஆங்காங்கு கேட்டன.

71



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைவலை

நூற்றி ஐம்பது ஆண்டுகளாய்
நிலைத்து நிற்கும் கரைவலை
மாற்ற மேதுமற்ற முறையில்
மிளிர்வது பலருக்கும் ஆச்சரியம்
முற்றும் ஆழமான பகுதியில்
மடியைக் கடலடி இறக்கி
நாற்பதுக்கு மேலானோர் இருபுறமும்
நிரையாய் நின்றுவலை இழுப்பர்
72

இடையில் வலைபல மடியுடன்
இணைந்ததாய் இழுபட்டு தொடரும்
மடியும் பிறவலையும் வேலியாகி
மீன்களை மறித்து நிற்கையில்
கரையில் நின்றவா றிழுப்பதால்
'கரைவலை' எனப்பெயர் கொண்டது
வருவாய் பகிர்ந்து வழங்கலால்
மாற்றமின்றிப் பெறுவர் 'கிடைத்தகாசு'
73

சமமான முதலீட்டில் பலரிணைந்த
செழிப்பான தொழில்முறை 'கொம்பனி'
இம்மண்ணில் கூட்டுறவு முறையிது
எனக்கூறும் வகையில் உருவானது
கொம்பனியின் மேலாண்மை குறைந்திட
கலப்பு மாற்றங்கள் முளைத்தன
சம்மாட்டி முறையினில் மாறியும்
செயற்பாடு மாறாமல் தொடர்ந்தது
74



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகால கரைவலைக் கொம்பனியில்
சிறந்தது 'சிமியோன் கொம்பனி'
சமமான பங்கீட்டு ஒன்றிப்பின்
சிறப்பே வளர்ச்சியின் காரணம்
சிமியோன் கொம்பனி பின்னாளில்
சிமியோன் மகனான 'பிலிப்பு'க்கு
சம்மதமா யனைத்தும் உடமையாகி
சம்மாட்டி முறையில் வலுவானது
75

மைத்துனன் 'அலோசியஸி'ன் சிறந்த
மேற்பார்வை பிலிப்புக்கு துணையானது
சித்திதரும் 'கிறிஸ்ரியன்' முயற்சியால்
சிறந்த வருவாயில் மகிழ்ந்தனர்
சாதிப்பவை அதிகமாய்ப் பெருகிட
சேர்ந்தனர் பலரும் தொழிலோடு
புதிதாய் வாங்கிய படகினால்
பிறந்தது கரைவலைக்கு புதுவழி
76

நூறுபேர் வருவாயைப் பெற்றனர்
நாள்தோறும் தொழிலையும் பெற்றனர்
கறிமுதல் '**போடுகாசு**' முறையால்
கவலையில்லா வாழ்வைக் கண்டனர்
திறமையான தொழிலாளர் பலரை
தம்வசம் கொண்டன படகுகள்
சிறப்பான நடைமுறை தொடர்ந்திட
சிறப்பைப் பெற்றனர் தொழிலாளர்
77

நாட்டில் உருவான அசாதாரண
நிலையால் ஏற்பட்டது மாற்றம்
தடைப்பட்ட தொழில் முறையால்
தொழில் வளமற்றுத் தடுமாறினர்
படகுகில் ஏற்பட்ட சேதத்தை
பழுது பார்த்திட வழியில்லை
முடங்காமல் தொழிலை நடத்திடும்
முயற்சியில் இணைத்ததே 'தூயஒளி'.
78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ங. கதிர்கள் - 1

### மேலாப்பாச்சி

'கிறிஸ்ரியன்' தொழில் திறமையால்
குருநகரில் சிறப்பைப் பெற்றவர்
அறிவார்ந்த கூற்றுகள் செயல்களில்
அனைவர் மனங்களிலும் நிற்பவர்
சிறுவயது முதலே கரைவலைக்கு
சென்று நுட்பத்தை அறிந்தவர்
பொறுமையாய் காரிய மாற்றுவதில்
பலருக்கு முன்மாதிரி யானவர்

79

முன்னர் கரைவலைச் சம்மாட்டியாய்
முனைப்புடன் தொழில் செய்தவர்
வன்மனம் கொண்டோரின் பாதிப்பால்
வாழ்வில் பலதையும் துறந்தவர்
இன்னா செய்தாரை ஒறுத்ததால்
இருந்த கரைவலையை இழந்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுவரை தொழில் திறமையால்
இணையின்றி உயர்ந்து நிற்பவர்

80

மேவும் 'தூயஒளி' கரைவலையில்
**'மேலாப்பாச்சி'** பணியை ஏற்றவர்
கூவும் சேவலின் குரலொலி
கொண்டதாய் குரல் கொடுப்பவர்
தூவும் மழைபோல பிறர்க்கு
துணையாகி உதவிட முனைபவர்
'மவுணின்' ஆளரட்டல் தொடங்கும்
முன்னமே விழித்து எழுபவர்

81

அதிகாலை எழுந்து படகை
அடைந்ததும் நிம்மதி கொண்டார்
அதனில் தேங்கிய நீரகற்றி
அனைத்தையும் ஒழுங்க மைத்தார்
சேதத்தை இனங்காண ஒளியேந்தி
சரிவர ஒருங்கே சீரமைத்தார்
மீதமாய் தேவையா னவற்றை
மனத்தில் பதிவாக்கிக் கொண்டார்

82

அனைத்தும் முடித்த நிறைவில்
அடுத்து மவுணைத் தேடினார்
எந்நாளும் தொழிலதே சார்ந்த
எண்ணத்தை வாழ்வெனக் கொண்டதால்
அனுதினம் தொழிலுக்கு செல்பவர்
அன்று போகவில்லை திருமணத்தால்
ஆனாலும் அலுவல்கள் முடித்து
ஆலோசனை கூறிடவே தேடினார்

83

வீணாக நேரத்தை விரயமாக்க
விரும்பிடா 'மவுணை'க் கண்டார்
தணியாத தாகத்தால் அப்பமும்
தேநீரும் அருந்தியே நின்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்தனர் தேநீர்க் கடையில்
இருவரும் உரையாட என்றே
இணையாக தேநீர் அருந்தி
இயல்பாக உரைத்தார் செயல்தனை 84

நீருக்கு ஏற்றதாய் 'பாடு'
நிர்ணயம் செய்வது 'கிறிஸ்ரியன்'
யாருமே கூறிடார் மறுப்பு
ஏமாற்றம் இல்லாத முடிவால்
பேரும் புகழும் உள்ளது
'பாடு' இனங்காணும் திறமைக்கு
உரைத்ததைக் கேட்டதும் மவுணும்
உளமார ஏற்றான் மகிழ்ந்து 85

பொருத்தம் அப்பாடு என்பதால்
பெருமிதம் கொண்டான் அப்போது
உரைத்தவர் விடை பெற்றேகிட
உடனடி செயலில் இறங்கினான்
விரைந்து சென்றாலே பாட்டில்
வழுவின்றி பெற்றிட முடியும்
கரைந்து செல்லும் நேரத்தை
குறைத்திட விரைந்தான் மவுண். 86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முனைப்பு

நடப்பதன் இடையூறை நீக்கிடச் சாரத்தை
நன்றாய் மடித்து நெடிதைக் குறைத்தபடி
உடைப் பெடுத்து ஊறிடும் வியர்வையதால்
ஒருபக்க சட்டையை ஓவெனத் திறந்தபடி
நடக்கையில் எதிர்ப்படும் நாய்களைத் துரத்திட
நெடிதான தடியினை நீட்டிப் பிடித்தபடி
நெடுநாள் அனுபவத்தால் நிற்காது விரைந்தான்
நேரத்தை உணர்ந்து 'ஆளரட்டு'ம் 'மவுண்'

87

எல்லோரும் அழைப்பது மவுணென காரணத்தால்
இயல்பாக பதிவான இடுபெயரோ 'லிகோரி'
செல்லமாய் வீட்டில் சிறப்புடன் வாழ்ந்தான்
சண்டைகள் போட்டு சாதித்துக் கொள்வான்
கல்வியோ அவனுக்கு கசப்பே யானாலும்
'கரைவலை' தொழிலோ கற்கண்டாய் இனித்தது
எல்லாமே விதியென்று ஏற்றனர் பெற்றோர்
எடுப்புடன் படகில் ஏறினான் தொழிலுக்கு

88

அதிகாலை மணிநாலு ஆனதால் படபடப்பு
ஆளரட்டி சேர்த்திடும் அரும்பணி அவனதே
வீதிகளி லவனை வாலாட்டி குரைத்து
வரவேற்றன நாய்கள் வழமை முகங்கண்டு
பதிலுக்கு இவனேதும் புரியாமல் தடுத்திட
பதுங்கியும் நின்றன பிசகாத ஊளையுடன்
எதனையும் கருத்தில் எடுக்காத மவுணோ
ஏற்றிட்ட பணிக்காய் எட்டியே நடந்தான்

89



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிந்த தோளும் வலிமை உடலும்
வரவேற்புக் குணமும் மவுணுக்கு உரியவை
குரலின் அதட்டல் குணத்திலோ செயலிலோ
கடுகளவும் இல்லை கருணை உள்ளத்தில்
உரிமை உள்ளதால் 'பிலிப்பு' படகில்
ஆளரட்டும் பணியும் அவனைச் சேர்ந்தது
விரைந்து நடந்தோடி வீரமாய் ஆளரட்டும்
வீதிகள னைத்தும் மவுணுக்கு அத்துபடி 90

* * *

ஒன்பது வயதில் '**உடக்குப்பாஸ்**' அறிவிப்பை
ஒலியாலே தெரிவிக்க '**கிறிச்சான்**' ஏந்தியவன்
கண்ணியமாய் செய்தான் கால்வலிக்க ஓடியோடி
காரியத்தின் காரணத்தை கடுகளவும் அறிந்திரான்
அன்றைய அவன்பணி அனைவரையும் ஈர்த்தது
அவனது தந்தை 'அலோசியஸ்' செயற்பாட்டால்
முன்னின்று நிகழ்த்தினார் உடக்குப்பாஸ் ஆற்றுகை
மறுக்காமல் ஏற்றான் மவுணும் ஆவலாய் 91

புனிதவாரம் நிகழ்வாக பர்ணமித்த இப்பாஸ்
பிறந்தது நாற்பத்தி இரண்டாம் ஆண்டில்
புனிதராம் யாகப்பர் ஆலயத்து முன்றலில்
பகலிரவு ஆற்றுகையாய் அரங்கேற்றம் கண்டிடும்
மனிதவலு இதற்குள்ள மிகையான தேவையால்
முழுமையாய்ப் பலரும் முன்னின்று ஈடுபடுவர்
ஒன்றிணைந்து நிகழ்த்திட உரித்தான வகையில்
ஒப்பற்ற பணிகள் ஒருசேர இருக்கும் 92

பல்வேறு செயல்கள் பலவேறு குழும
பரம்பரைக் குரித்தான பணிகளாய் இருக்கும்
சொல்லாமல் அவற்றை தாமாக முன்வந்து
செய்து முடிக்கும் சிறப்பைக் கொண்டிருப்பர்
அலோசியஸ் நிகழ்கலை அரங்கேறக் கொட்டகை
அமைத்திடும் பணியை ஆவலாய்ப் புரிபவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரதும் ஒன்றித்த பங்கிருக்கும் இப்பாஸில்
பங்கேற்போர் தூய்மைக்காய் பரித்தியாகம் செய்வர்

93

உடக்குகளின் நிகழ்வுக்கு உரிய செலவை
ஊரவரி டமிருந்து உவப்புடன் எதிர்பார்ப்பர்
முடியாத நிலையெனில் மனமுவந்து வழங்கிட
முன்வரும் 'சிமியோன் கரைவலை' கொம்பனி
கொட்டகை அமைக்க கணக்கற்ற மரக்கோல்கள்
கடினமான பருமல்கள், கலத்தின் பாய்கள்
கிடுகுகள், பாய்மரங்கள் கோணாமல் சேகரித்துக்
கொடுத்து உதவுவது 'சிமியோன் கொம்பனி'யே

94

காட்சிகள் மூன்று கட்டமாய் அமைவதற்கு
கொட்டகை நீளமும் விசாலமும் கொண்டது
காட்சியைக் காண்பிப்போர் காணாமல் மறைவதற்கு
கிடுகுகள் மறைக்கும் கணிசமாய் உயரத்தை
கொட்டகை உட்புறம் காட்சியை நிகழ்த்துவோர்
கம்பிகளால் உடக்கின் உறுப்புகளை அசைப்பர்
உடக்கைத் தூக்கியோர் உள்மறைய உடக்குகள்
உயிருள்ள மனிதர்போல் உயிரோட்டம் பெறும்.

95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாலிபன்

விரைந்து நிமிர்ந்து நடந்துமே
வீட்டின் முன்னால் வந்தமவுண்
உரத்த குரலால் அழைத்தான்
"உதயகுமார் உதயகுமார் உதயகுமார்"
காரணமின்றி தாமதிக்கா னென்பதால்
காத்திருந்தான் பதிற்குரல் வரும்வரை
சீராகிவிட்ட காற்றினால் அணைக்கும்
சிரமமின்றி உறக்கமென அறிவானவன் 96

திருமணக் கொண்டாட்டத்திற்கு சென்று
திரும்பியவன் உறங்கியது இருமணிகள்
குரலுரத்துப் பலமுறை வந்தபோதும்
குழம்பவில்லை அவனுறக்கம் இன்று
அரண்டு விழித்த தகப்பன்
அசைவற்ற உடலால் தவித்தார்
குரல்தர துடித்தெழுந்த மனைவி
கேட்டதும் மகனை நெருங்கினாள் 97

மெள்ள எழுப்பியும் மகனின்று
முரணாக இருந்தமை கண்டாள்
உள்ளூர வேதனை கொள்கையில்
"உதயகுமார்" மீண்டும் மவுண்குரல்
வெளியே வந்தவள் "உதயகுமார்
வந்திடுவான் பின்னால நீபோதம்பி"
உள்வந்தவள் உள்ளம் துடித்தது
உறங்கும் மகனைப் பார்த்ததும் 98



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் மீண்டும் எழுப்பினாள்
மகனுறங்கிய நேரத்தை அறிந்ததால்
துன்பமாய் இருந்தது அவளுக்கு
தாபரிக்க இவனுழைப்பு ஒன்றேதான்
தன்மனதைக் கல்லாக்கி கண்ணீருடன்
திரும்பத் திரும்ப எழுப்பினாள்
கண்திறந் தெழுந்தான் உதயகுமார்
கண்டவள் உள்ளம் மகிழ்ந்தது

99

"எத்தின மணியம்மா?", "மவுண்
எழுப்பீற்றுப் போறார் தம்பி"
"நித்திர காணாது பஞ்சியாயிருக்கு"
நெஞ்சு வலித்தது அவளுக்கு
"எத்தினநாள் தொழிலில்ல தம்பி
எங்களுக்கு வேறென்ன வருவாய்
இதுவரை அப்பாட உழைப்பு
இருந்துது இன்றவர் சுகவீனர்"

100

உள்ளத்தின் பாரத்தை மகனிடம்
உரைத்தாள் வேறுவழி இல்லாமல்
பள்ளிக்கூட நாட்களில் வரவின்றி
பல்வகைச் செலவு செய்கையில்
சொல்லாத வார்த்தையை இன்றவள்
சொன்னதால் அவன்மனம் கசிந்தது
துள்ளி யெழுந்தவன் முகங்கழுவி
துடைத்துத் தயாரானான் புறப்பட

101

"திருந்தாதி அடிச்சிற் றாம்மா"
திடீரெனக் கேட்டதால் தயக்கம்
சற்றே முந்தியே எழுந்ததால்
சரியாகச் சொல்லிட முடியவில்லை
நேரத்தைப் பார்த்தான் எதிர்பார்ப்பில்
நேரமிருந்தது திருந்தாதி அடிக்க
காரிகையின் முகமோ அவனிமைகளில்
கண்களை மூடினான் கலைந்திடாமல்

102



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* * *

அதிகாலைத் திருப்பலிக்கு வந்தவளை
அழைத்தான் இருளை நோக்கி
எதிர்த்தும் வழியின்றி இணங்கினாள்
எண்ணத்தால் இருவரும் காதலர்கள்
காதலுக்காய் தொழிலு மிழந்தவன்
காத்திருந்து சந்திப்பது அதிகாலை
நித்தமும் அமைவதில்லை இந்நிலை
நிழலாகத் தொடர்வான் எதிர்பார்த்து 103

பனிக்குளிர் இதமளிக்க கடுமிருளில்
பக்கம் நெருங்கினான் காதலன்
அனுமதித்தாள் சுகமாக இருந்ததால்
ஆவலாய்ப் பிடரியை வருடினான்
அனுங்கினாள் இதயம் படபடக்க
அவள்காது விளிம்பைத் தடவினான்
துணிவுடன் தோளை நீவினான்
துடிப்பின்றி நின்றாள் சிலையாக 104

உடம்பு சிலிர்த்ததால் அசைந்தாள்
உணர்வு சிலிர்த்ததால் நெளிந்தாள்
இடுப்புத் தசைகள் சூடேறிட
இறங்கியது மனசு அவன்தொட
விடுவிக்கத் தன்னுதட்டைக் கடித்தவள்
விலகிட முனைந்து தோற்றாள்
அடங்காத ஆவலில் முத்தமிட
அவளுக்கு ஏற்பட்டது வெறுப்பு 105

தன்தவறை உணர்ந்து நொந்தான்
திரும்பியவள் கண்களில் கண்ணீர்
"என்னட படிப்பு முடியவேணும்
எவராவது பார்த்தால் என்னாகும்?"
முன்பின்னே பார்த்தவாறு விரைந்தாள்
மூன்றுநாள் முன்னால் நடந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றவன் நினைவுகளில் உயிர்த்தது
இளநகையோடு பெற்றவளைப் பார்த்தான் 106

"நேற்றைக்கு சோறுகறி காச்சயில்ல
நெஞ்சுவலி யாயிருந்தது தம்பி
ஆற்றையும் கடையில பாணேதும்
இருந்தா வாங்கிப் போறியா?"
குற்றவுணர்வு உறுத்திட அவனின்
கண்களில் பனித்தது நீர்த்துளி
ஆறுதல் கூறித்தான் புறப்பட்டான்
"அம்மா! நேரமாச்சு வாறன்" 107



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியவர்

"பறுனாந் தண்ணே! பறுனாந் தண்ணே!"
பலமுறை அழைப்புடன் "விடியுது எழும்புங்கோ"
ஒருமுறை எழுப்பிய ஓசையைக் கேட்டதும்
ஓட்டமும் நடையுமாய் வருபவர் பறுனாந்து
மறுமுறை எழுப்ப வந்தும் எழும்பாதது
மனதில் சங்கடம் ஏற்பட்டது மவுனுக்கு
"ஆருமவுணா...?" வீட்டினுள் ளிருந்து பெண்குரல்
அவள்தான் பர்னாந்தின் மனைவி கனகம் 108

"என்னங்க இண்டைக்கு அண்ணன திரும்பியும்
எழுப்ப வந்தனான் எழுப்புங்க கெதியா"
"என்னெண்டு தெரியயில்ல பஞ்சிப் படுகிறார்
எப்பிடியும் எழுப்பி விடுறன் போதம்பி"
"மினக்கடாம அனுப்பி விடுங்க நேரமெல்லா
மட்டுமட்டா இருக்கு கெதிப்பண் ணுங்கக்கா"
"அண்ணே!" மறுபக்கம் அழைப்புக் குரல்
"அண்ணே நானண்ணே உதயகுமார்" பதிலாக 109

"என்னடா செய்யிறாய் கெதியா வாவன்ரா
எப்போதும் முந்துறவர் பறுனாந் தண்ணன்
தெண்டிச்சும் எழும்பு றாரில்ல வருத்தமோ?"
"தும்மினவர் நேற்று அதுதானோ தெரியாது"
"நிண்ட காத்தோட '**நிலவு படுகிற
நீரால**' பாடுவிட்டா சோத்துக்குக் கிடைக்கும்"
"பின்னால கூட்டிட்டு வாறன் நீங்க
பாக்காம போங்க வந்திடுவன் கெதியா" 110



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மவுண் திரும்பி வந்தவழி நடந்தான்
மனதின் வேகமோ வெள்ளிடை மலையாக
காவிய '**பழங்கயிறு**' தோளுக்கு சென்றிட
காத்து நின்றான் உதயகுமார் வீதியில்
கூவிய சேவலின் குரலொலி கேட்டதும்
கணவனின் காலடி குந்தினாள் கனகம்
ஆவன புரியாது அவசரம் மேலோங்க
அசைத்து எழுப்பினாள் அன்பாக அவரை 111

"நேரம் போயிற்றெல் லாப்பா எழும்புங்க"
"நேற்றயில இருந்து பஞ்சியா இருக்கு
ஒரே குத்துளைவா இருக்கு தேகமெலாம்"
ஓங்கி அடித்ததாய் ஒருகணம் தடுமாறினாள்
சீர்மாறி வேகமாகத் துடித்தது இதயம்
சீர்செய்யக் கால்களை செருகி அமர்ந்தாள்
பார்வை குத்திட்டு புலப்பட எதுவுமே
பேசாது கணவனை பார்த்தவா றிருந்தாள் 112

குடும்பத் தலைவியின் கடமை உள்ளத்தில
கொழுந்து விட்டெரிய குடைந்தது சிந்தையை
கடுமையான காற்றால் களையிழந்த நாட்கள்
காரிருளாய்த் தோன்றிட கொதித்தது தேகம்
கொடுக்க வேண்டிய 'சீட்டுக்காசி'ன் நினைவு
கொடுங் கரங்களாகி கழுத்தை நெரித்தது
அடுத்தடுத் துப்பெற்ற அயலவர் கடன்கள்
அவளையே அறியாமல் ஆர்ப்பரித்து நின்றது 113

"பஞ்சியப் பாத்து என்னப்பா செய்யிறது
பிள்ளகள் பசியப் பொறுத் திருக்குமா?
ஐஞ்சாம் திகதியில குடுக்க வேண்டிய
ஐநூறு ரூபா 'சீட்டுக்காசு' குடுக்கயில்ல
அஞ்சாறு நாளாகப் பட்டகடன் காசுகளோட
'**அற்றோம்**' ரெண்டு இருக்குது நாளைக்கு
பஞ்சியப் பாக்காம போனாத்தானே கறியும்
'போடுகாசு' எண்டாலும் நாலுகாசு கிடைக்கும்" 114



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கலங்க கெஞ்சலாய் கூறினாள் கனகம்
கல்லும் உருகிக் கரைந்திடும் கனிவுடன்
கனகத்தின் கூற்றால் கலங்கிய பறுனாந்து
குடும்பப் பொறுப்புடன் கட்டியவளைப் பார்த்தார்
கண்ணிமை மூடாது தன்னையே பார்த்ததால்
கடமை நெஞ்சை கணையாகத் தாக்கியது
மின்னலென சோம்பலை முறிக்க முயன்றிட
மகிழ்வுடன் கனகமும் வழிவிட்டு எழுந்தாள் 115

துள்ளலா யெழுந்த கனகத்தின் முகத்தில்
துளிர்விட்ட மலர்வு துலங்கித் தெரிந்தது
உள்ளத்தைக் குடைந்தவை உருமாறிச் சென்றதன்
உணர்வு முகத்தில் ஒளிர்வதைக் கண்டார்
கள்ளமோ இல்லாத குறுநகை தவழ்ந்திட
குலையாத உறுதியில் கிளர்ந்தது மார்பு
எள்ளளவும் தயங்காது " '**விடியச்சோறை**' எடுகனகம்"
எனக்கேட்ட குரலினால் இதயம் குளிர்ந்தாள் 116

பர்னாந்தின் முடிவுக்காய் பார்த்திருந் தவள்போல
பம்பரமாய் சுழன்று 'விடியச்சோறு' '**மடிப்பெட்டி**'
கரங்களில் ஏந்தியவள் கணமும் தாமதியாது
கண்ணில் தென்பட்ட 'பழங்கயிறை' எடுத்தாள்
'கரைவலை' தொழிலுக்குச் செல்லும் தொழிலாளர்
கையோடு எடுத்துக் கொள்பவை இவைகளே
கரியால் பல்லைத் துலக்கிய பர்னாந்து
குடத்தின் நீரால் கழுவினார் வாயை 117

முகத்தைக் கழுவி மனத்தை திடமாக்கி
முற்றத்துக் கொடியில் 'கச்சைத்துணி' எடுத்தார்
மிக்கதாய் கணவனின் முகத்தில வள்பார்வை
முதல்முறை பார்த்திட முனைபவள் போலவே
தாக்கத்தால் உண்டான துயரத்தின் கசிவை
தானுணரும் நிலையில் தன்கண வனில்லை
அக்களிப்பு இழந்து அல்லாடும் நிலைகண்டு
அவளுள்ளம் துடித்ததை யார்தான் அறிவார்? 118



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்படத் தயாராய் பெண்டிலைப் பார்த்தார்
புரிந்தவளாய் எடுத்த பொருளுடன் நெருங்கினாள்
தேற்றிட முகத்தை தயக்கத்தில் பார்த்தபடி
தாங்கிய விடியச்சோறை திணித்தாள் கைகளில்
முற்றும் எதிர்பாராமல் வழுக்கியது சோற்றுச்சட்டி
மண்ணில் விழுமுன்னர் வாரிக் கொண்டாள்
அற்பமாய் எண்ணாததால் ஆழமாய்த் தாக்கியது
அடித்தது இதயம் ஆடியது அவளுடல்

119

"என்னப்பா சட்டிய வடிவாப் பிடிக்கலாமே
என்னட '**படையாளி**' தொழிலுக்கு போகேக்க..."
கண்கள் சிந்தும்நீர் கன்னத்தை நனைத்திட
கைகளால் துடைத்து கலக்கத்தில் நின்றாள்
எண்ணத்தை குவித்து ஏக்கத்தை தவிர்த்து
ஏந்திய சட்டியை இட்டாள் கைகளில்
"என்னங்க கவனமுங்க" கூறியவள் ஏனையதை
எடுத்து கொடுத்தாள் இதயத்தை இறுக்கி

120

தெருநாயின் ஊளையால் துடிப்பு கனகத்திடம்
"இதென்ன சனியன் தொழிலுக்கு போகேக்க
நேரமும் போகுது நினைச்சுக் கத்துதே
நித்திரையே இல்லயிங்க நாயின்ர ஊளையால
பார்த்துக் கவனமாப் போங்க" என்றவள்
பாசத்தால் முகத்தைப் பார்த்தவாறு நின்றாள்
பர்னாந்து சோர்வுடன் புறப்பட்டு தலையசைக்க
படலையை அவிழ்த்து பாதையை திறந்தாள்

121

இதயத்து உணர்வுகள் இரணமாய் கசிந்திட
இளகிய மனதுடன் ஏறெடுத்து பார்த்தாள்
உதயமான வேதனை உச்சத்தை தொட்டிட
உடல் தளர்வுடன் உணர்வற்றுக் கடந்தார்
எதையோ இழந்தவராய் இரக்கமுடன் பார்த்தார்
'ஏணை'க்குள் கிடக்கும் குழந்தையின் பார்வை
புதைந்து கிடந்து புரண்ட இயலாமையை
புரிந்தவளின் கண்களில் பொசிந்தது கண்ணீர்

122



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கனகம் போயிட்டு வாறனப்பா" திடுக்குற்றாள்
கணவனைப் பார்த்தவாறு கலக்கத்தில் நின்றவள்
இணைப்பி லிருந்து ஈடாடிய துடிப்பிலும்
இளநகை "கவனமா பாத்துப் போங்க"
நினைவினில் 'யாகப்பரை' நிறுத்திக் கணவன்
நடப்பதை பார்த்தபடி நின்றாள் மனதுருக
துணையென உதயகுமார் தொடர்வதால் ஆறுதலில்
தணிந்த தாக்கத்தால் தயக்கம் தெளிந்தாள் 123

தன்னால் முடியாத துன்ப நிலையினிலும்
தொழிலுக்கு செல்வதால் தொடரான வேதனை
நினைவுகள் அவருடன் நெருங்கியே பயணிக்க
நனைத்தது மார்பை நெடிதான கண்ணீர்
பெண்கள் நால்வரைப் பெற்றவளின் குடும்பநிலை
புயலாக அவள்முன் பரிணாமம் கொண்டது
அனைத்தும் தனக்குள் அடங்கிடத் தவித்தவள்
அமைதி விடுபட அடியெடுத்து வைத்தாள் 124

வலதுகால் பாதத்தில் வலுவான கல்லடிக்க
வலிதாங்க முடியாமல் வளைந்து நெளித்தாள்
காலினை மடித்து கல்லடித்த இடத்தை
கையால் தடவிட கடுமையாய் வலித்தது
குலையாது உள்ளத்தைக் குடைந்திடும் வலிக்கு
குன்றியே தெரிந்தது காலின் வலியிப்போ
நாலைந்து நாய்களின் நெடுநேர ஊளை
நெஞ்சில் தைத்தது நெருஞ்சி முட்களாய். 125



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன்

விசிறிய கைகளுடன் வேகமாக வந்தார்
வராதோரை எழுப்பும் முனைப்பில் மவுண்
வீசிய காற்றின் மென்மை நிலையால்
வாசலை நெருங்கிட வரவேற்றது குரலொலி
பேசியோர் யாரெனப் புரிந்ததால் "அன்ரனிதாஸ்"
பதிலுக்கு "இந்தா வாறனண்னே போங்க"
"ஆசையாப் பேசினது போதும் கெதியாவா"
"ஆனாலும் உங்களுக்கு நெடுகிலும் பகிடிதான்" 126

திருமணம் முடித்து ஈரெட்டு நாட்கள்
தொழிலுக்கு செல்லும் தொடக்க நாளின்று
ஒருவரை விட்டொருவர் பிரிந்திட ஏக்கம்
ஒருவாறு புறப்படத் துணிந்தான் அன்ரனிதாஸ்
விருப்புடன் கொடுக்க பொரித்த '**அரியதரம்**'
'பிளாஸ்ரிக்' கூடையில் நிரம்ப இருந்தது
வருகின்ற தொழிலாளர்க்கு முதல்நாள் கொடுக்கும்
வழமைக்கு அமையத் தயாரிக்கப் பட்டது 127

கண்ணை இழுக்கும் அழகினள் மனையாள்
காவியமாய் ஓவியமாய் கணத்தினில் கண்டான்
மின்னும் இளமை மிஞ்சிடும் நிலையில்
மறுவின்றி அங்கம் வழங்கியது அழகை
கண்டதும் கிளையை சாய்ந்த கொடியும்
கடிதினில் முயன்று கொடியாய்ப் படர்ந்திடும்
எண்ணமும் அவ்வாறு படர்ந்திட மனதில்
ஏக்கம் துளிர்ப்பதை இருவரும் உணர்ந்தனர் 128



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகிச் சென்றிட மனமின்றி மனையாளை
வைத்தகண் வாங்காது மோகத்தில் நின்றான்
நிலைமையை உணர்ந்தவள் நினைவும் கிளர்ந்தது
"நேரமெல்லா போகுது இப்படியே நிண்டா"
அலைபாய்ந்த தவன்மனம் "தாறதைத் தாவன்"
"அந்தா எல்லாமே அருகினில் இருக்கே"
"இல்லை யெங்கயில்ல" கூறியவன் தாவிச்சென்று
இதழோடு இதழை இறுகிடப் பதித்தான் 129

இன்பக் கிளர்ச்சி இருவரிலும் துளிர்விட
இதழ்கள் விலகியும் இறுக்கம் விலகவில்லை
மீண்டும் மீண்டும் முனைப்புடன் இதழை
முழுமையாய் சுவைத்திட மகிழ்வில் இருவரும்
எண்ணத்தால் இணைந்தனர் எல்லாமே மறந்தனர்
எழுந்த போதுதான் யதார்த்தம் புரிந்தது
தணிந்த தாபத்தால் தெளிந்த மோகத்தால்
தன்னிலை உணர்ந்து தயாரானான் புறப்பட 130

தொழிலுக் குரியவையும் அரியதர கூடையையும்
தூக்கி வந்தவன் திரும்பினான் வாசலில்
எழிலூட்டும் சிரிப்புடன் ஏந்திழையைப் பார்த்தவன்
ஏற்றமுடன் முறுவலித்து தலையை அசைத்தான்
விழியசைத்தாள் வழியனுப்ப வழிநீரின் துளியுடன்
வாசலைக் கடக்க வாசல்தேடி விரைந்தாள்
விழிமூடா நிலையில் வீதியில் போகும்வரை
வைத்தகண் வாங்காது மனமது நிறைந்தாள் 131

பின்னிரவு கண்ட கனவின் நினைவுகள்
புரண்டு இதயத்தை முள்ளெனக் குத்திட
கண்ணீர் விழிவழி விரைந்து வடிந்திட
"படையாளியே!" என்றவள் இதயம் துடித்தது
கணவனிடம் சொல்லாமல் மனதுள் புதைத்தாள்
கனவுதனை எடுத்திடான் கருத்தில் என்பதால்
கனவாக வந்ததோ கலியாண ஊர்வலம்
கூடாதாம் கனவில் கண்டஇக் காட்சி 132



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டது மரணக் கோலமானால் என்றும்
கவலை இல்லையாம் கருத்தாய் சொல்வர்
கனவின் கணம்முதல் கலைந்தது உறக்கம்
கனவின் தொல்லை கொடியாய் நீண்டதால்
கணவனில் கண்பதித்து கலக்கத்தில் இருந்தவள்
கூப்பிடும் முன்னமே எழுப்பிவழி யனுப்பினாள்
கணமேனும் ஓய்வின்றி கனவே புரண்டதால்
கவலை நிறைந்திட கற்படியில் அமர்ந்தாள்.

133



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதில் மேலாப்பாச்சி

வேலைகள் நிறைந்த சம்மாட்டியாய்
வேண்டியபோது முன்னின்று செயற்படும்
'மேலாப்பாச்சி' மவுணின் ஆளரட்டல்
முடிவுற்றதால் பெருமாறுதல் அவனுக்கு
இல்லத்தை நோக்கி விரைந்தான்
இளைப்பாறிச் சென்றிடும் நினைப்பினில்
களைப்பு அவனை வருத்தியும்
கடமையோ முன்னின் றழைத்தது
134

அதிகாலை மூன்றரை மணிமுதல்
ஆளரட்டல் தொடங்கி முடிவுற்றதும்
பதிலான சம்மாட்டியாய் தொழிலுக்கான
பல்வேறு சுமைகளை சுமப்பான்
அதிகளவு ஆர்வமுடன் தொழில்செய்து
அதனால் கிடைப்பதை பங்கிட்டு
பாதிப்பை கிறிஸ்ரியனுடன் இணைந்து
போக்கியே நிறைவு செய்வான்
135

சுமையாய்ச் சுமந்தான் அனைத்தையும்
சுகமாக இருந்தது அவனுக்கு
இமையாய்த் தொழிலை காக்கும்
இயல்பும் இருந்தது அவனிடம்
செம்மையாய் முதற்பணி முடிந்ததால்
சிறிதமர வீட்டினுள் நுழைந்தான்
சமையலில் மனைவி இருந்ததால்
சடுதியாய் தரித்தான் மலைப்பில்
136



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியற்சோறை பூனைதட்டி உண்டதால்
வெளிக்கிட தொழிலுக்கு சோறில்லை
முடிந்தவரை விரைவாய் சோறாக்கும்
முனைப்பில் இருந்தாள் மனையாள்
"விடிஞ்சிடும் கெதிப் பண்ணப்பா"
"வேகத்தை நெருப்பு அறியுமாங்க?
முடிஞ்சிடும் கிணத்தில நீங்க
முகத்தக் கழுவிற்று வாங்க" 137

கட்டுப்பட்டு கிணற்றடி சென்றவன்
கழுவி உடைமாற்றிக் கொண்டான்
மடிப்பெட்டி பழங்கயிறுடன் வந்தவன்
"நேரம்போகு தெல்லாப்பா" "சரியுங்க
விட்டிருக்கிறன் சோத்தில பால்பிழிஞ்சு
வெங்காயம் உரிச்சு வச்சனான்
சுட்டாக் கருவாட்டோட கோவிக்காம
சாப்பிடுங்க இண்டைக்கு மட்டாத்தானே" 138

"பிரச்சினயில்ல 'தயான்' காசுகேட்டான்
பள்ளிக்கூடத் தேவைக்கு இருக்கா?"
"இருக்குங்க நீங்களேன் யோசிக்கிறீங்க
இதநான் செய்வன் தானேயப்பா"
சோர்வுடன் மனைவியைப் பார்த்ததும்
சர்வமும் ஒடுங்கிய நிலையானாள்
திரும்பி நடந்தவனைப் பார்த்தாள்
தனிச்சோறு கொடுத்த வேதனையில். 139



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருகன்

மாமனார் தொழிலென்ற மூச்சான செயற்பாட்டில்
தாமதமின்றி செல்வதற்கு தயாரானான் "யூலியஸ்"
சாமம்முதல் நித்திரை சொற்பமும் இல்லாமையால்
சேமமாய் தொழிலுக்கு செல்வதில் தயக்கம் 140

குழந்தையாம் மகனை கூர்ந்து நோக்கியே
குழைவுடன் அருகில் குந்தினான் மகிழ்வில்
மழலைப் பேச்சவன் மனத்தில் உயிர்பெற
தோளிலே சுமந்திடும் ஆவலோ உள்ளத்தில் 141

பிள்ளைகள் நால்வரில் பெண்கள் இருவர்
கொள்ளை அன்பின் கொடையாக இவர்கள்
துள்ளும் இளமைத் துடிப்பின் விடைகளாய்
தளிரான நால்வரும் துயில்வதால் மகிழ்ச்சி 142

விடியச்சோ றையேந்தி வந்தவள் தரித்தாள்
இடையிற் புகுந்து இடையூறைக் கொடுக்காமல்
கட்டியவன் மக்களை களிப்புடன் பார்ப்பதால்
அடைந்த சந்தோஷம் அவளுக்குக் கரும்பாம் 143

நேரமும் நெருங்கிட நெருங்கினாள் கணவனை
அரவமின்றி உணர்த்தினாள் ஆளரட்டிச் சென்றதை
புரிந்த போதுமவன் பிரிந்திட மனமின்றி
பரிவுடன் நோக்கினான் பாசமிகு மனையாளை 144

இளவொளியி லவள்முகம் இருளாகித் தெரிந்ததால்
சுள்ளென நெருப்பாய் சுட்டது இதயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளியெ ழுந்தவனுக்கு துணையாக கைகொடுத்து
கள்ளமிலாப் புன்னகையை காணிக்கை யாக்கினாள்

145

முகச்சோர்வு கண்டதால் மனதில் சங்கடம்
அகத்தின் வெளிப்பாட்டை அறியாத நிலையில்
போகின்ற நேரத்தில் புடைத்தெழும் சோகத்தில்
அக்கறையாய் கேட்டாள் "என்னங்க செய்யிது?"

146

"ஒன்றுமில்லை" என்றான் ஓரக்கண் பார்வையில்
கன்றின் பாசத்தைக் கண்டதாய்ப் பசுவானாள்
முன்னோக்கி நகர்ந்து மறுமுறை திரும்பினான்
தன்னுள்ளக் கிடக்கையை தெரிவிக்க முடியாமல்

147

வாசல்வரை சென்று விடியச்சோறை ஒப்படைக்க
பேச்சற்ற மொழியால் புறப்பாட்டை உணர்த்தினான்
ஆச்சரிய மவளுக்கு அவன்நிலை மாற்றத்தால்
அச்சத்தை மனதுள்ளே அடக்கி வழிவிட்டாள்

148

குலைந்த அமைதியிலும் குலையாத உறுதியில்
கலைந்த கேசத்தை கொண்டையாய் முடித்தாள்
நிலைத்த விழிநீரை நோக்காமல் மறைத்தவள்
மலைப்பை காட்டாமல் மனதுக்குள் புதைத்தாள்.

149



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதியவன்

என்றுமில் லாதவாறு எழுந்தான் கிருஷ்ணன்
இன்றவன் பிறந்தநாள் 'இதற்காக அதிகாலை
மூண்டரை மணிக்கு முகத்தைக் கழுவுவதா?'
அன்னைக்கு புரியாமல் அரட்டினாள் தந்தையை
150

என்னென்று சொல்லாமலே ஏறிட்டுப் பார்த்தார்
நின்றது தலைமகன் நிற்பது புரியவில்லை
"என்ன?" என்றார் இயல்பான தொனியில்
"ஒன்றுமில்லை இண்டைக்கு கரவலைக்குப் போறன்"
151

பெற்ற பிள்ளையின் பேச்சைக் கேட்டதும்
ஊற்றெடுத்த சோகத்தில் உருகினர் பெற்றோர்
சீற்றம் கொள்வது சாதுரிய மில்லையென
ஆற்றாமை உணர்ந்து அன்பாகக் கேட்டனர்
152

' ' **கலப்பத்து**' அடித்திடக் கலங்கள் இல்லையே
நிலையான வருமானம் நெருங்கவு மில்லையே
புலரும் பொழுதுகள் பசியால் மறையுதே
குலத்தொழில் குடும்பத்தை காக்கவு மில்லையே'
153

கிருஷ்ணனின் ஆதங்கம் கவலையைக் கொடுத்தது
இருவரும் பார்த்தனர் இளகிய இரும்பாக
புரிந்தாலும் அவன்மனம் பெற்றமனம் தவித்தது
சரியென்று ஏற்றுத் தேற்றிடத் தயங்கினர்
154

கண்ணாடி நாரிழையில் கலங்கள் பெருகியதால்
முன்னாளின் கலப்பத்து முற்றாக முடங்கியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்நாளில் இத்தொழில் பயனில்லை எனும்நிலை
உண்டென உணர்ந்தும் உரியதொழில் ஒன்றேதானே

155

தெரியாத தொழிலுக்கு தன்மகன் செல்வது
தெரிந்தும் பள்ளத்தில் தள்ளுவது போலன்றோ
சுரந்த பாசத்தால் சிதறின உணர்வுகள்
இரந்து கேட்டனர் ''இதென்ன திடீரென்று''

156

''பிறந்தநாள் இன்றெல்லா போகத்தான் வேணுமா''
உறுதியுடன் நின்றவன் ஒன்றும் கூறவில்லை
அறியாத தொழிலால் அடையும் சஞ்சலத்தை
அறிந்த வரையிலவர் அடுக்காய் கூறினர்

157

எதுவும் அவனுக்கு ஏற்புடைய தாயில்லை
''முதியவர் சேவியர் முன்னைய முதலாளி,
புதிதாக அவரும் படவுக்கு வாறாரே
இதுக்கெலாம் தெரிஞ்சு இருக்கவும் வேண்டுமா?''

158

''புயல் அடித்தால்!'' பயத்தின் வெளிப்பாடாய்
''புயலெப்ப அடித்ததம்மா பயந்து சாகிறியே''
''பயமறியா குழந்தை புயலடித்த அறுபத்திநாலில்
பயங்கொண்ட எமதுள்ளம் பதறுதடா இன்றும்''

159

பேசுவதால் பயனில்லை பதிலின்றி இருந்தனர்
பசியாற உண்டிட பற்றாமையு மொருகாரணம்
காசும் தேவையவர் கைமாற்றை மீளளிக்க
பாசமாய் அவனை பார்வையால் கொஞ்சினர்

160

கொண்டேகச் சாப்பாடு கடையில வாங்குதற்கு
உண்டா பணமென்று உணர்வோடு விசாரிக்க
நண்பனின் பணமுண்டு நாளைக்கு கொடுக்கலாம்
என்றவன் கூறிப்பின் எடுத்தடி வைத்தான்.

161



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றையப் புயல்

காலையிள வெயிலைக் காணவில்லை மக்கள்
'**கச்சான்**' காற்று கடுங்குளிராய் வீசியது
காலைமுத லெங்கும் மப்புடன் மந்தாரம்
கன்னங்கரு மேகத்தி லிருந்து நீர்த்தூறல்
மாலையாக மாற்றம் கண்டது இயற்கை
மழையோடு காற்றும் இணைந்து கொண்டது
கோலங்கள் மாறிட குமுறியது வான்வெளி
கண்ணைப் பறித்திடும் மின்னல் முழக்கம் 162

வீசிய 'கச்சான்' திசைமாறி '**கொண்டலாய்**'
வேகரங் கொண்டதால் வானம் கனைத்தது
அச்சத்தால் மக்கள் அடங்கி ஒடுங்கினர்
அனுபவம் புதிதாய் அன்றுதான் இருந்ததால்
அசுரத்தன சூறைக்காற்று சுழன்று வீசியபடி
அகலக்கால் விரித்ததால் கிலிகொள்ளச் செய்தது
துச்சமெனக் கருதிடத் துணிவில்லை எவர்க்கும்
செய்வதற் கேதுமில்லை என்நிலை அவர்க்கு 163

வீட்டுக் கூரைகள் வாசல்கள் சாளரங்கள்
விண்ணைக் குடையும் காற்றால் அதிர்ந்தன
ஓடுகள் பறந்தன ஒவ்வொன்றும் ஓசையுடன்
ஓய்வின்றி வீசியதால் மரங்கள் சுழன்றன
கொட்டும் மழையைக் காத்திட்ட ஓடுகளும்
கழன்று வீட்டினுள் குவிந்து கிடந்தன
அடியுடன் மரங்கள் பெயர்ந்து விழுந்திட
அசையாத மரங்களின் கொப்புகள் முறிந்தன 164



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னையின் ஓலைகள் சலசலத்து அசைந்திட
தேங்காய் பெயர்ந்து குலைவிட்டு வீழ்ந்தன
யன்னலால் வெளியே பார்த்திட முனைந்தும்
அங்கதைத் திறந்திடல் கடினமாய் இருந்தது
யன்னலோடு கதவுகள் ஈடாடி உடைந்ததால்
இரைச்சலின் வேகத்தால் இதயம் துடித்தது
மின்கம்பம் சரிந்து மின்சாரம் தடைப்பட
விளக்கை ஏற்றவும் விடவில்லை சூறைக்காற்று

165

உறுதியான உள்ளங்களின் உறுதியும் தளர்ந்து
உள்ளூர இருந்தபயம் உச்சியைத் தொட்டது
இறுதி நாளென்ற எண்ணமே உதித்ததால்
இளகிய மனங்களில் ஏக்கநிலை தொடர்ந்தது
இறைவனை நினைத்து வேண்டுதல் செய்தவர்
ஈரமான உடையுடன் விழியெரியத் தவித்தனர்
உறக்கத்தை மறந்து உறுத்தலில் புகுந்தவர்
உறங்கிட அதிகாலை மணிமூன்று ஆயிற்று

166

ஊழிக்கால நிலையாக உள்ளூரத் தவித்தவர்
உறங்கவில்லை கணமும் உயிரச் சுறுத்தலால்
விழிமூடும் நிலையில்லை தொழிலாளர் வீடுகளில்
விடியும்வரை காத்திருப்பு நிலையறியும் தாகத்தால்
தொழில்கள் பலவற்றின் தகவல்கள் ஏதுமில்லை
தொழிலின் வளங்கள் தடுப்பின்றி அழிந்தன
தொழிலாளர் பலர்முடிவு துயரமே ஆகியது
துன்பச் சுழிக்குள் குருநகர் மக்கள்.

167



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைதல்

கலகலப்பு சுறுசுறுப்பு கலந்த பறுனாந்தில்
கடுகளவும் அவையின்றி கண்டதால் ஆச்சரியம்
நிலவொளியில் உதயகுமார் நன்றாய்க் கவனித்தான்
நிஜத்தை இழந்த சலனமவர் முகத்தில்
புலனிங்கே இல்லையென புரிந்ததால் வியப்புடன்
புகுந்தனர் கோப்பி பருகிட அருந்தகம்
பாலுடன் கோப்பியைப் பருகிடும் சமயம்
புன்னகை முகத்துடன் புகுந்தான் அன்ரனிதாஸ் 168

"இன்டைக்கு மாப்பிள்ள தொழிலுக்கோ?" உதயகுமார்
இருவரும் நண்பர்கள் "ஓமடா மச்சான்"
"இன்டைக்கு உன்னட செலவுதான்" "அதுக்கென்ன"
"இந்தக் கூடையில என்னடா அரியதரமா"
"என்ன மச்சான் செய்யிறது வழமைதானே"
"எப்படியும் பெரியமீன் சும்மா கிடைக்குமே"
கன்னம் குழிவிழும் சிரிப்புடன் நேரமாகிட
கோப்பியை அருந்தி புறப்பட எழுந்தனர் 169

"பொறுங்க 'சங்கிலிப் பாண்' வாங்கிவாறன்"
"பாணா? விடியச்சோறு கொண்டுவர யில்லையா?"
பறுனாந்து அதிர்ச்சியாய் "அப்பவே சொன்னியா
போட்டுக் கொண்டு வந்திருப்பனே கூடச்சோறு"
"பறவாயில்லை யண்ணே பகலொரு பொழுதுதானே!
பயங்கரக் காத்தால தொழிலா போனது
சோறு காச்சிட அம்மாவுக்கும் சுகமில்ல
சீராயிற்று காத்தெல்லா ஏதும் கிடைக்கும்" 170



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தது பயணம் 'ஜெஹ்றி'யை நோக்கி
தெளிவில்லை பறுனாந்தில் கோப்பி அருந்தியும்
திடமற்று வருவதை தாங்காத உதயகுமார்
"தலையிடி யாண்ணே! தடுமாறி வாறீங்க"
"உடம்பெலாம் நோகுது மகனே அதுதான்"
"உடம்புக்கு முடியாட்டி நிண்டிருக்க லாமண்ணே"
"நடக்கிற விசயமா? நானென்ன தனியாளா?
நாலுபணம் இருந்தாத்தானே நாங்க சீவிக்கலாம்"
171

"குமருகள் மூண்டு முடிக்காம இருக்குதுகள்
கரைசேர்க்க கனகமும் சீட்டென்று அலையிறாள்
சமையலுக்கு அற்றோமுக்கு என்னதம்பி செய்யறது?"
சரியெனத் தோன்றிட தலையசைப்பில் உதயகுமார்
" 'கம்பசில' படிச்சனி 'கவுண்மென்ற்' வேலையெண்டா
கஸ்ரமில்லாம நீயும் காலத்த போக்கலாமே"
"நிம்மதித் தொழிலண்ணே! இதென்ன இழக்கமானதா?
நாங்க ஆருக்கும் பயப்பிடத் தேவையில்ல"
172

பதிலேதும் கூறாது பரிவுடன் பார்த்திட
பெருமையாய் மார்பினை நிமிர்த்தி நின்றான்
புதுவேகம் பெற்றதாய் புல்லரித்து சிலிர்த்திட
பறுனாந்து நடந்தார் பக்கங்களில் இருவரும்
பாதை திரும்பியது மவுண்காமல் சந்தியில்
"பறுனாந் தண்ணே இப்பத்தானா போறீங்க?
கெதியாப் போங்க எல்லாரும் போயிற்றாங்க"
குரலால் நடையில் வேகத்தைக் கூட்டினர்
173

அருகிருந்த மரத்தில் ஆந்தையின் அலறல்
அதிர்வாய் ஒலித்திட அச்சத்தில் பதட்டம்
குரல்வந்த திக்கில் காறித் துப்பினர்
காரண மில்லாத கொள்கை முனைப்பால்
விரைந்தனர் செவிகளில் வேண்டாத அவ்வொலி
விழாமல் இருக்க வேண்டு மென்பதால்
பரபரப்பு ஆந்தையின் புலம்பலுக்கு அர்த்தம்
புரிந்து கொண்டவர் போலவே மூவரும்.
174



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறங்குதுறை

கணீரென ஒலித்தது யாகப்பர் ஆலயக்
　　காலைத் '**திருந்தாதி**' கலங்கலற்ற ஒலியாக
மணியோசை கேட்டதும் வீட்டுச் சேவல்கள்
　　மதில்மேல் ஏறிநின்று ஊரெழக் கூவின
இணையாக நாய்களின் ஊளையும் துலங்கிட
　　இதய நோயாளர் இதயத்தில் படபடப்பு
இனிமையும் கொடுத்தது இயல்பான ஒலிகளாய்
　　இராகத்துக்கு ஒத்ததாய் இசைவு கொண்டதால்
175

தொழிலுக்குச் செல்லத் தயங்கிய படகுகள்
　　தரித்து நின்றன இறங்குதுறை இருமருங்கும்
தொழிலை மறந்ததாய் செல்லாது கிடந்தன
　　'**தலைக் காற்றால்**' தொழிலிழந்த ஓடங்கள்
எழிலாய் மிளிர்ந்த இவையாவும் நிலவொளியால்
　　எண்ணத்தில் குவிந்தது ஏற்புடை காட்சியாய்
பொழிந்த அதிகாலைப் பனித்துகள் மென்மேலும்
　　பொலிவைக் கொடுத்தது பார்வைக்கு விருந்தாய்
176

இறங்குதுறை அந்தத்தின் குறுக்குப் பாலம்
　　இளமையைத் தற்போது இழந்து நின்றது
இறக்கி ஏற்றிட இயங்கிய பாரந்தூக்கி
　　இல்லாமற் போயிற்று இரும்பு கறளாகி
ஆறிடப் பயன்பட்ட பழங்கால மண்டபங்கள்
　　அத்தியாவசிய கூரையுடன் அனைத்தும் இழந்தன
மாறிய நிர்வாண மயமான கோலத்தில்
　　மனதைக் குடைந்து வலிதரும் காட்சிகள்
177



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்குப் பாலத்தில் கட்டிய படகினில்
'கிறிஸ்ரியன்' 'பெனடிற்' கலமோட்டி இருந்தனர்
இறங்குதுறை மேலாய்த் தெரிந்த '**அணியத்தில்**'
'தூயஒளி' எனப்பெயர் தூயவெண் நிறத்தில்
உறங்காத நிலவின் ஒளிபட்டுக் கண்களை
உறுத்தி வலிந்து இழுத்தது 'தூயஒளி'
இறங்கு துறைமீது உரசிடும் அலைகளால்
இளகியெழும் படகினால் இரசனை தெரிந்தது 178

காலையில் திருமணம் கிறிஸ்ரியன் மகளுக்கு
கடமையாய் அதனைக் கொண்டிருந் போதுமவர்
விலையிலா கடமையில் வழுவினைத் தவிர்த்திட
வழமைபோல் வந்தார் வழிகூறிச் சென்றிட
அலைமோதும் கடல்மீது அணிசெய் தொழில்மீது
அசையாத நம்பிக்கை அவருக்கு உள்ளதால்
தொலைதூர நோக்கில் தொழிலுக்கு வழிகாட்டி
திறம்பட செய்வதில் தனித்துவ மாகினார் 179

திருமணம் நிகழ்வதால் தொழிலுக்கு சென்றிட
தடையாக இருப்பினும் தொழிலது சிறப்புற
இருந்திடும் நோக்கில் இயன்ற வழிமுறை
இயம்பி வழியனுப்பும் எண்ணமே அவருக்கு
விரும்பிய 'பாடு'க்கு விரைந்து சென்றால்
மீன்களை பிடித்திட முடியும் என்பதால்
திரும்பித் திரும்பி தேடியும் தொழிலாளர்
சிறுகவே வருவது தவிப்பைக் கொடுத்தது 180

சிறுதுளி பெருகினால் செறிவாக இருப்பதாய்
தொழிலாளர் சேர்வது திருப்தி கொடுப்பினும்
குறுகிய தொகையோரே குவிந்து நிற்பதால்
கவனத்தை ஈர்த்து கலக்கத்தை கொடுத்தது
வேறொரு 'பாடெ'னில் வேதனை கொண்டிடார்
விரைகின்ற பாடோ முற்றும் மாறானது
ஊறு ஏதுமின்றி உழுதிடக் கடலை
ஒன்றித்த தொழிலாளர் ஒருதொகை வேண்டும். 181



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புறப்பாடு

படகிலும் துறையிலும் பிரிந்திருந்த வாலிபரின்
பலரகக் கேலிப் பேச்சின் கலகலப்பு
தடையாய்ப் பெரியோரின் அதட்டலின் நச்சரிப்பு
தொலைந்த வாழ்வின் சிறப்பை கிளறுவதால்
அடையாது விடுபட்ட விருப்புகளின் உரையாடல்
அணியென சேர்ந்திடும் வீராப்பின் குரல்கள்
அடைந்த சாதனையை அவரவர் உரைத்திட
அதனா லெழுந்து ஆக்கிரமித்தது சிரிப்பொலி
182

வேகமிழந்த காற்றால் வலுவிழந்து எழுந்த
வரட்சியான அலைகளின் விசும்பலு மிணைந்தது
பகுதி பூராவும் பெருமொலி ஆரவாரம்
பலவித ஒலிகள் பேச்சுக்கள் சீண்டல்கள்
அகமும் குளிர்ந்திட இளையோரின் விளையாட்டு
அதனை விரும்பாத முதியோரின் முணுமுணுப்பு
பகைமை மறந்து பலவாறாய் உறவாடினர்
பலரும் நேரத்தைப் போக்கிடும் நோக்கில்
183

சிறுவன் 'ஜெயகாந்தன்' சிறப்பாகக் 'குழப்படி'
சீண்டுதல் அவனுடன் சேர்ந்து பிறந்தது
குறும்புத் தனங்கண்டு குதூகலிப்பர் பலரும்
குழந்தையாய் நின்றான் கலங்கலற்ற உள்ளத்தால்
வீறுநடையில் 'மவுண்' முடக்கால் திரும்பி
வருவதைக் கண்டதும் ஜெயகாந்தனின் அதட்டல்
புறப்படத் தயாராக படகினில் அனைவரும்
பார்வையிற் பட்டனர் பதுமை யானவராய்
184



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படகிலி ருந்தோரை பார்த்தபின் மவுணிடம்
பிறந்தது பெருமூச்சு நேரத்தை நினைத்ததும்
ஓடியோடி ஆளரட்டி ஐந்து மணியாகியும்
ஒருதொகுதி ஆட்கள் ஒன்றிக்காத ஏமாற்றம்
ஆடித்தான் போனவராய் அரவமின்றி படகிருந்த
ஆட்களை எண்ணினார் அடுத்த முடிவுக்காய்
படகில் தொழிலாளர் பாதியே இருந்தனர்
பதட்டத்தில் "எப்பதான் வந்துசேரப் போறாங்க?"
185

"பெனடிற் அண்ணே! ஐம்பதுபேர் வாறதில..."
"பர்னாந்தோட ரெண்டுபேர் வாறாங்க போலிருக்கு"
"மினக்கிடாம வரட்டும் '**லாவு**'ங்க 'லைற்'றால"
மறுகணம் லாவினார் '**தண்டையல்**' பெனடிற்
"டாண்டாண்..." எங்கிருந்தோ கோயில் மணியோசை
அடிவானில் விடிவெள்ளி அரைப்பனை உயரத்தில்
சினத்தால் வட்டமாய் சுற்றிய மவுணங்கு
சுவரோரம் இருவர் இருப்பதைக் கண்டான்
186

"ஆரண்ணே அவங்க? புதுசா வந்தவரா?"
"அவங்களுக்கு தொழில் அற்பமும் தெரியாது"
"தெரியாட்டி வந்தவங்கள தவிர்த்துப் போறதா?
தொழிலுக் கெண்டு வந்திருந்தா கூப்பிடுங்க"
இருவரையும் தண்டையல் வரும்படி அழைக்க
எழுந்து படகில் ஏறினர் தயக்கமாய்
"இருக்குதா சாப்பாடு என்னெண்டு கேளுங்க
இல்லாட்டியும் பறவாயில்ல இருக்கிறதில குடுக்கலாம்"
187

புதியவரை அன்பு பாராட்டி மற்றையோர்
படகில் அமர்ந்திட பார்த்திடம் கொடுத்தனர்
புதியவர் வரவா மவுணது சினமா?
படகில் வழமையான பகிடிக ளில்லை
புதுமையாய் பேச்சின்றி பண்பாடு காத்தவரை
'பெனடிற்' அழைத்தார் பேச்சுக் கொடுத்து
எதையும் காதிலே ஏற்றுக் கொள்ளாமல்
எதுவித பதிலும் இயம்பாது இருந்தனர்
188



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சிழுக்க நடந்து வந்தவுடன் படகிலேறிய
மூவரையும் மவுண் வெறுப்புடன் பார்த்தான்
அச்சமயம் வேறெவரும் வருவதைக் காணாததால்
"அண்ணே! இஞ்சின 'ஸ்ராட்' பண்ணுங்க
வீச்சான முப்பது ஆட்கள் இருக்கிறாங்க
மினக்கட்டு பயனில்ல வாங்க போவோம்"
நச்சரிக்கும் மனத்தை நிதானமாய் ஒதுக்கிவிட்டு
நலமெனப் பட்டதை நினைத்திடத் துணிந்தான்

189

"நேற்றைக்கு ரெண்டு '**வார்த்தைப்பாடு**' தம்பி"
"நேற்றைய 'வார்த்தைப்பாடு' நீளுதா இண்டைக்கு?"
"முற்றா முறியாதே குடிச்ச சாராயம்"
மனதைத் திறந்து வாய்விட்டுச் சிரித்தனர்
"மற்றக் கலியாணம் மேலாப்பாச்சி மகளுக்கு
மிச்சத்துக்கு இருக்கே வசமா இண்டைக்கு"
சற்றும் எதிர்பாரா தெழுந்து விரிந்த
சிரிப்பொலி மகிழ்வில் திகழவே செய்தது

190

மேலாப்பாச்சி தொழிலுக்கு வராது விட்டதால்
மவுணின் உரையாடல் விரிவாக இருந்தது
மேலாப்பாச்சி பணியை ஏற்றதன் பின்னர்
விரையும் பெரியதொரு 'பாடு' இதுதான்
சலசலப்பு இல்லாது சங்கடத்தை விளக்கி
செழிப்புற வாழ்த்திச் சென்றார் 'கிறிஸ்ரியன்'
ஒலியை எழுப்பி இயந்திரம் உறுமியதும்
ஒருகணம் அனைவரும் இறைவனை வேண்டினர்.

191



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடு நோக்கி

வெற்றிலை போட்டிட '**கானாத்தடி**' பிடிப்பை
விடுவித்த நிலையில் தண்டையல் '**கடையாலி**'ல்
இறங்குதுறை அருகாமை கிடந்த 'தூயஒளி'
இயந்திர உந்தலால் இலேசாக நகர்ந்தது
தெற்காக அகன்ற 'அணியத்தை' நீரோட்டம்
திருப்பியது '**சுக்கானின்**' கட்டுப்பாடு இன்மையால்
துறையை மீண்டும் தொட்டது தடுமாறி
சடுதியாய் கண்ணுற்று கத்தினர் பலரும் 192

தன்னைச் சுதாரித்த தண்டையல் தன்தவறு
தெரிந்ததால் சட்டெனக் கானாத்தடி பற்றினார்
"என்னண்ணே பின்னுக்கு என்ன செய்யிறீங்க?
எல்லாமே இண்டைக்கு எதிர்மாறா இருக்கு"
'பெனடிற்' மௌனமானார் பலரதும் ஏச்சுகளால்
படகு மெல்லப் பாலமிருந்து நகர்ந்தது
நின்றதெரு நாய்களின் நீட்சியான ஊளை
நுழைந்தது செவிகளில் இயந்திர இரைச்சலிலும் 193

'ஒல்லாந்தர்' காலத்து ஒடுங்கிய ஆற்றுவாயின்
ஓரமாய்ப் பயணித்தது அமைதியாய் 'தூயஒளி'
அல்லாட்ட மில்லாது சுக்கானைப் பிடித்து
அனுபவத்தைக் காண்பிக்கும் அவாவில் தண்டையல்
துல்லியமாய் குருநகர் தெருக்களின் மின்னொளி
துலங்கின இரசனைக்கு தூபம் இடுவதாய்
மெல்லிய காற்றின் வீசலால் தொழிலாளர்
மேனியும் சிலிர்க்க மெய்மறந் திருந்தனர் 194



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குரிய வேகத்தில் தொடர்ந்த படகு
திரும்பியது தரிப்பதாய் வேகத்தைக் குறைத்து
'புனித அந்தோனியார்' ஆலயம் நோக்கியே
படகில் இருந்தோர் பக்தியாய் வணங்கினர்
தன்பயணத் திசையில் தடுமாற்றம் ஏற்படாது
திரும்பிய படகில் தழும்பல் இருந்தது
விண்மீன்கள் வழங்கிய வழிகாட்டல் துணையுடன்
வழமையின் பாதையில் தொடர்ந்தது பயணம் 195

கிழக்கின் அடிவானம் கருஞ்சிவப் பானது
குருதியில் மூழ்கி வருவதாய் கதிரவன்
துலங்கினான் பார்வையில் துயருற்ற களமென
திரையான செவ்வர்ண ஒளிக்கீற்று ஆங்காங்கு
நிழலாக வெண்மை நிறைந்த சாம்பல்
நிறங்கொண்ட மேகங்கள் நிஜத்தை மறைத்தன
அழிந்தும் அழியாமல் அணைந்தும் தெரிந்தமை
அனைவரது கண்ணையும் தன்வசம் ஈர்ந்தது 196

கவிஞரே வருணிக்க கலங்கித் தவிக்கும்
கற்பனை செய்திட இயலாத அற்புதம்
ஓவியரை ஒதுக்கிடும் ஒருவகைக் கலவையாய்
ஓசையின்றி வீசியது சுகந்தமான காற்று
'**கவிர்**' புரளும் கடல்நீரின் எழில்காட்டி
களிப்புற உந்தலாய் கடலலையின் தாலாட்டு
குவிந்து கிடைத்த கலவைச் சுவையில்
குளிர்ந்த நிலையில் கலத்தி லிருந்தோர் 197

இருளான நேரத்தில் இடரினை நீக்கிட
இடமுணர்த்தும் 'வெளிச்சவீடு' கடந்த பயணம்
விரிந்த கடல்நோக்கி விரைந்து திரும்பிட
வானிலே சிறிதாய் வெளியேறினான் கதிரவன்
பேரொளி தோன்றிட பூமியொளி கண்டிட
பயணம் 'மண்டைதீவை' நோக்கித் திரும்பியது
சிரமம் தவிர்த்து செல்லும் பாடினை
சகலரும் அறிந்ததால் சிறப்பான உரையாடல் 198



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசியகாற்று பலமற்று விளங்கிய போதிலும்
விரிந்த கடலின் வியப்பான நீரோட்டம்
இசைவின்றி இருந்ததால் இடர்பட்ட படகின்
ஈடாட்டம் வேகத்தை இல்லாமல் செய்தது
வீசியது காற்று முற்றிலும் எதிர்பாராமல்
வலம்வந்த கருமேகம் மறைத்தது கதிரவனை
ஆச்சரியம் போலவொரு பகுதியில் மழையாக
அள்ளிக் கொட்டின வானத்து முகில்கள்

199

பொறாமை கொண்டதாய் படகிலி ருந்தவரை
பெரும்பாலும் குளிப்பாட்டி பறந்தது விரைவாக
முறைமாறிய காற்றும் வெளிப்பட்ட கருமேகமும்
மின்னலென மறைய மீண்டும் கதிரவன்
குறுநேர ஆரவாரம் குதூகலம் இணைந்ததாய்
கடலில் துள்ளியது '**தவ்வல்**' மீனிலொன்று
குறுக்காகப் பாய்ந்து கலத்தினுள் வீழ்ந்து
கதியின்றித் துடித்ததை கவலையில் பார்த்தனர்

200

'டுடும்டும்...' ஒலியால் செவிப்பறை அதிர்ந்தது
"துலைவார் எங்கேயோ 'செல்'லடிக் கிறாங்க"
"அடிக்கிறது முனைக்குச் சோளகத்தால போலிருக்கு"
"அங்கால பெரிய 'காம்ப்' இருக்கெல்லா"
"நெடுகத்தானே சத்தத்தால நெஞ்சு வலிக்குது"
" '**வளிச்சல் போட்**'டுகள் வாடிக்குப் போகுது"
" '**கட்டா**' பட்டிருக்கு கடல்வரை பதிஞ்சிருக்கு"
"கடலில பிரச்சின ஒண்டுமில்ல போலிருக்கு"

201

'மண்டைதீவு முனை'யை விரைவாய் நெருங்கியதும்
முணுமுணுப்பு அடங்கி மௌனம் நிலவிற்று
கண்கண்ட தூரம்வரை '**மான்பாடாய்**' இருந்ததால்
கடலடி வெண்மணல் கண்ணுக்கு விருந்தானது
கண்ணாடியாய் தெரியும் கலங்காத கடலடியில்
கடற்பாசி குவிந்தும் குவியாத பாறைகள்
வெண்மணலில் குன்றுகளென முளைத்து முகங்காட்ட
விழிமூட மறந்தவராய் வாயைப் பிளந்தனர்

202



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்நீர் வழங்கிய 'மான்பாடு' நிலையுடன்
காலைக் கதிரவன் கதிரும் பரவியது
கடலடியின் கணிசமான தூரத்தில் தெரிந்தது
கலங்கலற்ற கடற்பகுதி கரையோரம் நெடிதிலும்
கடலில் குதித்தெழும் ஆர்வத்தைத் தூண்டியது
கடலன்னை மடியின் கண்கொள் ளாக்காட்சி
அடைந்த மகிழ்வில் அகன்றவாய் மூடாநிலை
அங்கிருந் தவருள் எவர்க்குமே விலக்கில்லை 203

மெதுவாக வந்தபடகு முனையின் கடலடி
மணலை வழித்தும் வழியாமல் நகர்ந்தது
புதையுறா திருக்கும் பகுதியில் நங்கூரமிட
பேச்சின்றி இயந்திரம் பணிந்து அடங்கியது
பாதிவட்ட வடிவில் பெருகி முந்தியது
படகினால் ஏற்பட்ட கடல்நீரின் '**உவட்டு**'
மோதியது அலையாக அடுத்தடுத்து கரையில்
மீதமாய் ஆட்டம் கண்டது படகு 204

கடலடி நிலத்தைக் காட்டிலும் வெண்மணல்
கரையி லெங்கும் கொட்டிக் கிடந்தது
கடலருகில் மணல்மேல் கிடந்த 'படிகநீர்'
கண்ணாடி போலாச்சு கதிரவன் ஒளிபட்டு
தடையின்றி நடைபோட்ட தறுதலை நாய்கள்
தாராளமாய் அங்கு தரித்து நின்றன
கிடைக்கும் தமக்கு கடலுண வென்பதால்
குரைத்து மகிழ்ந்து குதூகலம் கொண்டன 205

முனையின் கரையோர வெளியில் பச்சையாய்
'**முள்ளிக்கொடி**' மறைத்தது மணலை முற்றாய்
வெண்மணல் தெரிய வரிசையாய் நின்றன
வளர்ந்து செழித்த 'புங்கை' மரங்கள்
கண்கள் சிமிட்டின 'ஈச்சம்பழ' மரங்களில்
கறுப்புடன் சிவப்பு நிறங்களில் கனிகள்
கண்ணுக்கு விருந்தான முப்பரிமாண காட்சியாய்
களநிலை இருந்ததால் குதூகலத்தில் அனைவரும் 206



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாப்பாச்சி நீர்நிலை அறிந்திட எண்ணி
மரக்கோலை கடலில் ஊன்றிப் பார்த்தார்
நிலவுபடும் 'வடு'க்காண நெருங்கவில்லை நேரம்
நிலவிவந்த தொழில் நுணுக்கமாய் இருந்தது
காலமாற்ற வழிநின்று கலியுகத்துள் புகுந்தாலும்
கண்டிப்பாய் இயற்கையின் ஒன்றிப்பு அவசியம்
சொல்லாமல் செயலாக்கும் சுயநிலை தொடர்ந்திட
சகலரும் உணவுண்ண சிறிதோய்வு கொடுத்தார்

207

'கடற்பசி பேய்ப்பசி' கண்டறிந்த உண்மையால்
காவிவந்த விடியச்சோறை கைகளிலே தாமெடுத்தார்
விடியச்சோறு இல்லாத உதயகுமாருக்கு தனதுணவில்
வழங்கி மனநிறைவு அடைந்தார் பர்னாந்து
கொடுத்துதவ "கொண்டு வந்தனியா சோறுதம்பி"
கேட்டிடப் பற்றிக், சேவியரும் "ஓமுங்க"
"எடுத்துச் சாப்பிடு கிருஷ்ணாவும் சாப்பிடு"
எல்லோரும் அருந்தலில் இணைந்து கொண்டனர்

208

"குழப்படி இஞ்சவாடா" அணியத்தி லிருந்து
குரல் கொடுத்தார் கடுப்பாக மேலாப்பாச்சி
குழப்பத்தில் "அலோசியஸ் அண்ணன் தண்ணி
கேக்கிறார் அவருக்குக் குடுத்திட்டு வாறன்"
'குழப்படி' என்றவொரு கூப்பாட்டுக் குரல்
குறையாமல் இருப்பதைக் கேட்கலாம் படகில்
வழுவின்றி எதையும் விரும்பிச் செய்துமே
மாசகற்றி அனைத்தும் ஒழுங்கு படுத்துவான்

209

வேலைக்குப் பணிக்க வேண்டியதே இல்லை
வலையிழுக்க நிர்ப்பந்தம் முறையிடு வாரில்லை
வலிந்து ஏதேனும் செய்தவா றிருப்பவன்
வந்தபணி முடிந்ததும் விலகிச் சென்றான்
மேலாப்பாச்சி முன்னால் மரியாதையாய் நின்றான்
" '**பாதங் கழுவின தண்ணி**' தரயில்லையா?"
"இல்லையுங்க அவசரத்தில எடுத்துத்தர மறந்திட்டாங்க"
"இல்லாட்டி நீயாவது எடுத்து வரலாமேயடா!"

210



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணனும் சேவியரும் கடலுக்குப் புதித்தனால்
கவனமெலாம் மண்டைதீவு கரையின் மீதுதான்
கரையோரம் **'இராவணன்மீசை' 'வெண்சொறி' 'சாதாளை'**
குவிந்து கிடந்தன கவனத்தை ஈர்த்ததாய்
இருவரும் விழுங்குவதாய் ஏறெடுத்துப் பார்த்தனர்
இடையிடையே உயர்ந்து இணைந்த வெண்மணலை
பிரமிப்பு மிகையாக புசிப்பதை மறந்து
பார்வையால் சுவைத்தனர் புதிதாயி ருந்ததால். 211



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலை உழுதிடல்

மேலாப்பாச்சி உத்தரவால் மகிழ்வு பொங்க
முண்டியடித் திறங்க முயன்றனர் தொழிலாளர்
சேலைத் துண்டை 'கச்சை'யாய் கட்டியபின்
சாரத்தைக் கழற்றி தலைப்பாகை யாக்கினர்
மேலாடையை கழற்றி மடித்து பாகையில்
'மடிப்பெட்டி' தன்னையும் செருகினர் முதியவர்
காலத்தின் மாற்றத்தால் கச்சையை ஏற்காமல்
காற்சட்டை அணிந்து கொண்டனர் வாலிபர் 212

முதியவர் இளையோர் இருபதுவரை '**கடவத்தாரராய்**'
முனைப்புடன் இறங்கினர் மறக்காமல் பழங்கயிறை
புதிதாக வந்தவர் பழங்கயிறைப் பெற்றிடினும்
பரந்த கடல்கண்டு கடும்பயம் அவர்களுக்கு
பாதியுடல் தண்ணீரில் பதிய இறங்கியோர்
வணங்கியே நீர்தொட்டு இட்டனர் '**நீரடையாளம்**'
நெத்தியில் வயிற்றில் தோள்களில் தொட்டிட
நிரையாய் வந்தோரும் செய்தனர் அவ்வாறே 213

கடவத்தாரர் இழுக்கக் கொடுத்திடப் படகிருந்து
'**கம்பான்**' கயிற்றை கொணர்ந்தார் கரைக்கு
தடியினை மணலிலூன்றி சரித்துக் கட்டிவிட்டு
தலையசைத்து 'லாவி'டப் படகும் அகன்றது
கடலின் ஆழம்தேடி கைநீட்டிய மேலாப்பாச்சி
குறித்த 'பாடு'க்கு கூறினார் உரியவழி
படகை ஆர்வமாய் செலுத்தினார் 'தண்டையல்'
புரிந்தவராய் பாட்டின் எல்லையை நோக்கி 214



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் நால்வர் துணையாக படகிலிருந்து
தொடராய் விடுபட்டது கம்பான் கயிறுகள்
'அழி'களாய் பதினைந்து அடுத்து இறக்கிப்பின்
அவற்றின் தொடராய் அணைத்த '**ஈரவலை**'
'**ஈலக்கண்ணி**' '**நடுவணி**' '**மாலக்கண்ணி**' '**மாரிவலை**'
இணைப்பாய் இறங்கிட ஏறுமுகமாய் சென்றது
தொழிலுக்கு உயிரான '**மடி**'யுடன் 'மாரிவலையை'
தொடுத்து மறுபக்க தொடராய் ஆக்கினர் 215

'மாரிவலை' முனையை மடியுடன் இணைத்ததும்
மடிமுதல் வலைகளை முறைப்படி இறக்கிட
கரையை நோக்கிய இறங்கு முகமாய்
கடலைக் கிழித்து இழுத்தது படகு
நிரையான வலைகள் '**மடவலை**' பாரத்தால்
நிலத்தடி அமிழ்ந்திட, '**மோவலை**' '**புணை**'யால்
நீர்மேல் மிதந்திட நிமிர்ந்த வேலியாகி
நீள்சதுர மறிப்பில் நிரையாகி நின்றன 216

வேலியாய் நிற்கும் வலைகளுக் கிடையில்
வந்திட்ட மீன்கள் வெளியேற வாய்ப்பில்லை
விலகிட முடியாமல் மடியினுள் புகுந்திடும்
வாழலாம் குழுமமாய் என்கின்ற நினைப்பில்
வலைப்பொறி முறைசில மீனினத்தை தடுக்காது
வளைந்து நெளிந்து மீண்டிடும் இலகுவாய்
குலையாத உறுதியையும் குலைத்திடும் என்பதால்
கடலாய்ந்து செய்வர் கரைவலைத் தொழிலை 217

கல்லால் அமிழ்ந்து புணையால் மிதந்து
கடலை அடைத்து உழுதன வலைகள்
துல்லியமாய் இழுபடும் திறனை ஆய்ந்து
செய்கையால் தகவல் சொல்லுவார் மேலாப்பாச்சி
சொல்லி வைத்ததாய் இழுபட்டு வருகின்ற
'மேற்புறத்து' வலைகண்டு 'லாவி'னார் வேகமாய்
மேலாப்பாச்சி லாவுதலை எதிர்பார்த்த 'கடவத்தார்'
முனைப்புடன் இழுத்தனர் பழங்கயிறை இணைத்து 218



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்நோக்கி இழுத்தபடி விரைந்த தொழிலாளி
முன்னால் வந்துபின் இணைந்தார் முன்போல
திண்ணமாய் ஒத்திசைந்து திறனுடன் இழுத்திட
தொடர்ந்தனர் ஒன்றித்து '**அம்பா**' பாடலை
"காணிக்கை மாதாவே - அய்லெசா அய்லெசா
கண்பாரும் மாதாவே - அய்லெசா அய்லெசா
எண்ணமுற்றாள் இரக்கமுற்றாள் - அய்லெசா அய்லெசா
ஏகனுடன் தஞ்சமுற்றாள் - அய்லெசா அய்லெசா ..."

219

தொடர்ந்த 'அம்பா'வின் தொனிக்கு ஏற்றதாய்
தொழிலாளர் ஓடியோடி சரிந்து இழுத்தனர்
'கடவத்தால்' இழுத்துக் குறுக்கித் தொடர்ந்திட
கரையை நோக்கி இழுத்தது படகு
முடங்காத சமமான முன்னேற்ற இழுவையால்
முன்னைவிட 'பாட்டெல்லை' முற்றாய்ச் சிறுத்தது
'மடி'யும் சமாந்தரமாய் முன்னோக்கி நெருங்கிட
முனைப்பு தொழிலாளரில் மிகுதியாய் தெரிந்தது

220

கரையை நெருங்கிட கடவத்தாரில் சிலர்
குழுவாகச் சேர்ந்து கடந்தனர் மறுவளம்
கரைவந்த படகிருந்த 'கம்பானை' அவிழ்த்து
கரைக்கு இழுத்துவர கலந்தன குழுக்கள்
கரையெங்கும் 'அம்பா' கோலோச்சித் தொடர்ந்திட
கடலுழுத 'ஈரவலை' கரையைத் தொட்டது
அரணான வலைகளும் அணியாய் கரைக்குவர
அகன்ற இடைவெளி அருகாகித் தெரிந்தது

221

"அண்ணே! நானும் வலைய இழுக்கட்டா?"
அண்மையில் கேட்டதால் அறிந்திடத் திரும்பினர்
"அண்ணே! வட்டுக்கோட்டை சொந்த ஊரண்ணே
அவசரமாப் போகவேணும் உங்களோட வரட்டா"
பண்ணைப் பாலத்தின் பயணத் தடையால்
பயணிகளின் இன்னலைப் பலரும் அறிவர்
நீண்டதூரம் சென்றேதான் பயணிக்க வேண்டிய
நடைமுறை நிலவியதால் நட்புடன் இணைத்தனர்

222



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலையை இழுத்திடும் பிரிவினர் இடைவெளி
வரவரக் குறைந்திட வேகமோ கூடிற்று
'மேலாப்பாச்சி' பாடுக்குள் மூழ்கிச் சென்று
மடியை நெருங்கி எழுந்தார் சுழியோடி
மேலேயிரு கைகளை உயர்த்தி வலமிடமாய்
மாறிமாறி 'லாவியது' விளங்கியது அவர்க்கு
மெல்லத் தொடர்ந்தது மகிழ்வின் ஆரவாரம்
முழக்கமாய் ஒலித்தது முழுநீள 'அம்பா' 223

"மாறுதடா கீழ்ப்புறமாய் - லைலா - கீழ்ப்புறமாய்
மதிகொண்டோன் மண்டாடி - லைலா - மண்டாடி
மண்டாடி மனங்குளிர - லைலா - மனங்குளிர
மீண்டுஏறி வாவலையே - லைலா - வாவலையே
மீனாக ஓடியண்ணே - லைலா - ஓடியண்ணே
மிதந்து விளையாடையிலே - லைலா- விளையாடையிலே..."
தேனாக இனித்தது தெரியவந்த தகவல்
தொடரான உற்சாகம் தொட்டது உச்சத்தை 224

ஆரவாரம் கூச்சல் 'அம்பா' பாடலென
அலைபோல எழுந்தது முப்பரிமாண ஓசை
"நேரமாய்யா போயிற்று நிக்காம இழுக்கிறாக?"
நாரிகடுக்க இழுக்கும் சேவியரின் கேள்வி
"சீராக இழுத்தா மீனெல்லாம் வெளியேறிடும்
சோத்துக்கு பறவாயில்ல போலத்தான் இருக்குது
'போராக' லாவினதப் பார்த்தாயே சேவியர்"
பார்வையில் மகிழ்ச்சி பிறந்தது உற்சாகம் 225

மெய்நோ பாராது முயன்றவரை இழுத்தனர்
மீறினால் ஏதாவது விடுபடும் என்பதால்
"எய்...எய், எய்..எய், எய்...எய், எய்..எய்..
எய்...எய், எய்..எய், எய்...எய், எய்..எய்...
எய்...எய், எய்..எய், எய்...எய், எய்..எய்..."
எல்லோர் வாய்களும் இணைந்து ஒலித்தது
மெய்சிலிர் துள்ளல் முழக்கம் அவரவர்
மனத்தின் மகிழ்வை மிகையாய்க் காட்டின் 226



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரிரைச்சலாய் இருந்த பல்வகை ஒலியுடன்
பக்கப் பாட்டாய் புகுந்தது அம்பா
"வருகுதடா கப்பலொன்று - கையெங்கே ஞானசௌந்தரி
வாழைக்காய் பாரமேந்தி - கையெங்கே ஞானசௌந்தரி
ஏலம்மா ஏலேதண்டு - கையெங்கே ஞானசௌந்தரி
ஏவலம்மா ஏலேதண்டு - கையெங்கே ஞானசௌந்தரி
ஐயோமச்சான் கையைவிடு - கையெங்கே ஞானசௌந்தரி
ஆச்சிகண்டா அடிக்கப்போறா - கையெங்கே ஞானசௌந்தரி..."

227



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்படைக் கலம்

“சோளகத்தில பாருங்க ‘நேவிபோட்’ நம்மள
தேடித்தான் வருகுது” உதயகுமார் கூறிட
களைப்பு சலிப்புடன் கவனித்த பர்னாந்தின்
கண்களில் பட்டது குறிப்பிட்ட படகு
“சுளையாக அள்ளிட வாறாங்க, அவங்களுக்கு
சுவறுறது எங்கட உழைப்பு மீன்தான்”
“நல்லாப் பாருங்க பின்னாலையும் ரெண்டு
நிரையாக வருகுது ‘கண்போட்’டும் கிடக்குது” 228

இருவரும் பார்த்ததை ஏனையோர் பார்க்கவில்லை
இழுவையில் கவனம் இருந்த காரணத்தால்
அருகாமை வந்தன அதிவேகப் படகுகள்
அப்போது மற்றோரும் அதிர்ச்சி கண்டதனால்
பேரிரைச்சல் வானிலே அம்பாவை மீறியங்கு
பதற்றத்தில் அவர்கள் பயம்மிகக் கொண்டதால்
சரசரப்பு மிகுதியாக சிதறின உணர்வுகள்
சீருடை அணிந்தோரின் உலங்கு வானூர்தியால் 229

கரையில் மணலைக் கோதித் தரித்தன
கடற்படையின் விசைக் கலங்கள் அவ்விடத்தில்
வருகையின் சந்தேகம் விஷ்வரூப மானதால்
விளங்கிட முடியாமல் விழிகள் ஏங்கின
இருகரம் ஏந்திய உயிர்கொல் துப்பாக்கி
இதயத்தின் துடிப்பை இருமடங் காக்கியது
“கறுப்பாய் இருக்கே இவங்கட உடுப்பு?”
கருமைநிற சீருடை கண்டதால் பேதலிப்பு 230



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்படை சீருடை காண்பதோ நீலத்தில்
காரணம் புரியாத கலக்கம் இதனால்
அடைந்த ஆச்சரியம் அனைவர் முகத்தினிலும்
"அவங்க பாகிஸ்தான் பயிற்சி பெற்றவங்க"
குடைந்த கேள்விக்கு கிடைத்த பதிலால்
கலவரம் நீங்கினும் கலக்கம் நீங்கவில்லை
அடைந்த திகிலால் ஆரவாரம் இழந்து
ஆர்ப்பரிப்பு இழந்து அமுங்கியது அம்பா

231

போக்கற்ற நிலையில் பயமது குடிகொள்ள
பிறிதொரு தெரிவின்றி பேச்சின்றி நடுக்கம்
விக்கல் சிலருக்கு விளக்கம் இல்லாமல்
விபரம் புரிந்தவர் வாயடைத்து தயக்கம்
வேகமாக இழுக்க வேண்டிய நேரத்தில்
வேகமற்று இழுத்தால் வெளியேறும் மீனினம்
ஊக்கமற்று சோர்ந்து உளமார வேண்டிடும்
உள்ளத் தவிப்பே உள்ளது முதலிடம்

232

இரைந்த உலங்கு வானூர்தி சுழன்று
எங்கோ பறந்தது ஏக்கத்தைக் குறைக்க
விரைந்த படையினர் மண்மேல் பாய்ந்தனர்
வரிசையாய் நீட்டிய துப்பாக்கி சகிதம்
தரையில் அவர்கள் திரிவதைக் கண்டு
திரண்ட சந்தேகம் தொலைந்தது கணத்தில்
புரையோடும் புண்ணாக பலருள்ளம் இருந்தும்
பார்வையில் இருந்தது புலனாகாப் பாசாங்கு

233

அச்சம் நீங்கிட இழுக்கத் தொடங்கினர்
அம்பாவை பலரும் ஒதுக்கிய நிலையில்
"கச்சானால பாருங்க லிகோரி அண்ணே!"
கையாலே கரையைக் காட்டினான் ஜெயபாலன்
எச்சிலை விழுங்கி ஏறெடுத்துப் பார்த்தவர்
என்னென்று புரியாமல் ஏக்கத்தில் திகைத்தார்
வீச்சாகப் படையினர் வருவதைக் கண்டதால்
வலையை இழுப்பது விடுபட்டுப் போனது

234



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சிலே உண்டான நடுக்கத்தின் அதிர்வை
நன்றாக உணர்ந்தனர் நொடியில் அனைவரும்
"இஞ்சால 'பண்ணையி'ல இருந்தா வாறாங்க?"
இதயத்தை சூழ்ந்த இன்னலின் வெளிப்பாடாய்
"இஞ்சயேன் வாறாங்க சோளகத்தாலும் நிக்கிறாங்க"
"என்னட்ட கேட்டா நானென்ன சொல்ல?"
கொஞ்சங் கொஞ்சமாய் கூனியது அவர்களுடல்
கொடிய பாம்புகள் காலடியில் நிற்பதுபோல 235

வலைகளை இழுப்பதில் விருப்பற்று நின்றவரின்
விழிமூடா பார்வை வியப்பை காட்டியது
சிலையாய்ப் பலரும் சிரிப்பற்று சிலரும்
விளக்கிட முடியாத வினோத நிலையில்
கொலைக்கும் அஞ்சாத குணத்தைக் கொண்டவர்
கண்முன் உலாவிட கலக்கம் அனைவர்க்கும்
மலையைப் பிளக்கும் மனப்பல மிருந்தும்
பதுமையாய் விழித்தனர் பலதையும் நினைத்து 236

படகினில் வந்திட்ட படையினர் தொழிலாளர்
பக்கமாய் திரும்பி சைகையால் அழைத்தனர்
நடந்து வந்தமவுண் நெஞ்சம் கனலாக
நடுக்கத்தி லவர்களை நோக்கிச் சென்றான்
உடம்பு வியர்த்து ஓடியது நதியாக
ஊமைக் காயமாய் உள்ளம் வலித்தது
மடித்துக் கட்டியிருந்த சாரத்தை கழற்றினான்
"ஏயுனக்கு! சிங்களம் தெரியுமா?," "இல்லையுங்க..." 237



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன் வாடியில் ஒருநாள்

'வளிச்சல்' தொழிலுக்கு மிகையாய்ப் பிடிபட்டு
வாடியில் கிடந்தன முற்றிலும் 'கட்டாப்பாரை'
'கேள்வி' கேட்டிடும் குறியோடு பலரும்
குவியலைக் காண்பித்து கூறினார் '**கூறியான்**'
"கேளுங்க இருபது மீன்கிடக்கு... நூறுரூபா
கழிபடும் ஆயிரத்தி ஐநூறு முதற்கேள்வி"
உள்ளபடி விலையை ஊன்றிக் கூறிட
ஒவ்வொன்றாய் கேள்வி உயரத் தொடங்கியது
238

"ஆயிரத்தி அறுநூறாம்", "ஆயிரத்தி எழுநூறாம்"
"எண்ணூறாம்", "தொளாயிரமாம்", "இரண்டா யிரமாம்"
ஆயத்தம் செய்வதாய் ஆட்களின் கேள்விகளை
அடுத்தடுத்து உரத்து அறிவித்தார் கூறியான்
ஓயாது கேள்விகள் உயர்ந்து சென்றடைந்து
ஒருவாறாய் மூவாயிரத்து ஒருநூறில் நிறைந்தது
வாய்ப்பிலார் மறுகுவியல் மீன்களுக்கு போட்டியிட்டு
விலைகேட்டுப் பெற்றிட குவியல்கள் குறைந்தன
239

கொள்வனவு செய்தவர் கூடையில் சுமந்தபடி
கருவாட்டுக் கொட்டிலை நாடியே சென்றனர்
வளிச்சல் தொழிலாளர் விரைந்து மீன்களை
வாரிக் கொணர்ந்து அவ்விடம் நிரப்பினர்
எள்ளளவும் மாற்றமின்றி இருந்த கேள்வியில்
ஏற்றத்தாழ்வு குவியலுக்கு குவியல் இருந்தது
உள்ளம் குளிர்ந்த உணர்வில் தொழிலாளர்
உரைப்பதில் பெருமை உரிமம் பெற்றது
240



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாப் பாரைகள் கூட்டாய்ப் பட்டதால்
கலகலப்பு மிகுதியாய் காணுமிட மெல்லாம்
வெட்டிப் பிளந்து உப்பிட்டு பதப்படுத்தும்
வேலையில் கருவாட்டு தொழிலாளர் ஒருபுறம்
வீட்டுக்கு செல்வதற்குள் செலவுக்குப் பணம்பெற்று
வாடிக்கை சாராயத்தை வாங்குவோர் ஒருபுறம்
ஓடியாடிய வேலையின் களைப்புத் தீர்ந்திட
ஓடிப்போய் கள்ளருந்தி திரும்புவோர் ஒருபுறம்
241

தொழிலில் பங்கிட்ட 'கறிமீன்'கள் சிலவற்றை
தெரிந்தவர்க்கு கொடுத்திடச் செல்வோர் ஒருபுறம்
செழிப்புறு தேவைக்கென மீன்களை விற்பதற்கு
'சின்னக்கடை' நோக்கி விரைவோர் ஒருபுறம்
தொழிலை விரைவாய் அனுப்பினால் நல்லதென
தொழிலாளர் தமைத்தேடும் சம்மாட்டிமார் ஒருபுறம்
முழுகிவரும் '**முறைத் தொழிலாளர்**' எனஇம்
மக்களிடம் குன்றாத மகிழ்ச்சிக் குதூகலம்.
242



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலில் ஒரு காட்சி

"இண்டைக்கு தொழிலுக்கு போறியா பிரான்சீஸ்"
"இல்லை எனக்கு முறையடா சொல்லு"
"மணிபத் தாயிற்று வெளிக்கிடன்" "ஏனடா?"
"மறந்திட்டியா செவ்வாய்க் கிழமை யெல்லாடா
'அந்தோனியார்' கோயிலுக்கு போக வேணாமா?"
"அடியோட மறந்திட்டன் உடன வாறனடா"
ஆனந்தன் வீதியில் காத்திருக்க நண்பர்களும்
அவ்விடம் சேர்ந்திட ஆர்வமாய் விரைந்தனர்
243

ஒருமைல் தூரத்தில் 'அந்தோனியார்' ஆலயம்
ஒவ்வொரு செவ்வாயும் தரிசனம் வழமை
திரளான பக்தர் சிரத்தையாய் கூடுவர்
தளராத நம்பிக்கை துளிர்கொள நாடுவர்
நேர்த்திகள் தீர்ப்போர் நீண்ட வரிசையில்
நகராமல் நகரும் நிலையைக் காணலாம்
நீரெடுத்து வந்தங்கே 'பாதங்கழுவி'ச் சென்றிட
நாள்பூரா ஆலயத்தை நாடுவோர் ஏராளம்
244

கடற்கரை வீதியால் கட்டவிழ்த்த நிரைபோல
குறுக்கிட்டு நடப்போர் குதூகலத்தில் ஆங்காங்கே
நடந்து செல்பவர் நங்கையர் மட்டுமே
நகைப்புகள் சிரிப்புகள் நளினங்கள் தாராளம்
காட்டுவர் சாகசம் 'ஈருருளி'யில் வாலிபர்
கன்னியரின் புன்னகை கண்டிட ஏங்குவர்
கோடிட்டுக் காட்டின கொண்டிடும் எண்ணத்தை
குறுக்கிட்டு ஓடுகின்ற ஈருருளி வேகத்தால்
245



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்று அமைதி கொண்டதால் ஏற்பட்ட
கடலின் அமைதி கண்டதால் மகிழ்ச்சி
அற்புதக் கடலின் அழகினை இரசித்து
அடியெடுத்து வைத்தனர் அனைத்தும் மறந்து
"சற்குணம் அங்கேற்றா முனையில 'ஹெலி'யடா"
சடுதியாய்க் கேட்டது ஆனந்தனின் குரல்
சற்றும் எதிர்பாரா சொல்லைக் கேட்டதும்
சுட்டிய இடத்தைச் சட்டெனப் பார்த்தனர் 246

'மண்டைதீவு' முனையில் 'உலங்கு வானூர்தி'
வட்டமிடும் காட்சி மறுவற்று தெரிந்தது
"கனக்க 'போட்'டுகள் கிடக்கடா அங்க"
கரையோரம் கிடந்த கலங்களை காட்டினான்
"முனைக்கு கிட்டடியா 'நேவிக்காம்ப்' இருக்கெல்லா
மறந்திட்டியா? அவங்கட 'போட்'டுகளா இருக்கும்"
எண்ணம் சரியென மற்றையோர் ஏற்கினும்
ஏற்காமல் ஆனந்தன் இதயம் துடித்தது 247

இதயத்தின் துடிப்பு இயல்பு போலன்றி
இருந்ததை கணத்தில் உணர்ந் ததாலவன்
உதயனின் வெளிச்சம் உணர்த்திய காட்சியை
உணராதார் நினைவால் உள்ளம் கலங்கினான்
எதிரியாய் இருந்தாலும் இடர்கண்டு துடிப்பவன்
ஏசியதைக் கேட்டதும் ஏறிட்டுப் பார்த்தனர்
புதிதாய் முனையில் பலரது நடமாட்டம்
பார்வையில் குறுக்கிட்டது பயணித்த படகு 248

முகத்துவார வெளிச்ச வீட்டைக் கடந்து
மூன்றில் இரண்டு அமிழ்ந்த நிலையில்
நகர்ந்தது மெதுவாய் நீலநிறப் படகொன்று
"நல்லாப் பதிஞ்சு போகுதடா இப்'போட்'
தாக்கமா கட்டாமீன் பட்டிருக்க வேணுமடா"
"தங்கராயர் போட்டிது சரியாப் பிந்தீற்று"
"'கச்சதீவு'ப் பக்கமா போனவங்க அங்கால
கிடந்த போட்டுகளுக்கு பறவாயில்ல மீன்கள்" 249



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"'வெள்ளாப்பு' மீன்கள் விழுந்திருக்கு அதுதான்
வரப்பிந் தீற்றாங்க வாடியிப்ப கலைஞ்சிடுமே"
"வேளைக்கு வந்துமே விலைகேட் பாரில்லை
வாடியில 'அறா' விலைதான் கேட்பாங்க"
அளவளாவி நண்பர்கள் ஐக்கியம் ஆகியும்
ஆனந்தன் அக்கறை அற்றங்கு நின்றான்
அளவுக்குள் அடங்காத அங்கலாய்ப் பவனுக்கு
அகத்தில் சோகம் முகத்திலே வாட்டம் 250

"அங்கேற்றா முனையில 'ஹெலி' சுடுகிறான்ரா"
ஆவேசம் ஓங்கிட ஆனந்தன் கூறினான்
தங்களை மறந்து தர்க்கத்தில் நின்றவர்கள்
திடுக்கிட்டு பார்த்தனர் திகைப்பு மேலிட
அங்கு தென்பட்ட மனித அசைவுகள்
அவர்களைத் திணறிடச் செய்திட தடுமாற்றம்
அங்கம் நடுங்கிட ஆள்மாறி ஆள்நோக்கி
ஆச்சரியம் மேலிட அமைதியாய் நின்றனர் 251

உலங்கு வானூர்தி உருண்டு சுடுவது
உண்மை என்றனர் ஒலிக்கும் ஒலிகளால்
"ஹெலிமட்டும் சுட்டுதெண்டா சத்தங்கள் இப்பிடிக்
கேக்காது கரையிலயும் 'நேவிக்காரர்' சுடுகிறாங்க"
"காலையில பொடிகள் 'காம்ப்'க்க குதிச்சாங்களோ
கனநாளா இல்லாத சத்தமிப்ப கேக்குதே"
"இல்லாம இத்தனை சந்தடி இருக்குமா?"
இடைவெளி இன்றித் தொடர்ந்தது உரையாடல் 252

'வேட்டு' ஒலிகளுடன் உலங்கு வானூர்தியது
வட்டமிட மனிதர்களின் அசைவினையும் கண்டு
வெட்டை வெளியினிலே விளைவது ஏதென்று
விளங்கிட முடியாமல் வாயடைத்து நின்றனர்
அடங்கின சத்தங்கள் ஐந்தாறு நிமிடத்தில்
ஆனாலும் கவலை அவர்களைச் சூழ்ந்தது
சுட்டஹெலி பறந்ததும் திரும்பின சிறுபடகுகள்
தனியான படகால் தாக்கம் மறுபுறம் 253



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரவார மிழந்து அமைதியான முனையை
அடிக்கடி திரும்பி அவதானித்து நடந்தனர்
வரும்போது இருந்த முனைப்பு இல்லாமல்
வலிந்து அமைதியை மனத்தில் கொண்டனர்
புரியாத நிகழ்வாக பதிவான காட்சிகளின்
பாதிப்பால் தடுமாற்றம் புரண்டது ஆனந்தனில்
தரித்துள்ள படகிற்கான காரணத்தை அறிந்து
தேறிடும் ஆவலுடன் ஆலயத்தை அடைந்தான்.

254



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைவில் ஒரு காட்சி

நீச்சல் தடாகத்தில் நீரினுள் குதித்து
நீந்துவதுதாய் ஜெற்றியில் நிகரான சாகசங்கள்
எச்சூழலையும் துணிவுடன் எதிர்கொள் பருவத்தினர்
எப்போதும் போலவே போக்கினர் பொழுதை
நீச்சல் அடித்திடும் நிகழ்வாய் வாலிபர்கள்
நீந்தத் தெரியாரை நீரினில் தள்ளினர்
அச்சத்தை உண்டாக்கி அக்கணமே குதித்து
அவர்களைத் தூக்கிடும் விளையாட்டில் சிலர்

255

அளவில் பெரிதான ஆற்றுவாயில் நாலைந்து
ஆடவர் இணைந்து அலாக்காய் மிதந்தனர்
களைப்பைக் கருதாது பந்தொன்றை எறிந்து
கையால் பிடித்து தலையால் அடித்தனர்
விளையாடும் திறமை விறுவிறுப்பின் வெளிப்பாடு
வரவேற்பை பெற்றது ஜெற்றியில் நின்றவரிடம்
துள்ளிக் குதித்தவரும் இணைந்து கொண்டனர்
துணிவு கொண்டவராய் துரித விளையாட்டில்

256

காற்றின் அமைதியால் வாலிபர் உள்ளம்
குதூகலம் கண்டமை செயல்களில் தெரிந்தது
ஏற்பட்ட மகிழ்வுக்கு விளையாட்டு மட்டுமன்று
ஏற்கெனவே பிடிபட்ட மீன்களும் காரணமாம்
வெற்றியாய் நினைத்து வீரத்தில் மகிழ்வது
வரலாறாய் தொடர்கிறது வழிவந்த முறையாக
முற்றிலும் உறுதியாய் மறுநாளும் படுமென்பர்
மீன்களை அதிகமாய் வளைத்திட்ட படகினர்

257



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றிலும் எதிர்பாராமல் முழங்கிய துப்பாக்கி
வெடிகளால் குளித்தவர் விறைப்புற்ற நிலையில்
ஆற்றுவாயில் மிதந்தவரால் அறிந்திட முடியவில்லை
அடுக்காய் கேட்டிடும் துப்பாக்கிச் சத்தங்களை
சீற்றமான வெய்யோன் சிந்திடும் அனலால்
சரியான தெளிவின்றி செவிகளிலே நம்பிக்கை
நாற்புறமும் எதிரொலிக்கும் நிலையிலான ஒலிகளால்
நிலையுணர ஜெற்றியில் நால்வரேறிக் கொண்டனர்
258

"மண்டைதீவு முனையில முழங்குதடா சத்தம்"
முழுவரையும் வியப்பி லாழ்த்தியது பெருங்குரல்
எண்ணத்தில் பிறழ்ச்சி ஏற்பட்ட தவிப்பில்
ஏறினர் கடலில் மிதந்த அனைவரும்
தண்ணீரில் நனைந்தவர் தோய்ந்தனர் அதிர்ச்சியில்
துல்லியமாய் தெரிந்தது மண்டைதீவு முனைப்பகுதி
கண்ணை வருத்தியது உலங்கு வானூர்தி
கவலையை கொடுத்தது துப்பாக்கிச் சத்தங்கள்
259

நடப்பவை அசையும் நிழலாக தெரிந்தன
நிகழ்பவை உணர்த்தின நிஜத்தை முனைதனில்
அடிக்கடி நிகழ்வதாய் அமைந்த போதிலும்
அனைவர் இதயமும் அதிர்ச்சியின் நிலையில்
துடித்தது இதயம் தாங்கிட முடியாமல்
தவிப்பதன் விளக்கம் சரிவரப் புரியாமல்
முடிவாக நின்றவர்கள் மெதுவாகப் பேசினர்
"முனையில பொடிகள் சண்டை பிடிக்கிறாங்க".
260



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெளிவற்ற காட்சி

கருவாட்டுத் தொழிலில் கருத்தாய் இருப்போரால்
கூடியது மீண்டும் குருநகர் மீன்வாடி
நேரத்தின் தாமதத்தால் நடைமுறை போலன்றி
நான்கைந்து மீன்கள் நிரையாய்க் கிடந்தன
மாற்றமின்றி தொடங்கிய கூறலில் கேள்விகள்
முன்னைப் போலன்றி மந்தமாய் இருந்தது
இறுதியில் மீனொன்று எழுபது ரூபாவென
இணக்கத்தை ஏற்படுத்த முனைந்தார் கூறியான்

261

கூட்டமாய் பிடிபடும் கட்டாப் பாரைகளை
காணலாம் எப்போதும் கடுகேனும் மாற்றமின்றி
காட்டிய மீன்களின் கேள்வியை ஏற்றிட
கருவாட்டுத் தொழிலாளரிடை இணக்கம் பிறந்தது
கிடந்தவை அனைத்தும் கணக்கிட்டு பகிர்ந்தபின்
கிளர்ச்சி மண்டைதீவு முனையின் காட்சியால்
சுடப்பட்ட சம்பவம் தொழிலாளரால் கசிந்ததும்
சரமாரிக் கேள்விகள் சிறிதேனும் ஓய்வின்றி

262

பலரது கேள்விக்கும் பதில்கூற முடியவில்லை
பதிந்து வட்டமிட்டு பலவாறாய் சுட்டபடி
உலங்கு வானூர்தி பறந்ததைக் கண்டவர்கள்
உரைத்தனர் வேறொரு உண்மையும் அறியாமல்
“பலநாளா இதுதானே நடக்குது ஆராரு
பாவிகள் இண்டைக்கோ படையாளி தானறிவார்”
குலவலில் நின்றோரின் கவனத்தைத் திருப்பியது
காரிகையின் வேதனை கலந்த குரலொலி

263



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்படைப் படகுகள் கடலுக்குச் செல்வோரை
கலைத்துச் சுடுவதும் ஹெலிகள் வட்டமிட்டு
அடிக்கடி தாக்குவதும் அன்றாட நிகழ்வாகி
அடையாளம் காணாமலே அழிந்தவர் ஏராளம்
பட்டியல் தொடர்வதை பலரும் அறிந்திருந்தும்
பயத்துடன் தொழிலுக்குச் செல்வதே வழமையாகி
விடியலுக்காய் காத்திருக்கும் பூமியின் நிலையில்
வழியனுப்பி காத்திருப்பர் வரவிற்காய் உறவினர்.

264



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு படகில் கண்ட காட்சி

மதியத்தை அறிவிக்கும் யாகப்பர் ஆலய
மணியோசை கேட்டதும் விரைந்து புறப்பட்டு
பதைக்கும் வெயிலைப் பழுவாய்ச் சுமந்தபடி
படகுக்கு விரைந்தனர் பிந்திடாமல் தொழிலாளர்
அதிகளவு மீன்கள் அகப்பட்ட காரணத்தால்
ஆர்வம் முளைவிட அந்நினைவில் கூடியவர்
ஒத்தவாறு செல்வதற்கு ஒருமித்த சமையல்
உதவிட படகுகள் உடனேயே தயாராயின
265

இரவுத் தொழிலுக்கு 'வளிச்சல்' படகுகள்
இருபதுவரை வாடியில் இருந்து புறப்பட்டன
இரவு மீன்பட்ட இடத்தை இனங்கண்டு
எப்படியும் பிடித்திடும் எண்ணமும் தெரிந்தது
திரைகடல் ஓடியும் திரளாகக் கட்டாவை
தப்பாமல் கொணரும் தாபமும் புரிந்தது
சிரமமின்றி தொழில்கள் சென்ற சந்தோஷம்
சம்மாட்டிமார் மகிழ்வாய் சென்றிட வழியானது
266

வீரியமற்ற காற்றால் வெயிலின் அகோரத்தால்
வீதிகளில் நடமாட்டம் வெகுவாய்க் குறைந்தது
ஓரிருவர் போதையில் ஓர்மமாய்ச் செல்கையில்
ஓரமாய் வந்துசிலர் ஒலியெழுப்பி ஓடினர்
ஒருவேளை உணவினை யாசித்துப் பெறுவதற்கு
ஓட்டமும் நடையுமாய் ஒரிருவர் சென்றனர்
திருவிழாக் கோலத்து தெருவெலாம் வெயிலால்
தொழிலாளர் சென்றபின் துடைத்த வெறுமையாய்
267



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமணி நேரமாய் உருவான அமைதி
ஒருவேளை துயரின் உருக்க அறிவிப்பா?
உரைத்தது போலவே ஊரிலே சலசலப்பு
உழைத்திட தொழிலுக்கு ஓடிய படகுகளால்
திரும்பி வருவதாய் திடுக்கிடும் தகவல்
தடுமாறி முள்மேல் மிதித்திடும் தவிப்பு
விரைந்தனர் பலரும் 'ஜெற்றி'யை நோக்கி
விபரம் அறிந்திட முனைந்தனர் சம்மாட்டிமார்
268

அடங்கிக் கிடந்த அவ்வூரில் ஆரவாரம்
ஆவலாய் வீதியில் ஆண்களும் பெண்களும்
உடைத்த வெள்ளமாய் உணர்வுகள் உருண்டன
உண்மையை அறியும் உணர்வுத் தவிப்புகள்
உடனறிய ஆவலால் ஓட்டத்தில் இளையோர்
உள்ளத்தை உறுத்திட உலாவரும் வளர்ந்தோர்
கடந்தகால நிகழ்வுகள் கிளர்ந்து எழுந்திட
கடவுளரை நோக்கி கவலையின் ஒப்படைகள்
269

பலரது எண்ணம் பலித்ததாய் திரும்பிய
படகுகள் ஜெற்றியில் நங்கூர மிட்டன
'அலுப்பாந்தி' நோக்கியும் அணியாய்ச் செல்வதை
அவதானிக்க தவறவில்லை ஆங்காங்கு நின்றோர்
அல்லாட்டம் சம்மாட்டி தொழிலாளர் உறவினரில்
அளவீடு மறந்து அடித்தது இதயம்
தலைகளை கவிழ்ந்து ஜெற்றியில் நிற்கும்
தொழிலாளரை நெருங்கச் சென்றனர் சம்மாட்டிமார்
270

தள்ளாட்டம் உடலில் துயரம் உள்ளத்தில்
தொழிலாளர் அருகில் தயக்கத்தின் மத்தியில்
உள்ளத்தின் உணர்வு உருவமாய் முகத்தில்
ஊமையாய் நின்றனர் மலைப்பு நீங்காமல்
அள்ளியே வரலாமென ஆவலுடன் சென்றவர்
அமைதியாய் நின்றனர் அங்கம் நடுங்கிட
குள்ளமாய் கூனியும் குறுகியும் நின்றனர்
கண்களில் சுடுநீர் கசிந்து துளிவிட
271



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயடைத்து நிற்பவரின் வார்த்தையை எதிர்பார்த்து
வந்தவ ரனைவரும் முகத்தை நோக்கினர்
மெய்ரோமம் சிலிர்க்க வெளிவேடம் போடாத
மனிதத்தை உணர்ந்தனர் அவர்களின் நிலையில்
"பேயறைந்த மாதிரி நிக்கிறீங்களே! ஏன்தம்பி
போட்டுக ளெல்லாம் திரும்பி வருகுது?"
"வாயைத் திறந்து சொல்லாட்டி தெரியாது
விடாம நேவிக்காரன் மறிச்சவனா?" "இல்லை"

272

தலைகள் அசைந்தன சத்தமோ வரவில்லை
"அப்ப ஏனிஞ்ச வந்தனீங்க? சொல்லுங்க"
சிலையாக நிற்பதைச் சகிக்காத 'இசையாஸ்'
சம்மாட்டியின் குரலொலி சினத்துடன் வந்தது
தலையை நிமிர்த்திய தொழிலாளி கண்களில்
திவலையாய் கண்ணீர் சளைக்காது விம்மல்
குலையாத உறுதியும் குலைந்தது இசையாஸிற்கு
கண்கள் கலங்கி கடைவழி வழிந்தது

273

"சம்மாட்டி" விம்மலுடன் தொழிலாளி அழைத்தான்
"சரியோ பிழையோ சொல்லாட்டி தெரியுமா?"
சம்மாட்டியின் குரலில் சாந்தம் இருந்தது
சமாளித்து தொழிலாளி தோளைத் தட்டினார்
"சம்மாட்டி! 'பிளாஸ்ரிக் போட்டில' பிரேதங்கள்"
சர்வமும் ஒடுங்க திடுக்குற்று "பிரேதங்களா?"
சம்மட்டியால் இதயத்தை தாக்கிய உணர்வு
சகலரது முகங்களிலும் தெளிவாகத் தெரிந்தது

274

திறந்தவாய் மூடாமல் சிக்கின வார்த்தைகள்
திகிலுடன் நோக்கிட தளர்ச்சி நிலவிட
திறந்த கடலை துயருடன் பார்க்கையில்
தூரத்தே முன்பின் இரண்டு படகுகள்
உறுத்தலால் குளிர்ஜுரம் உண்டான நிலையில்
உடலில் நடுக்கம் உருவாக தவித்தனர்
நிறைவான செய்திக்காய் நெருங்கினர் தொழிலாளரை
நிதானம் இழக்காமல் நோக்கமே இலக்காக

275



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெளிச்ச வீட்டுக்கு முன்னுக்குப் போகேக்க
வலுசிலோவா பெரியபோட் தொடுத்து வந்தது
பிளாஸ்ரிக் போட்டில பொடியன் இருந்தான்
புதுசா இருக்கெண்டு சிலோபண்ணி பாத்தநாங்க
பிளாஸ்ரிக் போட்டில கனக்க பிரேதங்கள்"
"பக்கத்தில போய்நீங்க என்னண்டு கேட்கலாமே?"
"வெள்ளநீர் அதோட அணைக்க விடயில்ல
வளிஞ்சு தாழும்போல இருந்தால பயந்திட்டோம்"

276

"பொடியன் எங்களப் போகச்சொல்லி லாவினதால
பாத்திட்டு நாங்க இஞ்சால திரும்பிற்றம்
'**இடையாடி**'க்கு இஞ்சால தெரியிது பாருங்க"
'இடையாடி' யை நோக்கி இருகரம் காட்டினான்
படகை நோக்கியவாறு பதட்டத்தில் நின்றன
பாலத்தில் நிற்கும் பலரது கண்கள்
காட்டுத் தீயென குருநகரில் பரவியது
கலக்கத்தின் தளமாக களமாற்றம் பெற்றது

277

யாரென்று தெரியாமல் யாராக இருக்குமென
யோசிக்க முடியாமல் எல்லோரும் அங்கலாய்ப்பு
குருநகர் தெருக்களில் குவியலாய் சனக்கூட்டம்
கொதிக்கும் வெயிலாலும் கலக்கம் இல்லை
அறியாத தகவலை அறிந்திட அலைந்தனர்
ஆடவர் மகளிர் சிறுவர்கள் எனப்பலர்
இறங்குதுறை நிரம்பிட மக்கள் "எந்தப்
பாவிகளோ?" எல்லோர் பேச்சிலும் இவ்வொலி

278

கடற்கரை அணைக்கட்டு கொள்ளாத மக்கள்
கனக்கும் இதயமும் கூர்ந்த பார்வையும்
அடைக்காத வேலிபோல் அடுக்கு நிரையாக
ஆவலாய் நின்றனர் யாரென்று அறிந்திட
அடக்கிட முடியாமல் ஆயிரம் கேள்விகள்
ஆள்மாறி ஆள்கேட்கும் ஆதங்க நிலையங்கே
தடுக்கி வீழாமல் நெருக்கி நின்றதனால்
துடிக்கும் இதயம் தடையற்று பகர்ந்தது.

279



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருவான சந்தேகம்

'குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்'
கையேற்க வந்தது படகின் உடல்களை
வருமுன்னே தொடங்கிய சுயவிருப்பின் ஏற்பாட்டில்
வற்புறுத்தல் இல்லாமல் முனைப்புடன் வாலிபர்
தெருவில் அமைதியைத் தொலைத்து நொந்தவனாய்
தவித்த ஆனந்தனும் சேவையாற்ற இணைந்தான்
குருநகர் மண்ணின் குணத்தின் வெளிப்பாடாய்
கலங்கினும் ஒத்துழைக்க கங்கணம் கட்டினர் 280

நேரத்தின் அதிகரிப்பு நீண்டிட இறங்குதுறை
நிரம்பி வழிந்திடும் நிலையினில் மக்கள்
திரளாக அவர்கள் சேருவதை முன்னின்று
தடுக்க வேண்டிய சூழலில் பணியாளர்
இறங்குதுறை முன்னரங்கில் 'சுத்தியல்' மாதிரி
இருக்கும் பகுதியில் ஏற்கெனவே மக்கள்
நெருக்கமாய் அப்பகுதி நிறைந்தால் இடையூறாம்
நின்றவரை பின்னோக்கி நகர்த்திட முயன்றனர் 281

எதிர்ப்பும் தர்க்கமும் ஏற்பட்ட போதினிலும்
ஏச்சுகளும் பேச்சுக்களும் மிகுந்த நிலையினிலும்
எதிர்கொண்ட இளைஞர் இயன்றவரை வெளியேற்றினர்
ஏற்றிட மறுத்தவர் இருந்தனர் அங்கேயே
எதுவரினும் தாங்களும் இணைந்திட வேண்டுமென்ற
எண்ணத்தின் வெளிப்பாடே இதற்கெலாம் காரணம்
புதிதாக எவரும் புகுந்திடாமல் நுழைவாயில்
பகுதியை மறித்துப் பிடித்தனர் இளைஞர் 282



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை தொழிலுக்கு சென்றவர் வீடுகளில்
அழுகுரல் தொடங்கின சந்தேக நிலையால்
பதறிடும் அகங்களில் உட்சென்று ஆறுதல்
பகிர்ந்திட அயலவர் பலரும் உறவுகளும்
இதயத்தில் உண்மை இருக்காது என்கிலும்
உருவான சந்தேகம் ஊதிப் பெரிதானது
கதறினர் உறவினர் குரலோங்க வீடுகளில்
கடுந்துயர் சூழ்ந்து கொண்டதன் அடையாளம் 283

இதுவரை காணாத கதறல் குருநகரில்
இதயம் கனத்தது உணர்ந்த வர்க்கு
எதையும் புரிந்திட உள்வாங்க முடியாமல்
எதற்காக என்பதை அறியாத தடுமாற்றம்
நிதானமாய் சிந்திக்க நிலையற்ற ஆண்கள்
நடையாக அலைந்தனர் வீடுகளை அறிந்து
மாதர்கள் முகத்தில் மங்கலம் இல்லை
மனமுடைந்து மென்னிதயம் வெந்திட நின்றனர் 284

உறுதிப் படுத்தாத உண்மையின் வெளிப்பாடு
உள்ளத்தை உறுத்தின ஊகத்தின் அடிப்படையில்
இறவாத விவாதங்கள் எங்கெலாம் பரவிட
இரணம் பாச்சிட இருப்பவர் முயன்றனர்
உறுதியாய் நின்றவர் உள்ளமும் கலங்கிட
உணர்வு எல்லையை உடைத்தது புயலாய்
இறங்குதுறை முதல் இடையே நின்றோரின்
இதயத்தை குடைந்த படகுகள் நெருங்கின. 285



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெருங்கியது சிறுபடகு

சடலங்கள் சுமந்து தொடுவையில் வருகின்ற
சிறிய 'கண்ணாடி நாரிழைப்' படகு
விடைகாண முடியாது முக்குளிக்கும் கேள்வியின்
விடையைத் தன்னுள் விழுங்கி இருந்தது
படகைச் சுற்றிப் பருந்துகள் வட்டமிட
'புல்லு'கள் தொடராய் படகுகள் பின்னால்
கூட்டாய்ப் பறந்து கலைத்து வருவதும்
குதித்து மூழ்கி எழுவதும் தெரிந்தது
286

இறங்குதுறை வீதியில் இடர்பட்டு நெருங்கியும்
இணைந்த முன்றில் இடமாகவும் நின்றனர்
குறுகிய முன்னரங்கில் இறக்கிச் சடலங்களை
கிடத்தி ஏற்றிட போதிய இடந்தேவை
நிற்பதைத் தடுத்திட நின்றவரை துரத்தினர்
நெருக்கடியை சந்தித்தும் நிதர்சன செயற்பாடு
உறைந்து கிடக்கும் உணர்ச்சிப் பிரவாகம்
உரமேறித் தாக்கத்தை உண்டாக்கா ஏற்பாடு
287

ஐம்பது யாரளவில் வருகின்ற படகுகள்
அணைத்திட ஜெற்றியை அண்டிடும் சமயம்
அமிழ்ந்த நிலையில் மிதக்கும் சிறுபடகை
அவிழ்த்து விடுமாறு உரத்துக் கூறினர்
சுமையான சிரமத்தை தவிர்த்திடும் நோக்கறிந்து
சிறிய படகை விடுவித்தது மறுபடகு
சுமைதாங்கி வருகின்ற 'நாரிழை'ப் படகு
சிதையாது கவனத்தை ஈர்த்தவா றிருந்தது
288



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகற்ற நிலையில் இரங்கிய ஒருவனால்
ஈடாடி வலித்து வருவது உறுத்தியது
கலந்து உதவிட காற்று ஏற்பாயும்
கடல் நீரோட்டம் எதிராயும் இருந்தது
வலிக்கும் வேகத்தின் விரைவின்மை கட்டுப்பாட்டை
விட்டகன்று விலகிட முரண்பாடு கொண்டது
இலகுவாய் கிழக்கு மூலையைத் தொடாமல்
இடம்மாறி வடக்கை நோக்கித் திரும்பியது
289

வடக்கே திரும்பி 'வழிந்த' படகு
வீதியில் நின்றவர் விழிகளில் பட்டது
கிடந்த பிணங்கள் கொத்தாய் தெரிந்ததால்
கிளர்ந்த உணர்ச்சி கதறலாய் ஆங்காங்கு
இடத்தை ஆக்கிரமித்து எழுந்த குரலொலியால்
இடறுண்டு கடலில் வீழ்ந்த பலருண்டு
தடைகள் இல்லாத ஜெற்றியில் நெரிசலால்
தடுமாற்றம் சிலர்க்கல்ல நின்றனை வர்க்குமே
290

தலையில் அடித்து துடித்தழும் பெண்கள்
துயரில் மூழ்கிய தவிப்பில் ஆண்கள்
பொலபொல வெனவே பொழியும் கண்ணீர்
படகில் கிடந்த பிணங்ளைக் கண்டதால்
நிலையான உறுதியில் பணியாற்ற இளையோர்
நின்றும் மனிதம் அழுதது புடைத்துமே
தளர்வுற்ற நிலையிலும் தடுமாறும் படகைத்
தடுத்திடக் கடலில் குதித்தனர் இருவர்
291

கடலில் குதித்தோர் காற்றாய் நீந்தி
கட்டுப் படுத்திட கடுமையாய் முயன்றனர்
படகின் அணியத்தில் பிணைத்த கயிற்றைப்
பற்றியே முன்னோக்கி இழுத்தா னொருவன்
வடக்கே படகு வழிந்திடும் நிலையை
விரைந்து தடுத்தான் நீந்தியவா றொருவன்
திடனுடன் எடுத்த சரியான முடிவால்
தடுமாறிய படகு கட்டுக்குள் வந்தது
292



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்கு முனைதேடி கயிற்றால் இழுத்துவர
துணைக்கென வேறிருவர் தாவிக் குதித்தனர்
முனையால் திரும்பவும் துறையில் அணைக்கவும்
முரண்பாடு ஏற்படா முயற்சிக்கு துணையாக
அணையாக நீந்தியே அரங்காது காத்திட
அணியாக நின்று ஆற்றினர் சேவையை
இணைந்திட்ட முயற்சியால் இறங்கு துறையின்
எல்லைக்கு வந்தது தெற்குத் திசையால்

293

சின்னப் படகினில் இத்தனை பிணங்களா?
சிலையாக உறைந்தனர் சிதைந்த உறுதியால்
எண்ணற்ற மீன்களை ஏற்றியதுன்று படகினில்
எதிர்மாறாய் இருப்பதால் அனைவர்க்கும் அதிர்ச்சி
எண்ணிப் பதினாறு ஆண்டுகளின் முன்னர்
ஏறிப்படகில் சென்றிட்ட பாலைதீவுப் பயணிகள்
எண்பதுபேர் கடலில் மூழ்கிப் பலியான
ஏக்கமிகு நாள்தான் எழுந்தது நினைவினில்...

294



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலைதீவு விபத்து

சோகம் ததும்பிய தினம்தான் அத்தினம்
சமய வாழ்விட வேற்றுமை நிலையின்றி
போகப் புறப்பட்ட பலரும் இறங்குதுறையில்
பாலைதீவு அந்தோனியாரை தரிசிக்கும் ஆவலில்
மிகப்பெரும் கொடையினை தவறவிடா எண்ணத்தில்
மக்கள் நூற்றுக்கும் மேலாக காத்திருந்தார்
தக்கவேறு படகுகள் தரிக்கவில்லை அங்கே
தனியொரு படகாக 'வெல்லம்' படகு 295

கதிரவன் மறையக் காத்திருக்கும் நேரம்
காற்றும் உரத்திடக் காத்திருந்த நேரம்
காத்திருந்தோர் ஏறினர் உறுதியாய் படகினில்
காணாது இடமென ஏறாமல் சிலரே
மீதமாய் வருவார் இல்லை என்பதால்
மெல்ல நகர்ந்தது பாலைதீவை நோக்கி
பத்திரமாய் ஐம்பது பேர்வரை ஏற்றிடும்
படகில் மொத்தம் தொண்ணூற்றி இரண்டுபேர் 296

அனுபவ முள்ளவர் 'தண்டையலை' ஏசினர்
அவனோ அலட்டிக் கொள்ள வுமில்லை
தன்னால் கொண்டேக முடியுமென்ற நம்பிக்கை
தாமதமின்றி சென்றடையும் தாகத்தின் வேகம்
இன்னமும் ஆட்கள் இருந்தாலும் ஏற்றிட
இயலுமென்ற இறுமாப்பில் நிறைந்து நின்றான்
பின்னால் தன்னது பண்பட்ட அனுபவம்
பெரிதும் துணையாய் உள்ளதென்ற எண்ணம் 297



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் மூழ்கினான் களைப்பால் மறையோன்
காரிருளின் மத்தியில் கடலில் பயணம்
படகில் பயணித்த மக்களில் அநேகர்
புதியவர் ஆனதால் புதியதோர் அனுபவம்
அடங்கி இருந்திட்ட வாடைக் காற்றது
அக்கணம் தப்பாத ஒழுங்கில் உரத்தது
முடங்கிக் கிடந்த மக்களின் கலக்கமோ
மூச்சான அலையும் காற்றுடன் இணைந்தது
298

பாலைதீவு நெருங்கியதை திருவிழா காணவந்த
பயணிகள் விடுதிகளின் விளக்கொளி காட்டியது
அலையென கதிர்கள் ஒன்றித்து வானோக்கி
அணியாய் தெரிந்திட அனைவர்க்கும் உற்சாகம்
தொலை விலில்லை தீவுஎன்ற எண்ணத்தால்
தம்மிடரை மௌனமாய்த் தாங்கியே இருந்தனர்
குலையாத உறுதியும் குன்றிடும் நிலையிப்போ
காலடியில் நிற்பதை கணித்தவர் அங்கில்லை
299

அண்மையில் தெரிந்த கதிருக்கு நேரன்றி
அலைக்கு இசைவாக பயணித்த படகை
தண்டையல் திருப்பினான் தன்னறிவால் ஒளிநோக்கி
தவறான போக்கில் காற்றுக்கு 'விலங்காக'
தண்ணீர் தெறித்தது தாக்கிய காற்றால்
தம்முடல் நனையாது தடுத்திடப் பலரும்
முன்னோக்கி எழுந்திட ஒருபக்கம் உயர்ந்து
மறுபக்கம் அமிழ்ந்திட கடல்நீர் படகினுள்
300

தவறை உணருமுன் சரிந்து முற்றுமாய்
தண்ணீருள் அமிழ்ந்தது தடுப்பின்றி படகு
சாவின் ஆற்றல் தண்ணீராய் அழுத்துவதை
சட்டென உணர்ந்து துடித்தனர் உயிர்காக்க
மேவிய இருளில் மூழ்கிய பயத்தால்
மூச்சடங்க மேலெழுந்து அமிழ்ந்து திணறினர்
சாவின் கொடுங்கரம் தேடி அணைத்தது
சிக்கியோர் பலரங்கு நீந்தத் தெரியாதோர்
301



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிருவர் நீந்தி பாலைதீவை அடைந்ததும்
பயணித்த படகு அமிழ்ந்தது வெளியானது
கணத்தினில் பறந்தன உதவிடப் படகுகள்
கடல்நீரில் ஆங்காங்கு கண்டனர் பொருள்களை
துணையாக ஒளியேற்றி தேடியும் பயனில்லை
தெரிந்திலர் தவறியோர் தடயமும் தெளிவில்லை
மணிக்கணக் காயங்கு முயன்று தேடியும்
முடியாமல் தேடலை முடித்தும் கொண்டனர் 302

குருநகரை அடைந்த கடுகதித் தகவலால்
காலைவரை உறக்கம் கலைந்த நிலையிலவர்
பெருகிய துயரினில் பாலைதீவு மூழ்கினும்
பகலோனின் உதயத்தில் படகுகள் களத்தில்
திரளான படகுகளில் துணிவுடன் பலரங்கு
தளராது சுழியோடித் தேடிய காரணத்தால்
வரலாறாய்ப் பதிவான உயிரற்ற உடல்கண்டு
வாரியே ஏற்றினர் வார்த்தை களின்றி 303

உயிரற்ற உடல்கள் எண்பது ஜெற்றியில்
உயிருள்ள எத்தனை உள்ளங்கள் ஏக்கத்தில்
புயலாக நிகழ்ந்த பரிதாப நிகழ்வால்
பாதிப்பில் மூழ்கின பலநூறு குடும்பங்கள்
இயற்கையும் இணைந்து எடுத்த முடிவால்
இத்துணை அவலம் இடியென கணத்தில்
பயணிகள் உடலுடன் பதினெட்டு வயதான
'வெல்லம்' மகனது உடலும் கிடந்தது. 304



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடையாளம் காணுதல்

குருதி தோய்ந்த சடலங்கள் படகினுள்
குவியலாய் கிடந்தன கண்ணை உறுத்தின
தெரிந்த உடலங்கள் தென்பட்ட கோலத்தால்
தடுமாற பணியாளர் சிந்தினர் கண்ணீர்
ஒருமணி வெயிலின் ஒளியங்கு பிணங்களில்
ஒருமித்து வீழ்ந்திட விளைந்தது கொடூரம்
குருதியில் மோதித் திரும்பும் தெறிப்பால்
குருதி கொதித்திட இதயம் வெடித்தது

305

பணியாளன் ஆனந்தன் மயங்கிய நிலையில்
பதற்றம் நிலவிட பலரும் தவித்தனர்
உணர்ச்சி மேலிட்டு உடம்பு சிலிர்த்திட
ஊமையாய் உடல்களை ஊடுருவிய பார்வை
கண்கள் எரிந்திட கவலையும் மேலெழ
கலங்கித் துயருடன் நின்றனர் அவர்கள்
கண்ணுற்ற தலைவர் "'எல்வ்'கள் வருகுது
கெதியா அதிலேற்றி அனுப்புங்க வாசிகசாலை"

306

"ஆரெண்டு தெரியாம?" அவர்களில் ஒருவன்
"அதைப்பிறகு பாப்போம் இப்போது ஏத்துங்க
ஆராயினும் இப்பிடியே விட்டுட்டு போறதா?
அங்கை யெண்டா அனைத்தும் சமாளிக்கலாம்"
புரிந்து கொண்டவராய் பதிலின்றி உயரிய
பணியைச் செய்திட பற்றுறுதி கொண்டனர்
நீரினில் அழுதிடும் மீனின் நிலையாக
நெஞ்சம் உருகி நனையும் களமது

307



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படகைச் செலுத்திய வாலிபன் சசீகரன்
பதுமையாய் இருந்தான் பயந்த நிலையில்
படிக்கட்டு வழியாக கரம்பற்றி ஏற்றினர்
'பேயறைந்த' போலவன் பேதலித்த கண்கள்
குடித்திடப் பானம் கொடுத்திட்ட போதும்
குடிப்பதில் விருப்பம் கொண்டிட வில்லை
துடுப்பாக வந்தவன் சோர்ந்திட்ட நிலையில்
தனிமை ஆக்கினர் தொல்லைக ளில்லாமல்

308

விரைந்து வாகனம் மக்களுள் புகுந்து
விலக்கி நுழைந்தது வீதியின் உள்புறம்
திரும்பித் தரித்தது ஜெற்றியின் முன்னரங்கில்
சிரமங்கள் இன்றி சடலங்கள் ஏற்றிட
நெருங்கி சனங்கள் நிற்காமல் தடுத்தும்
நீண்டு சென்றது நெஞ்சக் குமுறல்
திரளாய் நிற்கும் சனங்களின் அழுகுரல்
தொய்விலா தொனியாக துயரத்தை காட்டின

309

வேதனை கண்ணீர் வேண்டுதல் மத்தியில்
வான்வரை எழுந்திடும் விம்மலின் இடையில்
முதல் பிணத்தை முன்னரங்கில் இறக்கினர்
முற்றும் வெட்டி காயத்தின் கோலத்தில்
இதயத் துடிப்பு இடியாகப் பணியாளர்
இரத்தம் வெந்நீராய்க் கொதித்த உணர்வுடன்
முதலுடல் இரத்தத்தில் மூழ்கிய வீக்கத்தால்
முகத்தின் அடையாளம் விளங்கா திருந்தது

310

இரண்டாம் சடலத்தை இயன்றவரை முயன்றும்
எவரெனக் கூறுதற்கு இயலாத நிலைமை
புரட்டி புரட்டிப் பலமுறைப் பார்த்தும்
பயனற்றுப் போனபின் வாகனம் ஏற்றினர்
பருத்ததாய் வெளிவந்த மூன்றாம் உடலத்தை
பார்த்ததும் பதறினான் பணியாளன் "மவுணண்ணே!"
அருகே எறிகணை வெடித்த தாக்கத்தை
அக்கணம் உணர்ந்த அதிர்வில் ஏனையோர்

311



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலால் துடித்து குறிப்பாய்ப் பார்த்தவர்
கொடுமை கண்டதால் கொண்டனர் கவலை
ஒருமித்த ஒலியின் ஓங்காரம் "மவுண்"
ஒருகண நேரத்தில் "மவுண்..., "மவுண்..."
விரிந்த குரலொலி எதிரொலி ஆகியே
மக்களைச் சென்றதால் வேதனைப் பிரவாகம்
பரவிய தகவலால் பாசமிகு உள்ளங்கள்
பரிதபிப்பு துடிப்பு பெருகிடத் தவித்தன

312

இல்லங்கள் அழுததால் எழுந்த குரலொலி
ஈர்நான்கு திசையிலும் எக்காளத் தொனியாக
சொல்லாத செய்தியை சொல்லிட முனைவதாய்
சென்றது மக்களின் செவிகளின் வழியாக
கல்லான இதயமும் கசிந்திடச் செய்திடும்
குரலாக இருந்தது கேட்பவர் நிலையெலாம்
சல்லாபம் இல்லாது சொந்தங்கள் சூழலில்
சிவந்த கண்களில் சொரியும் நீருடன்

313

உண்மை அறியாமல் உள்ளிருந்து அழுதவர்
உண்மை புரிந்ததால் வீதிக்கு வந்தனர்
கண்ணீர் பெருகிட கைகளை உயர்த்தி
கதறிடும் காட்சி துன்பத்தின் சாட்சி
ஒன்றுக்கு மேற்பட்ட சிறுகிளை நதிகள்
ஒன்றில் இணைந்திடச் சென்றிடும் நிலையங்கே
ஒன்றித்த பலரும் ஓட்டமும் நடையுமாய்
ஒருசேர வீதியால் விரைந்தனர் ஜெற்றிக்கு

314



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதியில் உறவுகள்

"சருகாகி போனார்களே சதையும் நகமுமாய்
சகோதர பாசத்தில் சிரிக்கும் தொழிலாளர்"
திருமண விழாவில் துயரத்தை அறிந்து
தாளாத் துயரில் தவித்தார் கிறிஸ்ரியன்
பெருகும் கண்ணீர் பிரவாகம் பெற்றிட
பாதியுடல் துண்டாகி பறிபோன துயரம்
உருகும் மெழுகாக உணர்வு அனலாக
ஓடினார் உடுத்திய உடையோடு ஓர்மமாய் 315

துள்ளிய இளமை துளிரான நாள்முதல்
தூணாக நின்ற தொழிலாளர் இவர்கள்
அள்ளக் குறையாத அன்பைப் பொழிந்து
ஆதரவாய் நின்ற அட்சய பாத்திரங்கள்
முள்மேல் நின்றாலும் முனகாத நெஞ்சங்கள்
முற்றிலும் பிணமான வேதனை அவர்க்கு
வெள்ளை வேட்டியும் வெளிர்நிறச் சட்டையும்
வாழ்வினி இல்லை என்பதை உரைப்பதாய் 316

"திருமண விழாவைத் தந்துமே என்னை
தப்பிக்க செய்தது தகுமா இறைவா
அரும்புகள் முதல் அனைவரை அழித்தாய்
அநியாயம் என்று அறியாத தேனோ
கருணை மனத்தவர் காக்கும் குணத்தவரை
கல்நெஞ்சம் கொண்டுமே காக்காது விட்டதேன்
குருதி சிந்திய கொடுமையில் என்னையும்
கூட்டாக சேர்த்துன் கடமையை முடித்திடு" 317



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையில் அடித்து தவிப்பின் புலம்பல்
தடுத்திட முயலும் துடிப்பில் பலரும்
மேலான பணிகளின் மேன்மைச் செயலால்
மதிப்புடன் நின்றார் மக்கள் மனங்களில்
விலகி வழிவிட முன்னரங்கை நோக்கி
விரைந்து நடந்தார் விம்மல் கண்ணீருடன்
மேலாப்பாச்சி வரவால் பணியாளர் கிளர்ச்சியில்
வரவேற்க முடியாமல் வார்த்தைகள் சிக்கின
318

படகை எட்டிப் பார்த்தவர் பதறினார்
பந்த பாசங்கள் பிணங்களாய் கிடந்ததால்
அடக்கிட முடியா ஆழ்மன உணர்ச்சியை
ஆற்றிட முயன்றும் முடியாத நிலையில்
உடைத்தெழும் வெள்ளமாய் சொரிந்தது கண்ணீர்
உடைகள் நனைந்தன ஊறிய வியர்வையால்
தடக்கித் தள்ளாட தாங்கினர் இருவர்
தாமத மில்லாது தூக்கியும் சென்றனர்
319

* * *

"மகனே!" தலையில் அடித்தவா றோடினாள்
மகனது முகங்காண உதயகுமாரைப் பெற்றவள்
"போகவே மனமின்றி இருந்த உனைநான்
போவென்று சொல்லி அனுப்பி வைத்தேனே
மகனே! எனக்கு ஏனிந்தத் தண்டனை
மறுப்புச் சொல்லாது புறப்பட்டுச் சென்றாயே
அகம் குளிர்ந்தேனடா அப்போது நானும்
அடிவயிறு நெருப்பாய் எரியுதடா செல்லமே!"
320

நிலவில்லா வானமாய் நீரில்லா நதியாய்
நிழலின்றி நிற்கும் நிலையில் தாயவள்
சிலையில்லா கோயிலாய் இல்லிடம் ஆனதால்
சிதறிய உள்ளத்தின் சிதறலாய் நிற்பவள்
காலத்தின் கையிலே வாழ்வுடன் வழியென
கனத்த இதயத்தை சுமையாய் சுமப்பவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லோனாய்ப் பார்த்திட வாரிய கைகளை
வானோக்கி உயர்த்தி வேதனையில் கதறினாள் 321

* * *

தாயுடன் 'மவுணின்' தனையன் 'தயான்'
தந்தையை இழந்த கடுந்துயர் அவனில்
சேயின் தோளில் தலைவைத்த நிலையில்
சிறகு இழந்த பறவையாய்த் துடித்தாள்
வாய்விட்டுக் கதறிட வீரியம் இல்லை
வார்த்தை வெளிவர மறுத்திடத் தவித்தாள்
மெய்யின் துடிப்பு மாதவள் துயரை
முற்றாய் உணர்த்திட பார்த்தவர் அழுதனர் 322

பொங்காத பெருங்கடல் பொங்கி வந்ததுபோல்
பொங்கிய உளத்தினள் புலம்பினாள் துயரில்
அங்கமோ பதறிட அலங்காரம் ஏதுமற்று
ஆதரவு தேடினாள் கொடியின் நிலையாக
தங்கத்தாலி தானிருந்த இடத்தை துறந்ததால்
தளிரிளந்த தடியாக தெரிந்தது கழுத்து
மங்கலப் பொட்டின்று விடைகூறிச் சென்றதால்
முற்றிலும் வாழ்விழந்த முகமனைக் கூறியது 323

* * *

"என்னங்க! எங்களை விட்டிட்டு போயிற்றீங்க
எண்ணி நாற்பது நாள்தானே இருக்கும்
கண்ணாய் வளர்த்த பிள்ளைகள் இருவரை
'ஷெல்லு' வெடிச்சுக் கொண்டு போச்சுதே
இண்டைக்கு உங்களையும் கொண்டிட் டாங்களே!"
இடறி விழுந்தங்கு ஓடிவந்தா ளொருபெண்
பின்னாத கூந்தல் பொட்டிழந்த நெற்றி
பார்ப்பவர் நெஞ்சம் உருகிடப் புலம்பினாள் 324

இரண்டாம் திகதி வைகாசித் திங்கள்
ஆயிரத்தித் தொளாயிரத் தெண்பத்தி ஆறினில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநகர் அரங்கினில் கூடிய சிறுவரின்
குதூகல விளையாட்டை கடவுளும் ஏற்கவில்லை
இரண்டு பாலகர் விதையானார் கணத்தில்
எறிகணை வீழ்ந்து உடல்கள் சிதறிட
குறித்த பாலகரை இழந்த பெண்ணிவள்
குடிகொண்ட துயரால் துடியாய்த் துடித்தாள்

325

கண்ணாடிப் பாத்திரத்தில் கல்லெறி பட்டதுவோ
கலங்கினாள் வாழ்வில் நிகழ்ந்ததை யெண்ணி
எண்ணத் தேன்கூட்டில் எறிகணை வீழ்ந்ததுவோ
ஏதிலியாய் கதறுகிறாள் எதிர்கால வாழ்வுக்காய்
உன்னத வாழ்வின்று உருக்குலைந்து போனதுவோ
உள்ளம் துடித்திட ஊனுருக ஓடுகிறாள்
இன்னுமேன் தனக்கேது இம்மண்ணில் வாழ்வுஎன
இதயம் நொருங்கிட இடரினில் மூழ்கினாள்

326

* * *

"ஐயோ! எங்கட உறவுக ளெல்லாமே
அழிஞ்சு போச்சுதே! ஆரட கண்ணோ"
வாய்விட்டு அழுதபடி வீழ்ந்தெழ ஓடினார்
விடியலில் தொழிலுக்கு போகாத 'மரியதாஸ்'
மெய்யுளம் துடிக்க வேதனை வாட்டிட
தவித்திடும் இவரோ முதலாளியின் சோதரர்
சாய்ந்த தொழிலாளர் பலரது உறவினர்
செய்வது அறியாது சிந்தை கலங்கினார்

327

வாடிக்கை ஆகிவிட்ட வஞ்சக செயலால்
வாழ்வினை இழந்த உறவுகள் கலங்கினர்
கோடிகொடுத் தாலுமிக் கொடுமை எந்நாளும்
மறந்திட முடியாத ஒன்றாக நினைத்தனர்
கூடிக் குலாவியவர் கூடுகளை இழந்தவராய்
கும்மாளம் விடுத்தவர் கவலையில் புகுந்தனர்
முடிவில்லா வேதனை தானொன்றே எஞ்சியதால்
முன்னேற்ற மில்லாத வாழ்வையும் கொண்டனர்

328



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* * *

"அப்பா விரும்பாம போனாயே தொழிலுக்கு
அணையாக நிற்பேன் எந்நாளு மென்றாயே
இப்படிக் கோலத்திலா ஈன்றவள் பார்த்திட
இதயம் நொருங்குதடா என்னன்பு மகனே!
அப்பா கலக்கத்தில் இடியான செய்தியால்
ஆராலும் தாங்கிட முடியுமா உன்னிழப்பை"
கோபால கிருஷ்ணனின் தாயிவள் ஓடினாள்
கால்கள் தடுமாறிக் கண்கள் குளமாக 329

தன்தொழில் இழந்ததால் துணையாய் நின்றிட
தன்பணி கொண்டுமே தொழிலுக்குச் சென்றவன்
முன்னரோ செய்திடா முகமறியாத் தொழிலிது
முடியாமல் கதறுகிறாள் மனமொப்பி போனதால்
"என்னரும் மகனே!" என்றவள் குரலொலி
எண்திசை பரவிட இரங்கினர் கேட்டவர்
நினைத்திடா வகையில் நிகழ்ந்த கொடுமையால்
நாடிநரம் பொடுங்கி நிற்கிறாள் நாதியற்று 330

* * *

பதினாறு நாளில் பிணமான கணவனை
பார்த்திட வந்தாள் புதுமணப் பெண்ணாள்
கதறல் அவளுக்குப் புதிதாக இருந்தது
கண்ணீரின் அளவோ பெரிதாக இருந்தது
சிதைந்த வாழ்வை சிரிப்பழிந்த முகத்தை
சிலேடையாய்க் காட்டியது கலைந்த கூந்தல்
பதைப்புடன் பலரும் தடுத்திடக் கேட்காமல்
பார்த்திடக் கணவனை ஆவலாய் ஓடினாள் 331

"போயிற்று வாறதாய் சொல்லிட்டுப் போனீங்க
பிணமாக வாறெண்டு சொல்லிட்டுப் போகலையே
ஞாயிறு படத்துக்குப் போவோம் எண்டீங்க
நாளைக்குத் தானுங்க ஞாயிறு போவோமா?
சாயந்தரம் எங்கேயும் போய்வருவோ மெண்டீங்களே
சாய்த்து விட்டார்களே சண்டாளப் பாவிகள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோய்ந்த துயரினில் உள்ளத்தை திறந்தாள்
துணைவனை இழந்ததால் துடிக்கும் மனையாள்
332

இருள்மூடும் வான்போல் இருளான வாழ்வில்
இணைந்த அப்பேதைக்கு இனியேது விடிவு?
கரையேறிய மீன்போல் துடித்திடும் இவளின்
கண்ணீரைத் தடுக்க காலமும் கூடுமா?
உருண்டோடும் நாட்களில் உருகிடும் வாழ்வில்
ஒருபாதை தோன்றி ஒளிதனை ஏற்றுமா?
பெருவெயில் காண்நிலம் பிளப்பதைப் போலவே
பதியினை இழந்தவள் படுந்துயர் தீராதோ?
333

***

நான்கு பிள்ளைகள் அணைத்திட கனகம்
நாதியற்ற நிலையினை உணர்த்தியே வந்தாள்
கனமழை போலவே கண்களில் கண்ணீர்
கல்லடித்து சிவந்து கன்றின கால்கள்
“என்னங்க” வேதனையின் அலறல் அவளிடம்
“எங்கே எங்கடப்பா?” பிள்ளைகள் கதறல்
சின்னா பின்னமாய் சிதறிய வாழ்வால்
செய்வது அறியாது நடந்தனர் மலைப்பில்
334

“அப்பாவ ஏனம்மா கொன்றாங்க?” இளையவள்
ஆதங்க வினாவலில் அணைத்தாள் பெற்றவளை
“அப்பா செய்தது என்னம்மா?” துடித்தாள்
“ஆண்டவ னுக்குத்தான் தெரியும்மா ஏனெண்டு
சாப்பிட உழைப்புக்கு சென்றாரே காலையில
சாதுவான மனுசன கொண்டுற் றாங்களே”
“அப்பா...!” ஒருமித்த அவர்களின் கதறல்
ஆங்காங்கு படிந்து அலையாக ஒலித்தது
335

அனலில் மெழுகாக உருகியே போனது
அவலத்தின் நிலைகண்ட அங்குள்ளோர் நெஞ்சம்
அன்னையும் துணையற்ற அன்புச் செல்வங்களும்
அனைவர் உள்ளத்தையும் உருக்கியே நின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னாமல் முழங்காமல் துயர்தந்த நிகழ்வால்
மிகையாகத் துடிக்கும் நிலைகண்டு துடித்தனர்
இன்னலைத் துடைத்திட இனியார் உண்டென
இயம்பிடும் வார்த்தைகள் இதயத்தைப் பிழிந்தது

336

* * *

வாய்விட்டு அழுதனர் வீதிகள் தோறும்
வேதனை தாங்கிட முடியாத உறவுகள்
சேய்களை இழந்த பெற்றவ ரெல்லாம்
சிதறிய உள்ளத்தால் துடியாய்த் துடித்தனர்
தாயைப் பிரிந்த கன்றின் நிலையில்
தாபரித்த தந்தையை இழந்த பிள்ளைகள்
துயரத்தின் எல்லையில் கணவனை இழந்தவர்
தூண்டிற் புழுவாகத் துடித்துத் துவண்டனர்

337

எல்லையுண்டு இரவுக்கு ஏற்றமிகு விடியலால்
எம்மவர் துயருக்கு எல்லையே இல்லையே
மாலையிட்டு மணந்தாள் மங்கலமாய் வாழவென்று
மாலையின் மலர்கள் மடியுமுன் அமங்கலி
உலைவாடல் கண்டுழைக்க உணர்வோடு சென்றவர்கள்
உலகைவிட்டே சென்றனர் ஊமையின் கனவாக
தொலைநின்று பார்ப்பவர்க்கு சோகங்கள் புரியாது
தலைவலியும் காய்ச்சலும் தனக்கே புரியுமம்மா

338

தாயின்றி தந்தையின்றி தக்கதுணை யாருமின்றி
தவித்திடும் சிறார்களின் துயரங்கள் மாறிடுமா?
சேய்தருவான் வாழ்வென தலைநிமிர்ந்த பெற்றோரின்
செய்வதறியாத் தவிப்பு சிலநாளில் தீர்ந்திடுமா?
ஓய்வில்லா நிலையாகி உழைப்பிலே உறுதியான
ஒப்பில்லா முதியோரின் பிள்ளைகள் கதியெதுவோ?
தாயுள்ளம் வேண்டுமென சாற்றிடும் மானிடரே!
தாங்குமா எவருள்ளம் தீநடுவே நீவிர்நின்றால்?

339



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறுதிப்படுத்தல்

அழுகுரல் ஆங்காங்கு இறங்குதுறை எங்கணுமே
அடக்க முடியாமல் பணியாளர் திணறினர்
கரையைத் தாண்டிய காட்டாறாய் உணர்வுகள்
கண்கள் குளமாக கைகால்கள் நடுங்கிற்று
ஒருவுடல் மவுணென அடையாளம் கண்டதால்
உருத்தெரியா உடல்களுக்கு ஆதாரம் தேவையன்று
கரைவலைத் தொழிலுக்குப் புறப்பட்ட 'பிலிப்'பின்
'தூயஒளி' தொழிலாளர் என்பதுதான் உண்மை

340

இதுவரை அறிந்திட இயலாமல் இடர்பட்டு
இதயத்தை குடைந்து நின்றபுதிர் விடையிப்போ
புதையாமல் தெளிவாக வெளியாக வந்ததனால்
பணியாளர் உள்ளத்தில் பதட்டமும் வேதனையும்
உதயத்தின் முன்னரே உழைத்திடச் சென்றவர்கள்
உருக்குலைந்த நிலையில் பிணமான காட்சியதால்
இதயத்தின் பெருந்துயர் தாங்காது திண்டாட
இருகொள்ளி எறும்பின் நிலையாக நின்றனர்

341

கூடிநின்று கும்மாள மடித்த நண்பர்கள்
குலவி மகிழ்ந்து குதூகலித்த பிணைப்புகள்
கோடிபல கொண்டாலும் கர்வமே கொள்ளாது
கோபுரமாய் நிற்கும் மரியாதைக் குரியவர்கள்
தட்டிப் பறித்து உணவுண்ட உறவுகள்
தேடிவந்து ஆதரவாய் துணைநின்ற அயலவர்கள்
கிடக்கின்றார் படகினிலே கண்முன்னே சடலமாதாய்
கைகளிலே ஒட்டியது அவர்களது செந்நீர்

342



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்சாரம் தாக்கியது போலுமுடல் துடித்திட
மிகையாய்க் குருதி கொதித்திட வியர்த்தது
கண்களில் நீர்த்துளி கலங்கிய இதயம்
கடமை முன்னின்று கொடுத்தது உறுதியை
கணத்தினில் மனமொத்தி கைகள் உயர்ந்தன
'கச்சை நனைந்தபின் குளிரென்ன கூதலென்ன?'
பணியென வந்தபின் பாசமென்ன பற்றென்ன
புதுவேகம் பிறந்ததுபோல் தொடர்ந்தன பணிகள் 343

உடல்களைச் சுமந்த முதலாம் வாகனம்
உடனே சனசமூக நிலையம் சென்றது
அடுத்த வாகனத்தில் அடுக்கினர் உடல்களை
அடுத்து வந்தவை நீரிலே தோய்ந்தவை
படகினுள் கடல்நீர் உடல்களை மூடிட
பாதிவரை புகுந்தும் பாதகம் நிகழவில்லை
முடியாத நிலையில் மிதந்துவந்த ஆச்சரியம்
முகங்களில் வெளிப்பட மிகையான சோகம் 344

வீதிக்கு வந்தழுத உறவுகள் செய்கையால்
விபரம் காற்றாய் விரைந்தே பறந்தது
வீதிகள் ஓரங்கள் வெளிகளில் தரித்து
வழிபார்த்துக் காத்திருந்த மக்களிடை அழுகுரல்
மோதியே எழுந்தது வெளிப்பட்ட உணர்வலை
மரணித்தோர் யாரென முற்றிலும் அறிந்ததால்
எதிர்பாரா நிகழ்வினால் ஏக்கத்தில் சிலபேர்
இதயம் பலமற்று சரிந்தனர் மயங்கி 345

இறங்கு துறைச்சூழல் இயன்றவரை வெளியாக
இருந்தவர் அடைந்தனர் சனசமூக நிலையம்
எறிக்கும் வெயிலிலும் இடத்தை நிரப்பிட
ஈடில்லா ஆரவாரம் எதிர்பார்ப்பின் பயனாக
இறப்பு நிகழ்ந்ததை அறிவிக்கும் 'துக்கமணி'
'**இறைப் பாரித்தது**' யாகப்பர் ஆலயத்தில்
மறைப்பு இல்லாமல் வெளிவந்த உண்மை
விரைவாய் பரவியது வாழ்விட மெங்கனும் 346



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனசமூக நிலையம்

வெட்டிக் குதறியும் முற்றாய்க் கிழித்தும்
வெறியின் தனத்தை உணர்த்தும் உடல்கள்
வெட்டிய கைகளை கால்களை பொருத்தி
வைத்த உருவங்கள் நிலையத்தில் வரிசையாய்
நடவடிக்கை நோக்கி காத்திருந்த உடல்கள்
நெஞ்சு பிளந்து வயிறு துறந்ததாய்
குடல் சரிந்து உள்ளுறுப்பு சிதைந்து
கண்கள் வெளியே துருத்தி இருந்தன

347

சிதறிய சிரசுடன் வெளிநீண்ட நாக்கு
சிதைந்த இடுப்பு கழன்ற கால்கள்
சதைகள் கிழிந்து எலும்புகள் புறப்பட்ட
சடலங்கள் அவலத்தின் சான்றாய்க் கிடந்தன
சதையைப் புசிக்கும் கானகத்து விலங்கிடம்
சிக்கிய மனிதரின் சிதைந்த உடல்களாய்
எதையும் முற்றாக இல்லாமற் செய்திடும்
எண்ணத்தின் வெளிப்பாடாய் மனங்களில் நின்றது

348

கரைவலைத் தொழிலுக்கு காலையில் சென்றோரே
கொல்லப் பட்டதை உறுதியாய் அறிந்ததால்
உரிமையை எவரும் உள்வந்து உரைத்து
உறுதிப் படுத்தும் தேவைக ளங்கில்லை
உரிய அலுவல்கள் ஊக்கமாய் நடந்தன
உரிமையாளர் நுழைந்திட அனுமதி இல்லாமல்
பார்த்திட நின்றவர் ஏச்சினை எதிர்கொண்டு
பல்வேறு எதிர்ப்பையும் சந்திக்க நேர்ந்தது

349



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனசமூக நிலையச் சுற்றாடல் எங்கும்
திரளான மக்கள் சாதனை செய்வதாய்
மண்ணின் மருத்துவர் ஏபிரகாம், பிலிப்பு
மனதார வருகைதந்த பல்கலை மாணவர்
இணைந்த அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்
இளையோர் எனப்பலர் ஈடற்ற பணியில்
உணர்வின் எழுச்சியால் உரத்த தர்க்கங்கள்
உன்னத பணியினால் உறுப்பினர் மௌனம் 350

நேரத்தை சிறிதும் விரயம் செய்யாமல்
நெக்குருக ஆற்றினர் நேர்த்தியாய் தம்பணி
துர்நாற்றம் எழுந்தது துண்டித்த உறுப்புகளில்
துளியதும் மனமோ துவழாமல் ஏற்றனர்
ஒருபோதும் அனுபவியா அருவருப்புச் செயல்கள்
ஒதுங்கிடாமல் ஒன்றித்து உறுதியாய் இயங்கினர்
சொரிந்தன விழிகள் சுடுநீராய்க் கண்ணீர்
சுமந்திட முடியாமல் துயரத்தின் உச்சத்தால் 351

எதையும் தாங்கிடும் இதயம் என்றாலும்
எப்படித் தாங்கும் இத்துயர் தன்னை
வீதிகளால் சிறுவர் முதியோர் இளையோர்
வரலாறு காணாத விதத்தில் ஊரவர்
பாதைகள் பலதில் பார்த்திரா முகங்கள்
பகிர்ந்து கொள்ளத் துயருற்றோரை நாடினர்
மதியம் வருமுன் மிளிர்ந்த கலகலப்பு
முற்றிலும் முரணாக மாறிய நிலையில் 352

கொண்ட துயரில் மூழ்கிய பலரும்
கண்ணீர் சிந்திடக் காத்து நின்றனர்
பெண்கள் குழுவாய் பிணைந்தும் அணைத்தும்
பெருங்குரல் கொடுத்து பாரத்தைக் குறைத்தனர்
மென்மனம் கொண்டவர் வயிற்றிலும் மார்பிலும்
மாறிமாறிக் கரங்களால் அடித்துக் கதறினர்
உணர்வு மேலீட்டால் உச்சம் தலையில்
உரத்து அடித்தும் அழுகுரல் கொடுத்தனர் 353



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதறலின் எதிரொலி ஏந்திய காற்றால்
கலங்கிய பலரும் இதயத்தை அழுத்தினர்
கதறாது அடக்கிட முனைந்த சிலரும்
கவலை மேலிட மயங்கி வீழ்ந்தனர்
இறந்தவர் உறவுகளின் இழவுக் குரலினால்
இதயம் நொந்திட பார்த்தவர் விம்மினர்
அறிமுக மற்றோரும் ஆங்காங்கு நின்றதால்
அன்பர்கள் நிலைகண்டு கலங்கி சரிந்தனர்

354

குருதியிற் தோய்ந்த வரலாறாய் பதிவாகி
குவலயம் கலங்கிடும் நிலையாக உருவாகி
வேரோடு ஒழிந்த வேதனை நெருப்பில்
வெந்தது போலிதயம் மௌனமாய் அழுதது
துயரினைச் சுமக்கும் சக்தியை இழந்து
துடித்திடும் மக்களின் கண்ணீராய் உதிரும்
துயரத்தின் வெளிப்பாடு அரங்கேறும் களத்தில்
துயருற்றோர் நிலைமை தெளிவான சாட்சிகள்

355



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருகாத உள்ளமில்லை

மயக்கம் தெளிந்ததால் விரைந்து வந்துமே
வாஞ்சையாய் புகுந்திடும் முனைப்பில் கிறிஸ்ரியன்
தயக்கம் மீண்டும் தலைசுற் றலாமென
தடுத்தனர் அனுமதி கொடுத்திட விரும்பாமல்
இயலாத நிலையிலும் தலையாய கடமையாய்
ஏமாற்றம் மிஞ்சிட இயன்றவரை முனைந்தும்
புயலாக அவருள்ளம் பலமாக தாக்கியும்
பாசத்தை வெளிக்காட்டும் பாசாங்கு நிஜமாயில்லை 356

அவருணர்வில் நிலைத்தவர் அவராலே பயின்றவர்
அவரன்பில் திளைத்தவர் ஆதரவின்றி கிடக்கிறார்
குருவாக நின்றவர் கரைவலை தொழிலுக்கு
கொடையென சொல்பவர் கொலையாலே பிணமானார்
எவர்வந்து ஆறுதல் மொழியது கூறினும்
எல்லையைக் கடந்திடும் ஏக்கத்தில் துடித்தவர்
பிரிவின்று நடந்தது விதியென்று சொன்னோரின்
பதிலுக்கு ஆவேசம் பிறந்திட ஏசினார் 357

வருவதும் போவதும் விதியென்று சொல்லி
வரையறை இல்லாத வயதென்றும் சொல்வர்
உரைப்பவர் வீட்டில் ஒருகொலை வீழ்ந்தால்
உபதேசம் செய்திட உளமார முடியுமா?
புரையோடிய எண்ணம் புத்தாக்கம் பெறாமல்
பெற்றிட இயலுமா பெறுமானத் தன்மையை?
கரைபுரள் சோகத்தை கடுகாக மாற்றிட
கற்றவர் கூறிடும் காரணம் இதுவாமோ! 358



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* * *

கனகம் துயரினால் தன்மார்பில் அடித்தாள்
"காலையில பஞ்சியா யிருக்கெண்ட மனுசன்
சொன்னதக் கூடவும் கேக்காம அனுப்பினேனே
சொல்லச் சொல்ல நாய்கள் ஊளையிட்டுதே
முன்னால விடியச்சோறு முழுசா தவறிச்சுதே
மனசக் கல்லாக்கி அனுப்பி வைச்சேனே"
நினைவை நெஞ்சில் இரைமீட்ட கனகத்தின்
நெஞ்சத்து வேதனை வார்த்தை களானது 359

தன்னிலை மறந்தவள் தவிக்கும் கரங்களை
தலையி லடித்து தன்தவறு ணர்த்தினாள்
தன்னது வற்புறுத்தல் இல்லாமல் இருந்தால்
தன்பதி பிணமாகி யிராரெனும் தவிப்பு
துணிந்து அவரைக் கொலைக்களம் அனுப்பி
துணையாய் நின்றது தானென்ற அங்கலாய்ப்பு
கண்ணீரில் ஓடமானாள் கலங்கரை ஒளியிழந்தாள்
கரையேறும் பாதையைக் காணாது கலங்கினாள் 360

கைகளைப் பலமாய்த் தலையிலே அடித்த
கனகத்தின் செயலால் பலரும் அழுதனர்
கைகளைத் தடுத்து முதுகைத் தடவி
கண்ணீரைத் துடைத்து ஆறுதல் கூறினர்
"குமருகளை கரைசேர்க்க கடமையாய் அனுப்பினேன்
கப்பலே கவிண்டு போச்சுதே இண்டைக்கு"
புகைந்து எழுந்த எண்ணங்கள் வார்த்தையாக
பலமுறை ஓங்கி அடித்தாள் கரங்களை 361

உணர்வற்று சோர்ந்தன உறுதியின் கரங்கள்
ஒளிமங்கி கண்கள் இமையுள் சொருகின
அனுங்கி வியர்த்துக் கொட்டிட இதழ்கள்
அசைய மறுத்தன உலர்ந்து ஒட்டிட
கண்மூடி சரிந்தவளை கையேந்திய சிலர்
கால்களை நீட்டியபடி மடியில் தாங்கினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும் எத்தனை வேதனை வடிவங்கள்
இயற்கையாய் நடந்தன இடரான சூழலில்

362

* * *

பேர்சொல்ல பிள்ளையென பரிவுடன் அமுதூட்டி
பாசத்தை பாலாக பருக்கிக் காத்தவள்
பாரினில் வல்லோராய் பார்க்கலா மென்றிருந்த
பிள்ளைகள் மூன்றுபேர் பிணமாக நின்றவள்
காரிருள் வறுமையை களைந்திடும் நோக்கில்
கணவனும் சென்றதால் அவனையும் இழந்தவள்
பேர்சொன்ன பிள்ளைகள் பராமரித்த கணவன்
படுகொலை செய்தியால் புரண்டனள் தரையில்

363

காலமாம் காட்டாறு கரைமீறி போகையிலே
காரிகையின் வாழ்வு கவலையற்ற தாகாதா?
காலொடிந்த நிலையாக கடந்திட முடியாமல்
காத்திட வழிதேடும் காலம் தொடராதா?
கேலிமிகு உலகத்தில் கேட்பார் யாருமற்ற
கோலத்தை சுமக்கும் கொடுமை நிகழாதா?
ஞாலம் முழுவதும் நலம்தரும் கதிரோன்
நங்கை இவளுக்கு நலத்தினை தராதா?

364

* * *

வாழலாம் மகிழ்ந்தென மணந்தநல் மங்கை
விதவைக் கோலத்தில் பதினாறு நாட்களில்
தொழிலுக்கு அனுப்பி திரும்பி வரும்வரை
தன்வேதனை அடக்கித் தானிருந்த பெண்ணாள்
பழிபேசும் உலகில் பாசத்தை இரையாக்கி
பதறித் தவிக்கிறாள் பிறர்சொல் கேட்காமல்
வீழ்ந்து துடிக்கிறாள் முடியாமல் விழிக்கிறாள்
வழியேது தனக்கென வாய்விட்டுக் கதறுகிறாள்

365

பொட்டிழந்த நெற்றியும் பூவிழந்த தலையும்
பொலிவிழந்த சேலையும் பொன்னிழந்த கழுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியம் கூறுதே கைம்பெண் இவளென்று
காலமெலாம் கண்ணீரில் கழிக்கும் பெண்ணென்று
வீட்டைவிட்டு வெளியேறி வடிக்கின்றாள் கண்ணீர்
வரலாறு தன்னை வஞ்சித்து விட்டதென்று
கூட்டுக் குடும்பத்தின் குதூகலம் தொலைந்து
கூவாத குயிலாக தொடருமன்றோ அவள்வாழ்வு

366

***

உயரிய வாழ்வில் ஓங்கிட நினைத்து
உழைத்திட இளையோர் இருவரை அனுப்பி
நோயாளி கணவனின் துயரினைக் களைந்து
காத்திடத் தோன்றியது கடுகேனும் தவறன்று
உள்ளத்தின் உணர்வுகளை உருகாத ஜடமாக்கி
உழைத்து வரும்வரை அவர்கள் நலன்வேண்டி
வலியுடன் இருந்தவள் மரணித்த தகவலால்
வீதியில் கதறுகிறாள் விளைவால் நாதியற்று

367

எண்ணம் கனவாகி இடியுடன் மழையாகி
இதயம் பொடியாகி கண்ணீர்க் கடலாக
அண்ணாந்து பார்த்து ஆதரவு தேடுகிறாள்
ஆண்கள் கொண்டாடும் பெண்ணெனும் கோயில்
கண்ணுக்குள் நடந்த காட்சிகள் எல்லாம்
கலையாமல் நினைவுகளில் கனவாக தெரிந்திட
கண்ணிலே நீர்பெருக கவலையில் மனமுருக
காலமெலாம் இந்நிலை கொல்லுமென கதறுகிறாள்

368

***

ஒத்திசைந்து அம்பா ஓய்வற்றுப் பாடியவர்
ஓரமாய் நின்றின்று முகாரி பாடுகிறார்
இத்தகை துர்நிலை ஏற்பட்ட காரணத்தால்
இதயம் வெம்பி ஈடின்றி அழுகிறார்
கூத்தாடி மகிழ்ந்து கும்மாள மடிப்போர்
குரலடைத்து அழுதிட முடியாமல் தவிக்கிறார்
எத்திசையும் சோகம் உச்சத்தைத் தொட்டது
எல்லாமே உணர்வின் உள்ளார்த்த வெளிப்பாடு

369



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***

"நானப்ப சொன்னேனே கேட்டீங்களா நீங்க
நாங்க கரையில நிண்டு பார்க்கவே
கண்ணுக்கு முன்னால கொலை நடந்ததடா
கறுத்த எறும்பையே நசிக்காதவர் அப்பா"
கண்கள் சொரிநீரை கைகளால் துடைத்தபடி
கவலை மேலோங்க கலங்கினான் ஆனந்தன்
புனித அந்தோனியார் ஆலயம் செல்கையில்
பார்த்த நிகழ்வால் மனம்வெந்து நின்றான் 370

பணியாற்ற முயன்றவன் பாதியில் மயங்கினான்
பிரேதங்கள் கண்ட பாதிப்பின் துடிப்பால்
அனலாகக் கொதித்திட அனுப்பினர் மருந்தகம்
அங்கிருந்து நேராய் வந்திருந்தான் ஆனந்தன்
ரணத்தில் தோய்ந்த உடல்களை கண்டதும்
இருப்புக் கொள்ள இயலாமல் தவித்தான்
நண்பர்கள் அவனுக்கு நிழலாகி நின்றும்
நிதர்சனம் மாற்றிடும் நிலையி லவரில்லை 371

***

சென்றனரே செழிப்புடன் வாழ்ந்திடும் துடிப்புடன்
சிலநொடியில் அவருடலை சிதைத்த தேனைய்யா?
இன்னது நிகழுமென எண்ணாத தொழிலாளர்
இதயத் துடிப்பை ஒழித்த தேனைய்யா?
அன்றாடம் உழைத்திட ஆர்வமாய் சென்றோரை
அங்க மங்கமாய் அரிந்த தேனைய்யா?
கன்னமிட துப்பாக்கி கொண்டா சென்றார்கள்
கண்டம் துண்டமாய் கிழித்த தேனைய்யா? 372

நின்றவர் உள்ளத்தில் நிகழ்கால கேள்விகள்
நிகழ்ந்தது என்னவென்ற நிதர்சன அலசல்
'ஏனிந்த நிலை' ஏக்கமாய்க் கேட்டனர்
எவர்க்கும் பதிலற்ற ஏமாற்றமே மிச்சம்
என்றுமே இதற்கு ஏற்றதாய் கிடைக்காது
என்பதை அங்கிருந்தோர் ஏற்காம லில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் அறியலாம் உண்மை நிலையென்ற
ஆதங்க வெளிப்பாடு ஆரவாரமாய் இருந்தது
373

பதினாறு வயதான சிறுவர் முதலாக
பல்லிழந்த எழுபது வயதினர் வரையில்
கதியெனக் கடலன்னை களந்தேடிச் சென்றனர்
கரைவலையில் வருவாய் கிடைக்கும் உறுதியில்
விதியெனு மொருவாதம் வரலாறாய் அரங்கேற
முரணற்ற வேட்டை முழுமையாய் நடந்தது
இதயமற்ற செயலால் இருப்பு கேள்வியாக
இரக்கமற்று நடந்தது இம்மண்ணில் அவலம்
374

தாலி அறுபட்ட பெண்கள் எத்தனை?
தனையரை இழந்த தாய்மார் எத்தனை?
தள்ளாத வயதிலும் தாபரிக்கப் புறப்பட்ட
தந்தையை இழந்த பிள்ளைகள் எத்தனை?
தாலிகட்டி முதலாண்டு நிறைவின்றி இருக்கையில்
தாரத்தை இழந்து தவிப்பவர் எத்தனை?
பலரை ஒருசேர பலியாகக் கொடுத்து
பதைத்திடும் குடும்பங்கள் எத்தனை எத்தனை?
375

அத்தனை பேரினது கண்ணீரும் செந்நீராய்
ஆதரவு தேடிடும் அவலம் தொடங்கியது
இதயங்கள் அக்கினிக் குழம்பாய் ஆகின
இருளவர் வாழ்வினில் சூழ்ந்து கொண்டது
எதிர்காலம் வினாக்குறி என்றாகி விட்டது
என்னங்கு நடந்தது? எப்படி நடந்தது?
பதிலில்லா கேள்விகள் படகினர் வரவில்லை
பாதகர் பசியாறிப் பறந்து விட்டனர்
376

கண்கண்ட சாட்சியாய் கடமையாய் எண்ணி
கொண்டு வந்ததால் கோபுரமாய் சசீகரன்
மண்டைதீவை நெடுநாள் வசிப்பிடமாய் கொண்டதால்
முன்வந்து செயலாற்ற வாய்ப்பாக அமைந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்கொண்ட துயரினை முகங்காட்டி நின்றிட
மனதுருகி விழிகள் வடித்தன கொதிநீரை
கண்ணீர்த் தடங்கள் கருத்தாய் அடைந்த
கவலையை புடமிட்டுக் காண்பித்து நின்றன 377

சசீகரனை சூழ்ந்தனர் தவிப்புடன் பலரும்
சம்பவம் கேட்டுச் சென்றிடும் துடிப்புடன்
புசித்திடக் கொடுத்த 'பணிஸ்' அவனருகே
பார்வையில் சோகத்தின் பிம்பமாய் தெரிந்தான்
அசைவின்றி சிலையாக இமைமூட மறந்ததால்
ஆழ்ந்த மௌனமே அணியாக இருந்தான்
அச்சத்தோ டாச்சரியம் கலந்திட ஆவலில்
அறிந்திடும் கேள்வியாய் "என்னதம்பி நடந்தது?" 378

கிறிஸ்ரியன் குரலால் சசீகரன் திரும்பினான்
குறியாய் நிலைத்தன அவனது விழிகள்
மறுகணம் கிறிஸ்ரியன் விழிகளில் மலைப்பு
மிதமிஞ்சி வழிந்த விழிநீரால் அதிர்ச்சி
சற்றும் எதிர்பாரா சசீகரன் நிலையால்
சஞ்சலம் திண்டாட்டம் மற்றவர் நடுவே
உறுத்தலாய் இருந்து உள்ளத்தைக் குடைந்த
உண்மையை உரைத்திட ஒருமனங் கொண்டான் 379

மனத்தின் துடிப்பை வார்த்தையாய் உரைத்திட
மடியாது முளைவிட்ட வேதனை நீராக
கண்ணிமை நிரம்பக் கூறிட முனைந்தும்
கட்டுப்படாது விம்மல் தொடர்ந்து தடுத்தது
கண்ணீர் சொரிய குரல்வளை அடைத்து
குருதி கொதித்து வியர்த்துக் கொட்டிட
தண்ணீர் கொடுத்ததும் தாவியே பெற்றவன்
தாகத்தின் மிகுதியால் குடித்து முடித்தான் 380

முன்னால் இருந்தோரை மீண்டும் பார்த்தவன்
முகத்தைக் கைகளால் வழித்துத் துடைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களை மூடித்தன் உணர்வைத் திரட்டி
கண்ணாற் கண்டதை சிந்தனையில் குவித்தான்
தென்புடன் உரோமம் சிலிர்த்து எழவே
சடுதியாய் தடுமாற்றம் வியப்பாய் வந்தது
மனதின் போராட்டம் வெள்ளிடை மலையாக
மெதுவாய்த் திறந்தன உலர்ந்த இதழ்கள் 381

"கறுப்புச் சட்டைக்காரர்" நடுங்கும் குரலுடன்
கண்ணீர் விம்மல் குறியாய்ப் பார்த்தான்
முறுகிய நினைவுகள் முரணின்றி சுழன்றன
விளைவுகள் சுழன்றன உணர்வுகள் சுழன்றன
முறைமாறி உலகமே வலம்வரும் பிரமை
மெல்ல மெல்லப் பார்வையில் தெளிவு
வற்றுநீர் கண்ட வயல் நிலம்போல
மாறிட அவன்முகம் மறைப்பின்றி தொடர்ந்தான். 382



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்காரம்

காலையில் புறப்பட்டான் கறிமீன் பெற்றுவர
கடலுக்குத் தானன்று போகாது நின்றதால்
தொழில் செய்த முனைதேடி செல்கையில்
தெரிந்த காட்சியால் சசீகரன் கலக்கத்தில்
தொலைவில் கடற்கரை ஓரமாய் கடற்படை
துப்பாக்கி சகிதம் வருவது தெரிந்தது
கலக்கத்தில் பற்றையின் மறைவில் அமர்ந்தான்
கடற்படை அவனை காணாத வகையில்

383

படையினர் வருகின்ற பாதையின் ஓரமாய்
பயங்கொண்டு மக்கள் பதுங்கிட ஓடினர்
சுடுவது தெரிந்தது நெருப்புப் பிளம்பாய்
ஒலிகள் பலவாக ஒலிப்பதும் கேட்டது
உடலது நடுங்கிட உதிரமும் உறைந்திட
உலர்ந்த இதழுடன் உற்றுப் பார்த்தான்
படையினர் முனைப்பாய் பாதையில் தொடர்ந்தனர்
பயத்தால் இமைகளை மூடவும் தயங்கினான்

384

சசீகரன் பதுங்கிய 'ஈச்சம்' சோலை
செறிவான தென்பதால் செல்லலாம் பலதூரம்
அச்சமற்று மறைந்து சென்றுவர முடியுமென
அறிந்திருந் தானிவன் 'மண்டைதீவில்' வசிப்பதால்
அச்சூழல் அவனுக்கு அத்துபடி ஆனதால்
அரவமின்றி நெருங்கினான் தீவின் முனையை
ஈச்சமரப் பற்றையில் ஏற்றபடி மறைந்து
இடையாய்த் தெரியும் வெளியூடே பார்த்தான்

385



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்குப் பக்கமாய் வந்த கடற்படை
விரிந்து கடற்கரை நோக்கிச் சென்றது
படகுகள் தனில்வந்த படையினர் கரைவலை
படகிற்குத் தெற்கே பார்வையில் நின்றனர்
இடையில் வலையை இழுக்கும் தொழிலாளர்
இரண்டு நிரையில் தொடராய் தெரிந்தனர்
சுடுகலன் ஏந்திய உலங்கு வானூர்தி
சுற்றியே பதிவாய் சுழன்று திரிந்தது

386

அம்பா பாடியோர் ஆர்வமற்று நின்றதால்
ஆர்ப்பரிப்பு இல்லை ஆரவாரம் இல்லை
செம்மையாய் தொழிலை செய்யவும் தயங்கி
சேர்ந்து பயத்துடன் சோர்ந்து நின்றனர்
சம்மாட்டி தரத்தினனை சைகையால் அழைத்திட
சாரத்தை உடுத்தியே சென்றான் அவர்முன்
சம்பந்தம் இல்லாத தவிப்பில் 'மவுண்'
சிக்குண்டு நிற்பது சட்டெனப் புரிந்தது

387

கொல்லுத லேயன்றி வேறொரு நோக்கம்
கொண்டதாய் காணவில்லை கடற்படை செயலால்
மேலிடக் கட்டளையை முனைப்பாய் நிறைவேற்ற
முயல்வது போலவே முனைந்தனர் அங்கே
நிலைய மெடுத்தவர் நின்றிடும் நிலையினை
நோக்கிய கண்கள் நிலைத்தன பயத்தால்
வேலியாய் நின்றிடும் வேட்டைச் சிங்கங்களாய்
விரிந்தது தொழிலாளர் விழிகளின் திரையில்

388

எதிர்பாரா நிலையில் நிகழ்ந்த செயலால்
ஏக்கப் பார்வையில் மவுணை நோக்கினர்
இதயத் துடிப்பின் இடைவெளி குறைந்தது
ஏக்கத்தால் கண்களை இறுகத் துடைத்தனர்
எதுவும் நடக்காது என்றெண்ணி இருக்கையில்
எதிர்மாறான நிலையில் அதையிப்போ கண்டனர்
சாதுவாம் மவுணை இலக்காக துப்பாக்கி
சிலையாக நின்றனர் சிதறாத பார்வையில்

389



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாகி விழிகள் குன்றிடா நிலையில்
கண்ணியால் சிதறிய துடிப்பில் இதயம்
கால்கள் கட்டினை இழந்து நடுங்கிட
கண்முன்னே கண்டனர் கொடூரக் காட்சியை
சல்லடை ஆக்கின சீறிய சன்னங்கள்
சிலையாய் தள்ளுண்டு வீழ்ந்தான் மவுண்
நிலத்தில் துடித்தவன் கிடக்கும் நிலைகண்டு
நின்றவர் உறுதிகள் பொடியாய்த் தகர்ந்தன

390

அதிர்வால் தொழிலாளர் திறந்தவாய் நிலைத்திட
அவர்களின் கால்கள் ஆதாரமின்றி நடுங்கின
அதிரும் நிகழ்வாய் படையினர் இலக்குகள்
அவர்களை நோக்கி வெறியுடன் திரும்பின
இதயம் ஒருகணம் இயங்க மறுத்தது
இடிவீழ்ந்து தலையை தாக்கிய தவிப்பில்
எதையும் மறந்த மரண பயத்தால்
ஏக்கம் பிறக்க உடலும் வியர்த்தது

391

மரண பயத்தின் மஞ்சாடி நேரத்தில்
மனைவி சகோதரர் மக்கள் குடும்பம்
உறவினர் அயலவர் ஊரவர் பங்காளர்
உயிரான பந்தங்கள் ஊற்றான உள்ளங்கள்
உறவாடும் நண்பர்கள் வணங்கும் தெய்வங்கள்
உறுதுணை புரிந்தவர் உரமாக நின்றவர்
வரிசையாய் நினைவினில் முளைத்து எழுந்தனர்
வாழ்வின் அந்தத்தை உணர்ந்த நிலையில்

392

வானிலே வானூர்தி வட்டமிட்டுக் குறிபார்க்க
விழிகள் ஈரம் வறண்டு நோக்கின
கனவில் நிகழ்வதாய் கணத்தினை உணர்த்திட
கலக்கம் இறுதிக் காலமென் றுணர்ந்திட
தோன்றாத நினைவுகள் தோன்றியே மறைந்திட
தாங்காத இதயம் துடித்தது வேகமாய்
கனரக ஆயுதங்கள் காணப்படா நிலையிலும்
குருதி உறைந்ததாய் கைகள் விறைத்தன

393



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்க முனைந்தும் நகரவில்லை கால்கள்
நரம்புகள் புடைத்திட கொதித்தது இரத்தம்
நாடித் துடிப்பால் நடுக்கம் தொடர்ந்தது
நாதியற்று ஆள்மாறி பார்த்திட ஏக்கம்
கூட்டமாய் நின்றதால் குலைந்திட அச்சம்
கூட்டாக இணைந்தனர் காத்திடும் முயற்சியில்
தொடங்கின தாக்குதல் தீவிரத் தன்மையாய்
திடுக்குற்று திரும்புமுன் தடுப்பற்றுத் தாக்கின
394

இருபுறம் இருந்தும் ஈட்டியாய் சன்னங்கள்
இவற்றோடு இணைந்து ஹெலியின் தாக்குதல்
பெரியதோர் படையணி எதிர்கொள் நிலையில்
பலமான தாக்குதல் திட்டமாய் இருந்தது
வரலாற்றில் இழிவென்று வகுத்தவர்க்குப் புரியாதா?
வலுவற்ற தொழிலாளரை வலிந்து தாக்குதல்
பெருமெ டுப்பான மும்முனைத் தாக்குதல்
பெயரிடா விடினும் கொலைகளின் அரங்கேற்றம்
395

முக்கூட்டு முயற்சியில் முன்னேற்றம் கண்டிட
முழுமையாய் முயன்றனர் பகுத்தறியா படையினர்
வக்கிரம் கொண்டவர் மனத்தின் வெளிப்பாடு
மழையென சன்னமாய் பொழிந்தது அங்கே
கைகளால் மறைத்து காத்திட எண்ணியே
கரங்களை முன்நீட்டி மறித்து நின்றனர்
பகைவரைக் கொன்றிடும் பயிற்சிகள் பெற்றவர்
புரிந்திலர் அப்பாவிகள் கண்முன்னே நிற்பதை
396

சன்னத்தில் தப்பிட தாவியும் குதித்தனர்
சாதகமற்ற வெட்டையில் ஒதுங்கவும் வழியில்லை
சின்னதாய் மறைப்பு ஏதுமின்றிக் கரங்களை
சிரத்துக்கு மேலுயர்த்தி கும்பிட்டுக் கதறினர்
ஒன்றுமே பலனின்றி எதிர்பார்ப்பு வீண்போக
ஒருவன் ஓடோடிக் காலடி குனிந்தான்
தன்காலா லவனை உதைந்து வீழ்த்தி
சன்னத்தை செலுத்தினான் சிப்பாயில் ஒருவன்
397



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திடக் கடலின் ஆழத்தைத் தேடியும்
கரையில் பற்றை மறைவுக்கும் ஓடினர்
பதுங்கிடப் படகில் பாய்ந்து ஏறியும்
பறந்தன சன்னங்கள் செல்கின்ற இடமெலாம்
ஒதுங்கிட எண்ணி ஓடியோர் முடியாமல்
ஒவ்வொரு தேங்காய் வீழ்வதாய் வீழ்ந்தனர்
கதியற்று கைகளை வானோக்கி உயர்த்திட
'கடவுளே' என்றொலி காற்றோடு கலந்தது

398

செங்குருதி பீறிட்டுச் சிதறிப் பாய்ந்திட
சமர்க்களப் படையினராய் சரிந்து வீழ்ந்தனர்
அங்கங்கள் பிளவுற்று ஆங்காங்கு பறந்திட
அரைகுறை உடல்களாய் விதையாகிக் கிடந்தனர்
பொங்கிய கடலலையும் கரையின் ஓரமாய்
புரட்டி ஒடுக்கிட புரண்டு மீண்டனர்
எங்குமே இரத்தம் அவலக் குரலொலி
ஏனென்று கேட்பாரற்ற ஏக்கத்தின் இதயவொலி

399

**'நோர்மாண்டி தரையிறக்க'** கரையை நினைவூட்டி
நின்றது மண்டைதீவு முனையின் கடற்கரை
பெரும்படை யெடுப்பாய் புறப்பட்டு வந்தவரை
போருக்கு அறைவிடுத்து பொருதிய நிகழ்வது
பாரறிந்த உண்மையால் படித்திட வரலாறாய்
போர்க்கள குருதிமழை பெருவெற்றிக் குரித்தாச்சு
காருணிய மற்றோரின் கொலைவெறிக் கொள்கையை
காலம்தான் ஒப்பிடும் நோர்மாண்டி நிகழ்வுடன்

400

கணமேனும் இடைவெளி காணாமல் வெளிவந்த
குண்டுகள் எவரது நிழலையும் விடவில்லை
இனத்தின் முத்திரையாய் அடையாளம் இடப்பட்டு
இன்னுயிரை பதிவாக்கின உயிரிழந்த உடல்கள்
ஈனத்தன செயலான அறுவடையின் விளைவால்
இருப்பழிந்த உயிர்களின் அடையாளம் இவைகள்
அனைத்தும் உயிரற்று அடங்கிய நிசப்தம்
அலையுடன் காற்றும் அமைதி காத்தன

401



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்தனைக் காத்திடத் துடித்த துடிப்பு
உலகமே அதிரக் கதறிய கதறல்
கையெடுத்துக் கும்பிட்ட கண்ணீர்க் காட்சி
கையறு நிலையால் பீறிட்ட குருதி
மெய்யெலாம் உண்டான கொடிய காயங்கள்
மரணித்த நிலையில் விதையுண்ட கோலங்கள்
ஓய்ந்து சத்தமின்றி அடங்கின உயிர்கள்
ஒழித்த மகிழ்வுடன் மீண்டன படைகள்.

402



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேகரிப்பு

வானிலே ஒளிக்கதிர் வர்ணங்கள் பலகொண்டு
மழையின்பின் தோன்றிடும் வானவில் போலவே
மின்னாமல் முழங்காமல் உதித்தது வானவில்
முடிந்தது அறுவடை என்பதைச் சொல்லவா?
மண்ணிலே சாய்ந்தவர் மரணித்து விட்டதை
முன்கூட்டி தெரிவிக்கும் மார்க்கத்தி லொன்றா?
சான்றுகள் இல்லாது சகலதும் முடிந்ததாய்
சொல்லிட முனைந்திடும் துயரத்தின் வெளிப்பாடா?

403

தன்னுருவம் மறைத்த சசீகரன் வெளியேவந்து
தரைகட லெங்கினும் கண்டான் உடல்களை
முன்னால் உலகமே முறைமாறி சுழன்றது
மூச்சிரைக்க முழுவுடலும் நடுங்கிட நின்றான்
கண்முன்னே கண்டவற்றின் குரூரக் காட்சிகள்
கல்லொன்றில் பதித்தது போலவே தெரிந்தது
கணத்தில் இதயம் கணக்கற்றுத் துடித்ததால்
கலக்கம் ஏற்பட்டு கலவரம் உண்டானது

404

குண்டடிபட்ட உடல்கள் வீழ்ந்து சரிந்து
கொட்டிய குருதியால் கரையினில் புலால்மணம்
வெண்நுரை கரையும் வெண்மணல் தரையும்
முற்றிலும் இரத்தச் சிவப்பாய்த் தெரிந்தன
கண்கொண்டு பார்க்கவே கூசிடும் நிலையில்
கண்மூடி சிறுநேரம் குந்தினான் அங்கே
கண்ணுக்குள் காட்சியாய் கண்டவை விரிந்ததால்
கவலை உயிர்பெற எழுந்தான் தவிப்புடன்

405



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையோரம் நெடுகிலும் கம்பான் கயிறுகள்
கயிற்று வலைகள் குவியலாய்க் கிடந்தன
நிரையாய்க் கடலிலும் வலைகள் கிடப்பதை
நீளத்தில் மிதந்த 'புணை'கள் உணர்த்தின
சொருகி வைத்திருந்த மடிப் பெட்டிகள்
சாரங்கள் பழங்கயிறு ஒதுங்கிக் கிடந்தன
உருகியது உள்ளம் பெருகியது கண்ணீர்
உளமார வேதனையில் மூழ்கித் தவித்தான்
406

கொடுமையின் கனதி கொடூரத்தின் உச்சம்
கொலையின் வெறித்தனம் கோலோச்சிய நிலை
சடலங்களின் மத்தியில் தனியனாய் நிற்பதால்
சங்கடம் நிறைந்திட தீராத பதட்டம்
சடலமாய் கிடப்போரை தெரிந்தவன் என்பதால்
சிதறிய இதயமாய் துடித்தது அவனுடல்
கிடப்பவரில் சிலரோ கிட்டிய உறவினர்
குருநகர் அவனது பிதாவழி மண்ணாம்
407

நினைத்ததும் அழுகை நெஞ்சை அடைத்திட
நிலைதடு மாற்றம் நெடிதாய் நீண்டது
நினைவில் வழியில் நடந்தவை புகுந்திட
நடுங்கிய உடலுடன் நிர்க்கதி அடைந்தான்
கண்கள் எரிந்திட களத்தைப் பார்த்தவன்
கதறி அழுவதே ஒரேவழி எனும்நிலை
எண்ணத்தின் தவிப்பால் ஏக்கத்தின் துடிப்பால்
எதிர்பாரா நிகழ்வால் அழுகையில் மிதந்தான்
408

தடுப்பற்று அழுகையில் துவண்டு ஓய்ந்தவன்
தரித்திட இதுவல்ல தருணமென உணர்ந்தான்
நடக்கலாம் ஏதுமென்ற நினைப்புத் தொற்றியும்
நட்டாற்றில் கைவிட்டு நழுவிட விரும்பவில்லை
உடனேயே உடல்களை அகற்றிட வேண்டிய
உறுதியை எடுத்து உதவியைத் தேடினான்
படகொன்று தென்பட அங்கெலாம் தேடினான்
பார்வையில் யாரையும் காணாயினும் துணிந்தான்
409



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனையின் வடக்கே கிடந்த சிறுபடகை
முழுமன வேகத்தில் இழுத்து வந்தான்
துணையென யாருமில்லை துளியேனும் கலங்காமல்
துணிவுடன் உடலைத் தூக்கிட முனைந்தான்
அண்மையில் நின்று நிகழ்த்திய சூட்டினால்
அநேகரின் உடல்கள் பிளந்து கிடந்தன
கண்டதும் அவனுடல் நடுக்கம் கொண்டது
கட்டுப்படுத்த முடியாமல் கண்களை மூடினான் 410

அசையாது சிலமணித் துளிகள் நின்றவன்
அதற்குமேல் நிற்பது தவறென் றுணர்ந்தான்
இசைவாக உடலை இரும்பாக்கிக் கொண்டவன்
இளகிடா மனத்தை இயல்பாக்க முயன்றான்
கருவாடு போடுவதற்கு மீன்களைப் பிளந்து
கடல்நீரில் போட்டதைப் போலவே உடல்கள்
இருந்ததால் அவற்றை தண்ணீரில் இழுத்து
இதயத்தை இரும்பாக்கி படகில் ஏற்றினான் 411

பற்றைக்குள் புகுந்து பிளந்து கிடந்ததை
பொறுக்கி எடுத்தவன் சுமந்து வந்தான்
கரையில் கண்டதை காற்றாய் சேகரித்து
'தூயஒளி' யினுள்ளே தேடினான் கிடந்தன
இருநாலு உடல்களை சுமந்து இறக்கினான்
ஈடாட்டம் கண்டன உடலும் உள்ளமும்
குருதி கொதித்தாலும் கலங்காது தளர்வின்றி
குறும்படகு நிரம்பிட உடல்களை ஏற்றினான் 412

படகுடன் சுற்றியுள்ள பகுதியும் சிவப்பு
படர்ந்திடக் கண்டதும் பார்வை உறுத்தியது
உடலம் நடுங்கி உணர்வைப் பிழிந்திட
உடனேயே கையால் மார்பை அழுத்தினான்
கடினமாய் மனதை கொணர்ந்தும் எவரோ
கொக்கியால் இதயத்தை கொழுவிய தாய்வலி
திடமான உடம்பு தடுமாறி உதறிட
தொடர்ந்த விம்மலை வலிந்து அடக்கினான் 413



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கோல் ஒன்றுடன் துணிந்து புறப்பட்டும்
மெதுவாகத் தாங்கிட வேண்டிய நிலையில்
குருநகர் அடைந்திட வேண்டிய தவிப்பு
கடக்கவுள்ள ஆழமான கடலால் மலைப்பு
காற்றின் தடையிலை இருப்பினும் பரபரப்பு
கடலின் சீற்றமில்லை ஆனாலும் துடிப்பு
வற்றாமல் உணர்வு வெள்ளமாய் பெருகிட
வருவதை எதிர்கொள் மனபலம் முனைப்பு 414

சுட்டெரி வெயிலால் சருமம் சூடேறிட
சமனாக்க கடல்நீரை உடலில் ஊற்றினான்
கடந்த தூரத்தைத் திரும்பிப் பார்த்திட
காலடியில் மண்டைதீவு கண்ணுக்குத் தெரிந்தது
கடக்க வேண்டிய தூரத்தால் கலங்கிட
கண்ணில் பட்டது இயந்திரப் படகொன்று
உடனடி முடிவாக உதவிக்கு லாவியதும்
ஓரமாய் நெருங்கி ஒன்றித்து இழுத்தது 415

* * *

சசிகரன் ஒவ்வொன்றாய் தயங்காது விபரிக்க
சொல்வதைக் கேட்டவர் கண்ணீர் சொரிந்தனர்
கசிந்து உருகியே உள்ளம் சிதறிய
கொடுந்துயர் உண்டாக உடல் நடுங்கியது
சசீகரன் விம்மலால் சிரமத்தை எதிர்நோக்க
சொரிந்தது கண்ணீர் மீறியே விழிகளால்
அசைவற்ற நிலையில் விம்மியும் அழுதான்
அவனது கண்கள் கொவ்வைபழ நிறத்தில். 416



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதிச் சடலம்

குருநகர் சனசமூக நிலையத்தில் பணியினர்
களைப்பின்றி சலிப்பின்றி கடுமையா யுழைத்தனர்
குருதியைக் கண்டாலே கலங்குபவர் அன்றெனில்
குருதியில் தோய்ந்ததை கழுவித் துடைத்தனர்
துர்மணம் சகித்தவர் சடலங்களை எடுத்து
துண்டான பகுதியை சீர்செய்து உருவாக்கினர்
பிரேதப் பேழையில் வைத்ததை 'சரவணபவான்'
பணிக்கு உதவினர் மருத்துவ சான்றுக்காய்

417

மரண விசாரணை முடிவுற்ற உடல்பெற
முன்றலில் உறக்க மில்லாது உறவுகள்
உரியவர் தாமபெற உணர்வின் அரங்கேற்றம்
உறவுகளின் அழுகுரல் எறிகணையின் ஓசையாய்
வரலாற்றில் வரைபான வேள்வியின் சின்னங்களை
வெந்துருகும் இதயத்துடன் வாங்கிக் கொண்டனர்
உறவுகள் புலம்பல் இறந்தவர் இல்லத்தில்
உதயம்வரை ஒலித்தது ஒப்பாரிப் பாடல்கள்

418

"முண்முடிபொருத்தினாரோ மூர்க்கர்கள்வருத்தினாரோ
எண்ணடங்காக் கஸ்தியுற்றீரோ - இறைவனே
விண்ணரசாள் நாயகனே விரிசீலத்தின்றுாயகனே
மண்ணரசன்தீர்ப்புட்பட்டீரோ - மைந்தனே

419

பெற்றவென்வயிறெரியப் பிள்ளைபிராணன் பிரிய
இற்றைநாளில் தாங்கிடுவேனோ - இறைவனே
கற்றோர்மொழிநிறைவேறக் கனத்ததுயரமீற
குற்றவாளனாய்மரிக்கவே - குமாரனே

420

குப்புறமண்ணில் வீழ்ந்தாயோ குருசுடன்நிலந்தாழ்ந்தாயோ
அப்பனேயென் கண்ணின்மணியே - அன்பனே
செப்பரியவாதைசெய்து தீயார்களுனையேவைது
துப்பியேயிழுத்துச் சென்றாரோ - தூயனே

421

எப்படியுனைமறப்பேன் இந்தவாதையைப்பொறுப்பேன்
தப்பிதம்பொல்லார்புரிந்தாரோ - தற்பரா
இப்புவிமனுவாய்வந்தாய் ஈடேற்றவழியுவந்தாய்
ஒப்பில்லாமோட்சந் திறந்தாயோ - உத்தமா"*

422

முப்பது சடலங்களும் செவ்வனே ஒழுங்கமைத்து
முழுமைபெற அதிகாலை மூன்றரை மணியானது
ஒப்பேற்றிக் களைப்புற்ற வைத்தியரும் மாணவரும்
ஓய்வுக்காய் விடைகூறி ஒருவாறாய் சென்றனர்
ஒப்படைத்த சடலங்களை தவிரவொரு சடலத்தை
ஒருவரும் அடையாளம் கண்டிட முடியவில்லை
தப்பாமல் கவனத்தை செலுத்திய இளைஞரால்
தக்கதொரு தீர்ப்பைத் தெரிவிக்க இயலவில்லை

423

சோர்வினில் நின்றவர் சடலத்தை வைத்துவிட்டு
சென்றிட தயாரானார் தெளிவற்ற நிலையால்
பரபரப்பாய் "ஜெயகாந்தன் இல்லை" எனுமொலி
பணியினர்க்கு கொடுத்தது புதிதான சிக்கலை
பராயம் குறைந்த 'ஜெயபாலன்' 'ஜெயகாந்தன்'
படிப்பற்று தொழிலுக்கு செல்லும் சகோதரர்
வரலாறாய் மண்ணில் விதையானான் ஜெயபாலன்
"ஜெயகாந்தன் எங்கே" பெற்றோரின் கேள்வியிது

424

அடையாளம் காணாத சடலம் அவனன்று
ஆவனகூறிப் பெற்றோரை அனுப்பி வைத்தனர்
அடைந்த துயரினால், "உயிருடன் வரவேண்டும்"
ஆண்டவன் வரம்வேண்டி அவனது பெற்றோர்

*வியாகுலமாமரி விசனசாகரம், எஸ்.யே.தம்பிமுத்துப்பிள்ளை, பதிப்பு 30.05.1911



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவில் ஏற்பட்ட குழப்பம் பணியினரை
முற்றும் சூழ்ந்ததால் மனதில் சங்கடம்
தடையின்றி அடுத்து செய்பவற்றை சிந்தித்து
தமது கடமையில் தவறாது முனைந்தனர்
425

விடிகாலை நேரத்தில் வேண்டிய ஆளணியுடன்
விரைந்து பறந்தன முனைதேடி படகுகள்
புடைத்த நினைவுகள் படமாய் விரிந்திட
பயங்குடி கொண்டதாய் புறப்பட்டோர் இதயம்
தேடலற்றுக் கிடந்த 'தூய ஒளி' படகின்
தொழிலாளர் அமரும் **'ஒட்டத்தில்'** காகங்கள்
நடைபெற்ற இடத்தை நோக்கிய பார்வையாய்
நங்கூரம் கடலிலிட்டு நடுக்கத்தில் இறங்கினர்
426

இரைதேடும் நாய்கள் அவர்களைக் கண்டதும்
இன்முகம் காட்டி வாலசைத்து நின்றன
குரைத்தும் ஊளையிட்டும் குறிப்பால் உணர்த்திட
குழுமிநின்ற காகங்கள் கூட்டாய்க் கரைந்தன
விரைந்து தகவலை விளக்கிட முனைந்தும்
வந்தவர் இவைபற்றி அக்கறை கொண்டிலர்
தரையில் கண்டவை தாக்கத்தைக் கொடுத்திட
தவிப்பில் உள்ளம் தடுக்க வாய்ப்பின்றி
427

மண்ணில் மிதித்து முன்னேறிய கால்கள்
மிகையாய் நடுங்கிட வார்த்தை வரவில்லை
கண்டவன் சொன்னவை குருதியில் குளித்ததாய்
கண்டிட்ட உடல்கள் சுழன்றன நினைவினில்
உண்மைக்கு உருவகம் தேவையே இல்லை
உருக்குலைந்த உணர்வுகளால் உளமாரப் பதட்டம்
கண்டதால் கரைமீறிய காட்டாறாய் மனவுளைச்சல்
கொண்டபணி உந்திட கருத்தாய் நடந்தனர்
428

விண்வரை கேட்பதாய் இதயத்தின் துடிப்பு
வேட்டை நிகழ்ந்த மண்ணைப் பார்க்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணலில் ஆங்காங்கு விசிறிய தடையங்கள்
மேற்கொண்டு சென்றிடும் விருப்பத்தை தடுத்தன
குண்டுகளால் சிந்திய குருதியின் தடங்கள்
குறித்துக் காட்டிய இடங்களால் தவிப்பு
கண்களில் நீரேந்தி கவலையில் உறைந்தவர்
கண்ணீரைத் துடைத்து கணத்தில் மீண்டனர்

429

சிறுநேரம் தரித்து தரையைத் தொட்டு
சொற்ப மண்ணை கோலினர் விரல்களால்
நெற்றியில் மார்பினில் ஒற்றித் தலைகுனிந்து
நெஞ்சார அஞ்சலி நிஜமான அமைதியில்
உறைந்த இரத்தம் உலர்ந்து காட்சிதர
உணவாக உண்பதற்கு ஓர்மமாய் காகங்கள்
சிறகொடுக்கி நடந்து சிதறியதைப் பொறுக்கிட
தாங்கொணா வேதனை தோன்றியது நின்றவர்க்கு

430

தரையை முகர்ந்து திரிந்திட நாய்கள்
தாவியே விலகிச் சென்றன காகங்கள்
போர்நிகழ் களத்தின் படிமமாய் அப்பகுதி
பார்த்த இடமெலாம் கொடுமையின் எச்சங்கள்
புரையோடும் வலியுடன் பார்வையைச் செலுத்தியவர்
பற்றைக ளெல்லாம் புகுந்து தேடினர்
கரைப்பகுதி எங்கும் காணவில்லை ஜெயகாந்தன்
கண்படு தூரம் கவனத்தைச் செலுத்தினர்

431

பார்த்த இடங்களில் பயனற்ற நிலையால்
புறப்பட்டு 'தூயஒளி' படகை அடைந்தனர்
கரைந்தவாறு அதில்நின்ற காகங்கள் பறந்தன
கலத்தின் பகுதிகளில் சூட்டுத் துவாரங்கள்
சரிந்து கிடந்தது கடலடி புதைந்து
இருமுழ உயரத்தில் கடல்நீர் படகினுள்
இரக்கமற்ற தனத்தின் இடுகுறிச் சின்னமாய்
இதனைக் கண்டனர் இதயத்தில் வலியுடன்

432



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியச்சோறு சட்டிகள் படகுள் தண்ணீரில்
வெறுமையாய் அமிழ்ந்தும் மிதந்தும் கிடந்தன
கொடுத்திடக் கொணர்ந்த கலியாண அரியதரம்
கொண்டுவந்த சங்கிலிப்பாண் சிதைந்து மிதந்தன
கொட்டுண்ட சோறுகள் கிடந்தன பரவலாய்
கவலை குடிகொள்ள கண்கள் சிவந்தன
ஒட்டத்தைக் கடந்து உள்ளே இறங்கினர்
ஒருமித்துத் தேடிடும் உறுதியில் அனைவரும் 433

'கடையால்' பக்கம் 'அணியத்தை' நோக்கி
கலைந்து சென்றவர் கடமையாய்த் தேடினர்
கடையால் மேற்தட்டில் இரத்தச் சிதறல்
காய்ந்து கறுத்து உறுத்திடக் கிடந்தன
உட்பக்க இயந்திரக் கூட்டினுள் மிதந்த
'ஒயில்' கலந்த நீரினுள் தேடியுமில்லை
உட்புறப் பலகையில் இரத்தச் சிதறல்கள்
உணர்வுகள் கிளர்ந்து உடலில் உதறல் 434

அணியத்தி லிருந்து "ஜெயகாந்தன் கிடக்கிறான்"
அலறலாயக் கேட்டது ஆவேசக் குரலொலி
நின்றவர் திடுக்கிட்டு நேராகப் பார்க்கையில்
நிமிர்ந்த மீன்கூடை மட்டுமே தெரிந்தது
ஒன்றுமே புரியாமல் விழித்த போதிலும்
ஓடியே பார்த்தபின் உணர்ந்தனர் உண்மையை
அணியத்தின் உட்புறம் மீன்கூடை மறைப்பில்
அரவமின்றிக் கிடந்தான் தேடிவந்த ஜெயகாந்தன் 435

உணர்வற்ற உடலமாய் அணிந்திருந்த உடைகள்
உதிரத்தில் தோய்ந்து உணர்வைச் சிதைத்தது
நனைந்து காய்ந்தும் காயாத நிலையால்
நெஞ்சம் வருடியது நெருங்க நின்றவர்க்கு
கண்டனர் ஒருதுளை தோள்மூட்டில் இருந்ததை
கொண்டனர் கவலை தவறவே விட்டதால்
கணத்தினில் சுதாரித்து தூக்கினர் துடிப்புடன்
குறண்டிய உறுப்புகள் விரிந்திட மறுத்தன 436



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்தால் வெளியேறி குறைந்த இரத்தத்தால்
குளிராகி உயிரற்று குறண்டிப் போனது
உயிர்போன போதுமவன் உதட்டில் புன்னகை
உணர்ச்சியால் அழுதனர் உளமார அனைவரும்
காயம் பட்டஇடம் கவனத்தை ஈர்ந்ததால்
"காலையில தானிந்த பொடியன் செத்திருக்கிறான்"
வயதில் முதியவரின் வார்த்தையை மறுத்திட
வாய்ப்பில்லா நிலையால் உதடுகள் துடித்தன
437

துப்பாக்கிச் சன்னம் தோளைத் தாக்கியதால்
சடுதியில் இறந்திடச் சாத்தியம் குறைவே
காப்பார் இல்லாது குருதிப் பெருக்கால்
காலமது தாமதித்தே இறந்திருக்க வேண்டும்
"காப்பாத்தி யிருக்கலாம் நேற்றைக்கு வந்திருந்தா"
காந்தனின் உறவினன் ஆதங்கம் நியாயமே
தப்பினைச் செய்தவராய் தவித்தது நெஞ்சம்
தேற்றிட வழியின்றி தம்பணி தொடர்ந்தனர்
438

கண்ணாடி நாரிழைப் படகினி லேற்றிய
காந்தனின் சடலம் குருநகர் அடைந்தது
திண்ணமாய் உயிரோடு எதிர்பார்த்த பெற்றோர்
திகைப்பால் தடுமாறி தாங்கினர் உடலை
கண்ணீரைக் கொட்டிக் கதறிய அவர்களை
கட்டுக்குள் கொண்டுவரும் முயற்சி இலகன்று
எண்ணத்தில் விழுந்த இடியாக இருந்ததால்
எதையும் ஏற்றிடத் தயாரில்லை அவர்கள்
439

அறுவடையின் இறுதியான ஜெயகாந்தன் உடலுடன்
அனைத்துப் பணிகளும் ஐயமின்றி முடிந்தன
இறுதியில் கிடந்த இளைஞனின் சடலத்தை
ஏற்றனர் துயருடன் வட்டுக்கோட்டை ஊரவர்
பெற்றிட்ட உறவினர் துயரின் நடுவிலும்
பணியாளரை மறக்காது நன்றியைக் கூறினர்
நிறைவான சேவையை நிகழ்த்திய பணியாளர்
நிறைவின் அடக்கத்தை நிகழ்த்திடக் கூடினர்
440



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதி ஊர்வலம்

குருநகர் வீதிகளில் வாழைகள் தோரணங்கள்
கறுப்பு வெள்ளை கொடிகள் காட்சிகளாய்
வர்த்தக நிலையங்கள் விடுமுறை நாளாக
வழமைத் தொழிலை இழந்தன படகுகள்
தார்வீதியில் திருமணப் பந்தல்கள் அகன்று
தெருவெங்கும் ஒலியாக துலங்கின முகாரி
இரங்கல் கவிதைகள் எங்கும் சோகமாய்
இருந்த குருநகரில் சிரிப்புக்கு இடமில்லை
441

சோகத்தின் சூழலில் சிக்குண்ட உறவுகள்
சூழநின்று வேதனையை கொட்டுதே கண்ணீராய்
சாகாவரம் யார்க்குமில்லை சாவேறு கொலைவேறு
சிதறியது எத்தனைபேர் தாங்கிடுமோ இத்துயரை
வக்கிரம் கொண்டவர்கள் விரித்த வலையில்
வலையிழுக்கச் சென்றவர்கள் வழியின்றிச் சிக்கினரே
வக்கற்றுப் போனவர்க்காய் அனைவருமே அழுகின்றார்
வழியனுப்பி விடைகூற நேரமது நெருங்கியதால்
442

எவருக்கும் உறக்கமில்லை எரியவில்லை அடுப்படி
எதுவும் பெரிதாய் இருந்ததில்லை கடுந்துயரால்
ஒவ்வொரு குடும்பமும் இழப்பாகக் கருதியதால்
ஓலங்கள் கதறல்கள் ஒப்பாரியுடன் இணைந்தன
சவஅடக்க ஊர்வலம் பத்துமணி முதலாய்
செல்லத் தொடங்கியது அவரவர் வீட்டிலிருந்து
ஒவ்வொரு உடலமும் ஒவ்வொரு ஊர்வலமாய்
ஒப்பாரிப் பாடலுடன் தொடர்ந்தது பயணத்தை
443



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகள் தனிலிருந்து வெளிவந்த ஊர்வலங்கள்
வீதிகளைக் கடந்து யாகப்பர் ஆலயம்முன்
கூடிப்பின் உள்கொண்டு சென்றிட்ட நிகழ்வாலே
கூடவந்தோர் நினைவலை கடந்தன முன்னோக்கி
கடந்த ஆயிரத்து தொளாயிரத்து நாற்பதுகளில்
காட்சிப் படுத்திய 'உடக்குப்பாஸ்' ஆற்றுகையில்
உடக்குகளைத் தூக்கியோர் பல்வேறு வீதிகளால்
ஊர்வலமாய்ச் சென்றுபின் இவ்வாறே ஒன்றிணைவர் 444

* * *

அன்றைய 'உடக்குப்பாஸ்' ஆரம்பிக்கும் சாயந்தரம்
ஆற்றுகை நிறுத்திய முதல்நாளின் தொடராய்
தனித்தனி உடக்கைத் தாங்கிய நால்வர்
தொடராய்ச் செல்வர் கொட்டகை உள்ளிருந்து
ஒன்றித்துப் பின்னர் வெவ்வேறு வீதிகளால்
உடக்குகளின் வீதிவலம் ஒருசேரப் புறப்படும்
முன்னர் வயலில் காண்பிக்கப் பட்டதால்
மக்கள் 'வயல்பாஸ்' என்றே அழைத்தனர் 445

'**வியாகுல பிரசங்கம்**' வாசிக்கத் தொடங்க
'வயல்பாஸ்' தொடங்கும் 'கிறிச்சான்' ஒலியுடன்
புயத்தில் தாங்கிய உடக்குகள் பின்னால்
படையென மக்கள் பங்கேற்பர் முனைந்து
சுயமாக இணைந்து செயல்படும் பாஸில்
சிலுவை சுமக்கும் 'இயேசு' 'மரியாள்'
'வெரோணிக்கா' 'சீமோன்' சாயலில் உடக்குகள்
வரலாற்றைச் சுட்டிட எடுத்து வரப்படும் 446

எருசலேம் நகரத்து பெண்கள் பலரது
எடுப்பான சாயலை ஒத்திடும் உடக்குகளை
தெருவினில் சுமந்தவர் தகவலுக் கேற்றதாய்
தனித்தனிக் குழுவாக இருபுறம் பிரிவர்
பிரிந்தவர் குறிப்பிட்ட பாதையால் புறப்பட
பின்னால் மக்களும் குழுமமாய்ப் பயணிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசங்க வாசிப்பு கொட்டகையில் தொடர்ந்தும்
பலமாக ஒலிக்கும் ஒப்பாரிப் பாடல்கள்

447

உடக்குகளின் மேடை உருண்டைத் தடிகொண்டு
உயரத் தூக்குதற்கு ஏற்றவா றமையும்
மேடையில் வைக்கப்பட்டு நால்வர் தோள்களில்
முன்பின்னே சுமந்து செல்வதைக் காணலாம்
கொட்டகைக் காட்சியில் காணும் மேடையிலும்
கூடிய நீளமுள்ள கடின மேடையாகும்
உடக்கின் உறுப்புகளில் உணர்வான அசைவை
உருவாக்க வேண்டின் இணைப்பர் நூலுடன்

448

நூல்கள் கம்பிகளை நுட்பமாய் கையாளும்
நால்வருடன் ஒப்பாரி தேவாரம் பாடிடும்
பலரும் இணைந்து தூக்குவோ ருடன்செல்ல
பெரிய கூட்டமே பார்வையில் தென்படும்
சிலுவை சுமந்திடும் இயேசுவின் உடக்கை
சுமக்கும் மேடையோ சற்று நீளமும்
மேலதிக ஏற்பாடுகள் செய்திட்ட நிலையில்
மிகவும் பாரமுள்ள மேடையாய் அமையும்

449

மரத்தில் குடைந்து வடித்த 'அச்சு'
மற்றைய வற்றிலும் சிலுவை மேடையில்
பொருத்தப் பட்டதால் பலவேறு நிகழ்வுகளை
பார்ப்பவர் வியந்திட பக்குவமாய் காண்பிப்பர்
பாரமான சிலுவையுடன் இயேசு மும்முறை
பாதையில் வீழ்ந்து எழுகின்ற காட்சிகள்
பெரிதான மேடையில் நிஜம்போல் இடம்பெற
பார்ப்பவர் துயருடன் பக்தியில் மூழ்குவர்

450

பல்வேறு வீதிகளால் பயணித்த உடக்குகள்
பிரதான நிகழ்வுகளை புலப்படுத்த முனையும்
சிலுவை சுமந்திடும் இயேசுவுக்கு சீமோனுதவ
துயருடன் மரியாள் இயேசுவைச் சந்தித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பிடும் ஜெருசலேம் பெண்களுடன் இயேசு
இயேசுவின் முகத்தை துடைத்திடும் வெரோணிக்கா
கலங்கலற்று ஒன்றுடன் ஒன்று சந்திக்க
காட்சியின் வாசிப்பால் கண்ணீர் சொட்டும் 451

சந்திப்புகள் அற்புதமாய் தத்ரூபம் ஓங்கிடும்
சிறப்பான நிகழ்த்து கலையாக இருக்கும்
அந்தியில் நடைபெறும் அவற்றை மக்கள்
ஆர்வமாய் பார்த்து பக்தியில் திளைப்பர்
சந்திப்புடன் இயேசுவின் சாஷ்டாங்க வீழ்தல்கள்
சிறப்புற முடிவுற சாய்ந்திடும் பொழுது
சந்தித்த உடக்குகள் ஒன்றித்து சென்றிட
தொடராய் கொட்டகைக்கு திரும்புவர் பார்த்தவர் 452

* * *

எழுதிய இலக்கத்தில் உடலைத் தாங்கியே
இருந்தன பேழைகள் ஆலயத் தரையிலே
வழிபாட்டை எதிர்நோக்கி நிகழ்த்திய இச்செயல்
வரலாறு கண்டிரா நிகழ்வாக இருந்தது
வழிபாடு கூட்டுப் பலியுடன் நிகழ்ந்திட
விழிகளில் நீரேந்திய மக்கள் திரளாய்
அழுகையில் துவண்டு உறுதியைத் தொலைத்ததாய்
ஆங்காங்கு சொந்தங்கள் ஆற்றிட வழியின்றி 453

மறையாயர் மேதகு தியோகு ஆண்டகை
மறையுரை ஆற்ற மௌனத்தில் பிரமுகர்
துறைசார் அதிகாரிகள் அரச அதிபர்
சங்க உறுப்பினர் குருமார் எனப்பலர்
மறைவழி இயங்கும் பக்திச் சபையினர்
மாண்புடன் திரண்டனர் மரணித்தோர் நினைவாக
இறை வழிபாடு இரங்கலுடன் நிறைவுபெற
இறுதிப் பிரிவுரையை குருமார் நிகழ்த்தினர் 454



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைமோதும் துயரில் மும்மூன்று உடல்களை
ஐக்கியமாய் ஏற்றினர் ஈரைந்து 'எல்வ்'களில்
தொலைத்த நிம்மதியால் துவண்ட உறவுகள்
'சேமக்காலை' நோக்கிச் சென்றன வாகனங்கள்
உலகோர் திரண்டு உறுதுணையாய் செல்வதைப்போல்
உணர்வு ததும்பிட ஊர்வலம் சென்றது
ஒலிபெருக்கி பொருத்திய வாகனம் இரண்டினில்
ஒப்பாரி பாடல்கள் தொடராக ஒலித்தன

455

"துட்டர்பிடித் திட்டாரோ சொர்ணஞ் சொரிகன்னத் தடித்தாரோ
இட்டர்பகை முடித்தாரோ இதற்கென்ன செய்வேன் மகனே
கையிறுகக் கட்டினரோ அவர் - கசையாலடித்தனரோ
துய்யதிரு மேனியெங்கும்சோரி சொரியவடித்தனரோ

456

சூதர்வெகு செப்பினரோவசை சொல்லியே துப்பினரோ
மாதயவு தப்பினரோஉள்ளம் வருந்துதே என்மகனே
பூந்தருவில் மதுவருந்தும்பொன் பொலிந்திடும் வண்டினங்காள்
மாந்தரில்மிக் கானஎந்தன்தூய மகனை நீர் கண்டீர்களோ

457

கானிலுறு மானினமேகாட்டிற் கருதிய ஆனினமே
தேனினமே என்மகனாரிங்கு சென்றது கண்டீர்களோ!
கரியினமே யரியினமேகவின் காட்டுவேசரியினமே
பரியினமே யென்மகனார்சென்ற பாதைநீர்கண்டீர்களோ"*

458

உழைத்திட துணையின்றி கடலுக்குச் சென்றவர்
உயிரற்ற உடல்களாய் உருமாறி வந்ததால்
வழித்துணை வழங்கிடும் பல்லாயிரம் மக்களுடன்
சென்றனர் சடலமாய் புதைகுழி நோக்கி
வழிநெடுக ஊர்வலமாய் சென்றவர் மட்டுமல்ல
வீதியில் ஊர்வலத்தை பார்த்து நின்றோரும்
விழிகளில் நீரேந்தி வாய்மூடி அழுதனர்
வரலாறு காணாத இறுதி ஊர்வலத்தால்

459

*சிந்தாகுலத் திரட்டு, புலவர் மு.சுவாம்பிள்ளை, மீள் பதிப்பு 03.03.1937



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுறினர் மக்கள் அழுதனர் சான்றோர்
குருமார் தலைவர்கள் மனந்திறந் தழுதனர்
தம்வீட்டு இழவென திரண்டவர் அழுதனர்
துணையி ழந்ததால் துணைவியர் அழுதனர்
தமக்கினி தாபரிப்பா ரில்லையென பிள்ளைகள்
தந்தையர் பெருங்குரல் கொடுத்து அழுதனர்
தம்மோடு மகிழ்வாக குடித்து உறவாடி
தோள்கொடுத் தவர்க்காய் நண்பர்கள் அழுதனர்
460

* * *

உடக்குப்பாஸ் தன்மையை உணர்ந்த மக்கள்
உத்தமன் இயேசுவை சிலுவையில் கிடத்தி
கரங்களை விரித்து பாதங்களை இணைத்திடும்
காட்சியில் தம்மையே மறந்தவராய் இருப்பர்
தொடர்ந்து ஆணிகளால் சிலுவையில் பிணைத்து
தொங்கிய நிலையில் இயேசுவைக் கண்டிடும்
காட்சியில் உணர்வு மேலிட்ட ஒன்றிப்பால்
கண்ணீர் வழிந்தோடும் தடுப்பற்று கண்களில்
461

சிலுவையில் தொங்கும் இயேசுவுக் குற்ற
சரீர உபாதைகள் கண்களை உறுத்தும்
சிலுவையில் கிடந்து கூறிடும் வார்த்தையை
செவிமடுத்த மரியாளின் இதயம் துடிக்கும்
வாள்களின் ஊடுருவல் வேதனை அனுபவிப்பை
வெளிப்படுத்தும் நிகழ்ச்சி வேதனையைக் கிளறும்
ஏழுவாள் தொடராக மரியாளின் இதயத்தில்
ஏற்றப்பட்ட பின்னர் ஏக்கம் மேலோங்கும்
462

"பிதாவே! உம்முடைய கரத்திலென் ஆத்மாவை
கையளிக்கிறேன்" என்னும் வார்த்தையை உச்சரிக்க
இதயம் படபடக்கும் இடிமுழக்கம் மின்னலுடன்
இயேசு மரணிக்கும் நிகழ்வு இடம்பெறும்
உத்தமனின் திருவுடல் அறையப்பட்ட நிலையிலேயே
உயர எழுந்து மூன்றாவது தடவையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனையும் ஒடுங்கி கண்மூடி மரணத்தை
அணைக்கும் காட்சியில் அனைவரும் நெகிழ்வர்
463

திரளான மக்கள் கூடியிருக்கும் நிலையில்
தோன்றிய ஆத்மார்த்த அமைதி சிதைந்திடும்
புரளும் உணர்வுகளின் வெளிப்பாடு கதறலாக
பெருகிடும் கண்ணீர் கரைபுரண்ட வெள்ளமாக
குரலொலி கேட்டிடும் அலையின் இரைச்சலாய்
கோலோச்சி நிற்கும் பார்வையாளர் மத்தியில்
ஒருணர்வில் முற்றாய் ஒன்றித்த மக்கள்
உயர்த்திக் கரங்களை கதறுவர் பணிந்து
464

உடக்குப்பாஸ் நிகழ்வு ஒன்றித்து இருப்பதை
உணர்த்தினர் ஊர்வலத்தில் ஒன்றித்த மக்கள்
இடைவெளி இல்லாத ஈடற்ற துயரத்தை
இயேசுவில் உணர்ந்ததை இயம்பினர் அனைவரும்
நடைபெறும் ஊர்வலம் நானிலத்தில் வாழ்ந்தோரை
நிலத்திடி புதைத்திட நடைபெறும் நிகழ்வாகும்
விடியலை நோக்கியதால் விதையாகிப் போனோர்க்கு
விடைகூறும் செயலாக வரலாறு வகுத்தது
465



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரிய புதைகுழி

பரந்த நிலத்தை பிரிவுகளாய் கொண்டது
பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின் சவக்காலை
பூரணமாய் நிரம்பியது போலவே இருந்தது
புதைகுழியை அடையாளம் காட்டும் உருவங்கள்
நிரையாகத் தெரிந்த கிடங்குகள் ஒவ்வொன்றிலும்
நினைவுக் கற்களுடன் புனிதர்கள் சிலைகள்
மரியாளின் தோற்றம் மாறுபட்ட உருவங்களில்
மிகையாக சிலுவை வடிவான கற்கள்
466

பதினெட்டு ஐம்பதில் கட்டப்பட்ட சிற்றாலயம்
பக்தர்கள் வழிபட உட்புறம் உள்ளது
வீதியின் மத்தியில் வரவேற்பு சொல்வதாய்
விரித்த கரங்களுடன் வலிந்திழுக்கும் இயேசு
பாசமே உருவான புண்ணியனின் உருவம்
பரிதாபமாய் தொங்குகிறது சிலுவை மரத்தில்
பேசாமொழியாக பார்ப்பவர் மனத்தை உருக்கிடும்
பரிசுத்தன் இயேசுவின் வெண்கல சுரூபம்
467

கொடுமனங் கொண்டோர் கருணையற்று செய்யும்
கொலையின் வக்கிரத் தன்மை தெரிகிறது
முடிவான வாழ்வின் மரணத்தை விழித்து
மனிதரை நல்வழி படுத்திட உரைக்கிறது
கடிதினில் கண்களை கவர்ந்து இழுத்து
குலையாமல் பக்தியில் மூழ்கிடச் செய்கிறது
கொடியோரின் துன்பத்தை கொடுமையை ஏற்றதால்
கொல்லப் பட்டோரின் குறியீடாய் இருக்கிறது
468



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் கூட்டத்தால் சவக்காலை தடுமாற
 மரணித்து அடக்கம் செய்யப் பட்டவர்கள்
துயருடன் எழுந்து நிற்பதை உணர்த்தியது
 திரண்டிருந்த மக்களின் சோகநிலைக் காட்சி
தேக்கிவைத்த துயரை தேற்றிட வழியின்றி
 தவிப்பவராய் தோன்றினர் செறிவாக நின்றோர்
எக்காலமும் இத்துயர் ஏற்படக் கூடாதென்ற
 எண்ணத்தின் வெளிப்பாடு இயல்பாக உணர்த்தியது

469

எள்ளளவும் இரக்கமற்று அறுவடை செய்யப்பட்ட
 ஏதுமறியா தொழிலாளரை ஏந்திய பேழையை
தோளில் சுமந்தபடி புதைகுழியை நோக்கி
 தொடராய் வந்தனர் உறவினர் நண்பர்கள்
இலக்கங்கள் இடப்பட்ட பாரியதொரு குழியில்
 இறக்கிய பேழைகள் முப்பதும் ஒன்றாய்
துளியும் இடைவெளி தெரியாமல் அடுக்கியதும்
 இறுதி வேண்டுதலை இரக்கமாய் நிகழ்ந்தது

470

"எமது சகோதரரை இவ்வுலக வாழ்வினின்று
 அழைத்திட இறைவன் திருவுளம் கொண்டார்
தமதுடல் உருவான மண்ணிற்கே அவ்வுடலை
 திரும்பவும் கையளித்தோம் நிலத்தில் புதைத்து
தாமதமின்றி தலைப்பேறாய் உயிர்த்த கிறிஸ்து
 தாழ்வுக்குரிய இவ்வுடலை மாட்சியாய் உருமாற்றுவார்
நமது சகோதரரை ஆண்டவரிடம் ஒப்படைப்போம்
 நடுத்தீர்வை நாளில் உயிர்பெறச் செய்வாராக"

471

வானமே பிளந்ததாய் அழுகுரல் எதிரொலியாய்
 வியாபித்து இருநாலு திசையெலாம் பரவியது
மனிதத்தை நேசிக்கும் மனித உணர்வின்
 மேலான வெளிப்பாடு முனைப்புறும் களமிது
நினைவிழந்து நிலைகுலைந்து நிர்க்கதியான உறவுகள்
 நெஞ்சில் அடித்துக் கதறிடும் அயலவர்
கண்ணீர் சிந்தியும் கவலையில் அமிழ்ந்து
 கல்லாய் சமைந்திட்ட பலரும் இருந்தனர்

472



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னாமல் முழங்காமல் விளைந்த அறுவடையாய்
மடிந்தவர் உடல்கள் குழிக்குள் இறங்கிட
கண்ணீரின் நடுவில் கதறிய நிலையில்
கைகளால் போட்டனர் மும்மூன்று பிடிமண்
மண்ணால் குழியின் பாதிவரை நிரம்பிட
மிலேச்சக் கொலையின் மிகுதியான அடையாளச்
சின்னங்கள் மண்ணுக்குள் புதையுண்டது மட்டுமல்ல
சந்தித்த குடும்பத்தின் சின்னாபின்ன வாழ்வுந்தான்

473

மண்ணில் குப்புற வீழ்ந்த கிறிஸ்ரியன்
வார்த்தையை அழுகையாய் வாரிக் கொட்டினார்
எண்ணமே தொழிலாளர் ஏற்றமாய்க் கொண்டவர்
இயலாமை நிலையிலும் எண்ணத்தால் இளையவன்
தன்னதாய் தொழிலை தற்காத்து நடந்தால்
தன்பிள்ளை தானாய் வளரும் என்பவர்
பின்னால் குறைசொல் பழக்கம் இல்லாது
பண்பாக கூறியே பலரையும் வென்றவர்

474

அத்தகை பண்பாளன் அடக்க முடியாமல்
ஆற்றிட வகையின்றி ஆற்றாமை நிலையானார்
எத்தகை இடரையும் இலகுவாய் எடுப்பவன்
ஏக்கத்தின் தாக்கத்தால் இயலாது தடுமாறினார்
உத்தரவிடு முன்னே பலமுறை யோசிப்பவர்
உயிரை விடுமாற்போல் உருண்டு புரண்டார்
முத்திரை பதித்திடும் முத்தான செயல்களால்
முதல்வராய் நின்றவர் முடியாமல் கதறுகிறார்

475

ஆதரவாய் நின்றவர் அணைத்து தூக்கினர்
அவர்களின் உள்ளமும் அணையின்றி அழுதது
விதையாகிப் போனோரின் விடிவெள்ளி இவரென
விளங்கிக் கொண்டதால் விழிநீர் சொரிந்தது
புதைகுழி தனைவிட்டு புறப்பட மறுத்தவரை
பலவந்தம் செய்வதில் இருந்தது முனைப்பு
இதயம் கனத்தினும் இடம்விட்டு நகர்த்தி
இணையாய்த் தாங்கி சென்றனர் அழைத்து

476



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிந்தது கடமை ஒன்றிப்பா லானாலும்
உருவாகிப் பெரிதான வாழ்வின் தாக்கங்கள்
இழப்புக்கள் முடிவற்று தொடரும் கதையாக
இருக்கும் என்பது நினைக்க இயலாது
இழப்புக்கள் நிகழவே கூடாதெனும் நினைவு
இதயத்திலி ருக்கையில் மறுநாள் காலையில்
பழங்கயிறு விடியச்சோறை ஏந்திய தொழிலாளர்
புறப்பட்டுச் சென்றனர் அன்றைய ஜீவனத்திற்கு.

477



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகூரல்

மண்டைதீவுச் சம்பவம் மக்கள் மத்தியில்
மரணப் பீதியை விதைக்கவே இல்லை
அன்றாட வாழ்வில் அமைதியைக் குலைத்து
கடலில் இறங்காமல் செய்யவும் இல்லை
இன்றுடன் முடிவில்லை இதுபோல் நிகழ்வெனும்
எண்ணம் தோன்றி தடுக்கவும் இல்லை
இன்றைய தினம் இனிதாய் இருக்கட்டும்
என்கின்ற எண்ணம் தோன்றாமலும் இல்லை

478

அலைமோது கடலுடன் அரசோச்சும் காற்றுடன்
அன்றாட உழைப்புக்காய் அனுதினம் போராடி
வலிமை மனத்தை வரிந்திட்ட இம்மக்கள்
வருமிடரிலும் இயல்பின் வழிவரத் துடிப்பவர்
ஞாலத்தில் உறவுகள் நானிலம் அஞ்சிட
நிர்க்கதி நிலையில் ஆகுதி ஆனபோதும்
நிலையற்ற சூழலில் நிமிரவும் துணிந்திடும்
நெஞ்சத்து வைராக்கியம் வியப்பினைக் கொடுத்தது

479

இவ்வகை உயிரிழப்பு பொருளுடன் சொத்தழிப்பு
இடப்பெயர் வாழ்வு இடர்மிகு அனுபவங்கள்
வெவ்வேறு சூழலிலும் வேறுபட்ட தாக்கத்திலும்
வாழலாம் என்னும் நம்பிக்கை அவர்க்குண்டு
இவ்விதமாய் வரலாறு பயிற்றுவித்த இம்மக்கள்
இயற்கையுடன் வாழ்க்கைப் போராட்டம் நடத்துவது
செவ்வனே சிறப்புக்கு உரித்தான நிலையெனினும்
சிதறடிக்க காலம் காத்திருக்கும் அறிந்தாரில்லை

480



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெய்தல் கொலைகளின் ஓராண்டு நினைவுதினம்
நெஞ்சில் நினைவுகளை சுமந்தவாறு மக்கள்
நேயத்துக் குரியவர்கள் வெண்நிற ஆடையுடன்
நீறுபூத்த வாழ்வென உணர்த்தி நின்றனர்
வெய்யோன் ஒளியிங்கே போதாதென உலகுக்கு
வெளிச்ச மூட்டிட தீபமேந்தி வந்தனர்
ஓயவில்லை மனவுளைச்சல் என்பதை நிறுத்திய
ஓராண்டு நினைவுத்தூபி வலியுறுத்தி நின்றது

481

முப்பத்தி ஒருவரை முகங்காட்டும் வகையில்
முப்பத்தொரு அடியில் முழுமை நினைவுத்தூபி
அப்பாவிகள் அழிப்பை அடையாளப் படுத்தி
அணையாத தீபத்தை அவனிக்குக் காட்டியது
ஒப்பற்ற நிலையை உணர்த்திய தூபிபோல்
ஒப்பேறிய மண்டைதீவு முனையிலும் நினைவுத்தூபி
முப்பத்தொரு பெயர்கள் விரித்த புத்தகத்தில்
பொறித்தவாறு ஆறடிகள் உயர்ந்து இருந்தது.*

482

* *தூபிகள் இரண்டும் 1995 இல் அழிக்கப்பட்டன. 10.06.2004 இல் மீண்டும் குருநகரில் புதிய நினைவுத்தூபி நிர்மாணிக்கப்பட்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ச. கதிர்கள் - 2

### களமாற்றம்

தொடராய் நிகழ்ந்த இடப்பெயர்வு சொத்திழப்பால்
திணறிய மக்களுடன் தடுமாறியது உறுதி
பாட்டமாய் மழையென பெய்கின்ற எறிகணைகள்
பறந்து வீழ்வதை பார்த்தனர் இன்றுதான்
கிடைத்தது தகவல் இந்தியன் இராணுவம்
கையகப் படுத்தும் போரினைத் தொடுத்ததாய்
உடனடித் தகவலால் உளமாரப் பதட்டம்
உறுதியும் உடைந்தது எறிகணை ஓசையால் 483

கோட்டை மண்டைதீவு கோண்டாவில் கிழக்கிருந்து
கூவிவந்த எறிகணையால் முத்திசை தாக்கம்
தடையின்றி முன்னேறும் இந்திய இராணுவம்
தொடுத்த எறிகணை தாக்கமெலாம் மக்களுக்கே
வீடுகள் தங்குமிடம் வீதிகள் பள்ளிகள்
ஆலயங்க ளெனத்தடம் பதித்த வாறிருந்தது
அடைந்த இடரால் குருநகர் துவண்டிட
அசையாத உறுதியும் ஆட்டம் கண்டது 484



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதைப் பிளந்திடும் ஓசையில் எறிகணைகள்
கலைத்துத் துரத்திடக் குப்புறத் தரையில்
பாதுகாப் பில்லாத பயத்தின் நடுக்கத்தால்
பதைப்புடன் எங்கும் பதுங்கிடத் தயங்கினர்
பாதைகள் தடுமாறி பலவழி நுழைந்ததால்
பள்ளமும் தெளிவில்லை புட்டியும் புரியவில்லை
பாதையை விலக்கியதால் வாய்க்காலில் வீழ்ந்தும்
பதுங்கிட முனைந்து இடறிடும் இடர்நிலை 485

பெரிய வாய்க்கால் பாலத்தின் உட்புறம்
புதையும் சேற்றில் பதிந்து இறுகினர்
சாரிசாரியாய் இறங்கிய செறிவினால் வெளியே
சொல்லிட முடியாத துன்பத்தைச் சுமந்தனர்
அரைமணி நேரமாய் பிணங்களாய் நின்றவர்
அதிசயம் கண்டதாய் ஆளையாள் நோக்கினர்
பெருமழை புயலாய் பேரிடி ஓசைகள்
அடங்கின செவிகளில் ரீங்காரம் கொடுத்து 486

எறிகணை தாக்குதல் இல்லாது போயினும்
இதயத் துடிப்பு இன்னுமோ ஓயவில்லை
கீறுண்ட இதயத்தின் வலியுடன் இணைந்து
காப்பாற்ற ஓடியதன் களைப்பு தீரவில்லை
புற்றீசலாய் பதுங்கியோர் புறப்பட்டு வந்ததால்
பாதைகள் எங்கும் கூட்டம் குறைவில்லை
சுற்றிலும் கண்கள் சுழன்றிடும் நிலையில்
சுற்றத்தைத் தேடிடும் சுபாபமும் மாறவில்லை 487

தாக்கிய எறிகணை சிதைத்த சொத்துக்களை
சீர்தூக்கிப் பார்த்திட சிறிதும் நேரமில்லை
தாக்கத்தின் ஏக்கம் தலைவிரித் தாடுவாதால்
தாமதம் செய்திட துளியும் விருப்பமில்லை
ஆக்கப் பொறுத்தவன் ஆறிடப் பொறுக்கான்
அதுபோல அவர்களும் பொறுத்திடும் நிலையில்லை
தாக்கத்தைத் தவிர்க்க இடம்பெயர்ந் தோடிடும்
தருணம் இதுவெனும் தாகமன்றி வேறில்லை 488



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைக்க வந்தவர் அழிவைத் தந்ததால்
ஆலாய்ப் பறந்தனர் ஆயத்த மின்மையால்
இணைத்துப் பொட்டலம் உணவாய்ப் போட்டவர்
இந்நிலை தந்ததால் எல்லையற்ற கலக்கம்
இணைந்து குடும்பமாய் பிணைந்த குழுக்களாய்
இடம்பெயரத் தொடங்கினர் இன்னுயிர் காத்திட
வன்னியில் பள்ளிக்குடா மண்ணித்தலை நோக்கி
விரைந்தனர் படகினில் வசதிசார் குடும்பங்கள்

489

என்னவும் வேண்டாம் இன்னுயிர் போதும்
என்னும் கொள்கையில் உறுதி பிறந்ததால்
ஏனையோர் இடப்பெயர்வு கடற்கரை வீதியால்
எடுத்த பொருள்களை ஈருருளியில் ஏந்தியபடி
கண்ணீர் ஒருபுறம் ஏக்கம் மறுபுறம்
கலந்து துரத்த கதறும் குழந்தைகள்
உண்ணக் கொடுத்திட உணவற்ற நிலையில்
இதயம் துடிக்க நடையினி லதிவேகம்

490

பத்திரிசியார் கல்லூரி பக்கத்தில் இருப்பதால்
பெரிதும் உதவியாய் புகுந்தனர் சிலபேர்
போதிய இடமோ இல்லாதி ருந்ததால்
பயனற்ற நிலையில் பிரிந்தனர் பலபேர்
மோதிய சிந்தனை மாற்றிடந் தேடிட
முன்னோக்கி நடந்தனர் கடற்கரை வீதியால்
காததூரம் சென்றுபின் காப்பக மாக்கினர்
குருத்துவக் கல்லூரி கொழும்புத்துறை தன்னை

491

குருத்துவக் கல்லூரி குடியேற்ற மக்களின்
குழுமப் பிரதானி எனநின்ற கிறிஸ்ரியன்
சருகாகிப் போய்விட்ட சரித்திர நாயகரால்
தீராத நோய்கண்டு சிதைவுறு நிலையானார்
ஓராண்டைக் கடந்தும் ஒருகணமும் மறவாது
ஒன்றித்த சோகத்தில் உழன்றிடும் உத்தமன்
சார்ந்துள்ள சமூகத்தை சிரமாக நினைத்து
சேர்ந்து செயற்படும் நல்மனம் நிறைந்தவர்

492



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி அடைந்ததும் குருமாரை அணுகி
குடியேற வழிசெய்து கோபுரமாய் நின்றார்
அல்லாட்டம் அன்றைய உணவுக்கு ஏற்படாமல்
அயலக உணவகம் அனுப்பினார் பலரை
தொல்லையினி இலையெனும் நம்பிக்கை உணர்வினை
தஞ்சமானோர் மத்தியில் துலங்கிடச் செய்தார்
நலமற்ற நிலையிலும் நலிவின்றி பலதையும்
நாளைய விடியலுக்கு நலமென சிந்தித்தார் 493

அடைந்த கிலேசம் அகன்ற மகிழ்வில்
அன்றைய இரவு அமைதியைக் கொடுத்தது
குடைந்த துயரால் கடந்த நாட்கள்
கலைந்த நெகிழ்வில் உறக்கம் அணைத்தது
விடிந்தது தெரியாமல் விழித்த நிலையால்
விலகியது உளப்பயம் என்பதை உணர்த்தியது
கொடுத்த மகிழ்வில் திளைத்த அவர்களால்
கிடைத்த வாய்ப்பை காத்திட முடிந்தது 494

மக்களைக் காக்கவந்த அகிம்சை வாதிகள்
முறைமாறிக் குதித்தனர் யாழ்ப்பாணப் போரில்
அக்கறையாய் உணவுகளை வான்வழி கொட்டியவர்
அழிக்கவும் துணிந்தனர் ஆற்றலை ஒன்றித்து
பக்குவமாய் மலர்தூவி ஆராத்திய மக்கள்
பாரதத்தின் செயலால் புண்பட்ட நிலையில்
திக்கெலாம் எறிகணை துப்பாக்கிச் சத்தங்கள்
தீவிரமாய் யாழ்நகரை கைப்பற்றும் முயற்சியில் 495

இந்திய இராணுவம் சிக்குண்ட செய்தியை
சகலரும் அறிந்ததால் கொண்டனர் சங்கடம்
சிந்தையில் கொள்ளாமல் பரசூட்டில் இறங்கியோர்
சிரசிழந்த தகவல் சிதறலாய்ப் பரவியது
தந்திரமாய் வழங்கிய தனித்துவ பயிற்சி
தமக்கே உலையான தவிப்பில் இராணுவம்
சந்திக்கும் எவரையும் சிந்தனை இல்லாது
சிதைத்திட முனைந்தனர் துரோகியாய் அவர்கள் 496



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவலாய்க் கேட்கும் பல்வகைச் சத்தங்கள்
போரின் கனதியை பறைசாற்றி நின்றன
குருத்துவக் கல்லூரி கனைக்குத் தப்பிட
கருதினர் நலமான இடமெனப் பலரும்
இரவினில் உறக்கம் ஏற்றதாய் அமைந்திட
இயல்பு வாழ்வில் இணைந்த மகிழ்ச்சி
பரந்த வெளியில் பெரிய கட்டடங்கள்
பார்வையில் கடற்கரை பக்கத்தில் இருந்தது

497

விட்டுவந்த பொருள்களை மீட்டிட ஆண்கள்
வீடுகள் சென்று வந்தனர் அடிக்கடி
கடைகளைத் தேடியும் கூடையோடு அலைச்சல்
கிடைக்கும் பொருளை சேர்த்திடும் நோக்கில்
கடற்கரை சென்றங்கு கறிமீனை வாங்கி
கல்லூரியில் பகிர்ந்து கொடுப்பதில் மகிழ்ச்சி
வீட்டைப் பார்த்திட மனைவியும் கணவனும்
வழமையாய் கொண்டனர் சென்றங்கு வருவதை

498

பிள்ளைகள் விளையாட்டில் பெரியவர் அரட்டையில்
பகல்நேரம் கழிவது பெரிதும் சிரமமில்லை
நாளைய விடியலின் நினைவுகள் இரவை
நகர்த்திடத் தயங்க நித்திரை விழிப்பு
மீளவும் காலையில் உற்சாகம் பிறக்கும்
முன்னைய நாட்களை மறந்த நிலையில்
வேளைக்கு மனையாள் செலவுக்குக் காசென்க
மாறிடச் செல்வான் மறுப்பின்றி கணவன்

499

இடம்பெயர் வாழ்க்கை இடரற்ற தெனினும்
இடியான செய்தியால் இதயத்தில் தவிப்பு
உடனடி வைத்திய தேவையைப் பெறவே
உறவுகளை ஏற்றிய படகை அழித்த
படையினர் செய்கையை பார்த்ததன் தாக்கம்
புத்தாக்கம் பெற்று பயத்தைக் கொடுத்தது
இடம்பெற்ற நிகழ்வு உருவாக்கிய அச்சம்
இருப்பு கேள்விக்குறி என்ற நிலைலே

500



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகத்துவாரக் கடல்

'பள்ளிக்குடா' விலிருந்து வருவது 'கிறிஸ்பின்'
படகெனும் தகவலை அறிந்தனர் அகதிகள்
உள்ளூர அவர்க்கு நோயுற்றோர் யாரென்று
உருண்ட கற்பனை உள்ளத்தில் பலவாறாய்
முள்ளின் மேலேறி நின்றிடும் துடிப்புடன்
'முகத்துவாரக்' கடலில் படகிலவர் கண்கள்
தெளிவாய்ப் பார்த்தவர் உலங்கு வானூர்தியால்
தம்நிலை மறந்து திடுக்குற்ற நிலையில் 501

வட்டமிட்டு சுற்றியது வானூர்தி படகை
விழிமூடா நிலையில் கல்லூரி அகதிகள்
முட்டிமோதிய நிலையில் பார்வையை செலுத்திட
மீண்டும் வட்டமாய் சுற்றியது வானூர்தி
படகில் இருப்பவர் கைகளை உயர்த்தினர்
புரிந்திட வெள்ளை புடவையைக் காட்டினர்
நாட்டினில் நிலவிய போர்க்காலச் சூழலில்
நம்பிக்கை தருகின்ற செயல்களைச் செய்தனர் 502

கடலில் குதிக்கும் துணிவில்லை அவர்க்கு
கருமைக் கடலும் கலக்கம் தந்தது
படகினில் மறைந்து புகச்சிறு இடமில்லை
புதுப்புது வியூகத்தில் பறந்தது உலங்கு
நட்டாற்றில் விடப்பட்டோர் நிலையில் படகினர்
நிகழ்வது எதுவென நினைத்திடா இடரில்
உடல்நோயை குணமாக்க ஊர்விட்டு வந்தோர்க்கு
உண்டான தடங்கலால் உள்ளத்தில் துடிப்பு 503



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுங்கியா வந்தனர் படையினர் மறித்திட
பகலினில் திறந்த பகுதியே பாதையாம்
"எதுக்காக சுத்துறான்?" என்பதே கேள்வியாய்
எழுந்தது கணத்தில் ஏக்கத்தின் தோற்றம்
இதயத்தின் துடிப்பொலி இடைவெளி தவிர்த்திட
இமைகளை விலக்கி வடிந்தது விழிநீர்
பதைக்கும் உள்ளத்தை பறப்பவர் புரிந்திட
பரலோகம் பார்த்து விரித்தனர் கரங்களை
504

நம்பிக்கை சிதறுண்ட நிஜத்தினை உணர்த்திட
நீட்டிய துப்பாக்கி நெருப்பைக் கக்கிட
கும்பிட்ட மக்கள் குறிபார்த்துச் சுடப்படும்
காட்சியைக் கண்டனர் கரைதனில் நின்றோர்
இம்மியும் பிசகின்றி இயல்பாய்த் தாக்கின
இயந்திரத் துப்பாக்கி உமிழும் சன்னங்கள்
சமர்க்களம் போலவே சகலதும் நிகழ்ந்திட
சுக்கானை இழந்ததாய் சுழன்றது படகு
505

வேரறுந்த மரமாய் வழியின்றி கடலில்
வலுவற்ற நிலையாக தெரிவின்றிப் பயணிகள்
காருண்ய மகானின் கொள்கையைக் காக்கும்
காவலர் செய்கை குருதியில் நனைத்தது
தீராத வலியுடன் தளர்ந்திடும் உடலுடன்
தங்கிய உயிருக்காய் தம்கரம் ஏந்தினர்
போரென்றால் போரென்று பிறந்த கொள்கையால்
பதறும் அப்பாவிகள் புலம்பலை மதித்திலர்
506

தள்ளாடும் படகினை தெளிவாய்ப் பார்த்ததால்
துன்பத்தில் மூழ்கினர் துயருற்று மக்கள்
அள்ளிவந்த காற்றால் அலறல் கேட்டதால்
அவர்கள் இதயமும் அளவின்றித் துடித்தன
துள்ளின உணர்வுகள் உறவுகளால் துவண்ட
துயரத்தின் வெளிப்பாடு தடையற்ற நிலையில்
துளியும் இலக்கு தவறாத சன்னத்தால்
எரிந்த படகின் ஒளிகண்டு மலைத்தனர்
507



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொடியில் படகு நீரில் மூழ்கிட
நெஞ்சக குமுறல் கையறு நிலையால்
கொட்டிய குருதியால் சிவந்த கடல்நீர்
கரைதேடி வந்தது காற்றின் உந்தலால்
இடுபணி முடித்த இராணுவம் சென்றது
இயல்பாய் வெற்றியின் இமாலய மகிழ்வில்
உடுக்கை இழந்தவன் கைபோல முன்னின்று
உதவிட முடியாமை எண்ணிடக் கலக்கம்

508

தாவியோடி மீட்டிட தம்மிடம் படகின்றி
திகைப்புற்று நிற்போரின் துயரத்திற் களவேது
செவிவழி புகுந்த சிதைவற்ற சாவினோலம்
செவியினுள் உயிர்பெற தடுமாறும் நிலைவேறு
கவிர்கொண்ட மேகமாய் கடுமிருள் வாழ்வென
கலங்கிடும் மக்களின் குமுறலுக் கிணையேது
எவராலும் நிகழ்வினை ஏற்றிட முடியாத
ஏக்கநிலை சூழ்ந்த தவிப்புக்கு முடிவேது

509

வள்ளங்கள் இரண்டு விரைந்து சென்றதை
விழிகள் கண்டதால் இறைவனை நினைத்தனர்
நீள்விழியால் வடிந்தது நிரம்பிய நீர்த்துளி
நாதியற்று நின்றவர் நலமுற வேண்டினர்
வள்ளத்தில் சென்றோர் வாரியேற்றக் கண்டதால்
விபரீதம் பெரிதென மனதினில் எண்ணினர்
உள்ளபடி அறிந்திட ஊருக்கு விரைந்தவர்
உண்மை எண்ணியதை உணர்த்தக் கண்டனர்

510

கல்லாய் உறைந்தனர் கல்லூரியில் இருந்தோர்
காட்சியைப் பார்த்த கணநேரம் முதலாக
எல்லையிலா சோகத்தின் ஈரத்தை உணர்த்தி
ஏக்கத்தின் தாக்கத்தை இயம்பியது கண்ணீர்
கொலையுண்டோர் ஐந்துபேர் 'தூயஒளி' படகில்
குரூரமாய் சிதைந்தோரின் குருதி உறவுகள்
சல்லடை உளத்துடன் கல்லறை அடக்கத்தில்
கலந்த திருப்தியில் கல்லூரி திரும்பினர்

511



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனம் நிறைந்த முழுமை வாழ்வில்
மூழ்கிய நிலையில் வான்வெளி விடிந்தது
கண்கண்ட காட்சியால் மாறிடாத் துயரில்
கலங்கும் மக்களால் கல்லூரி கலங்கியது
நினைவுகள் புரண்டு நிஜத்தினை சிந்திக்கும்
நிலையினைக் கொடுத்தது நிகழ்ந்த தாக்குதல்
கனமாக இதயம் கலக்கத்தில் வாழ்க்கை
காலத்தின் செயலென கிரகிக்கும் நிலையங்கு.

512



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித பத்திரிசியார் கல்லூரி

தொடராய் எறிகணை தருகின்ற சத்தத்தால்
தடுமாற்றம் மக்களில் தக்கபதில் கிடைக்காமல்
இடம்மாறி வந்தும் இடராகிப் போயிடுமோ
இருப்பு என்கின்ற சந்தேகத்தின் தவிப்பு
அடுத்த மணித்துளியில் ஆரவாரம் மிகுந்து
அலறலுடன் விரைந்து அமர்ந்த கிறிஸ்ரியனால்
மாடிகளா லமைந்த பத்திரிசியார் கல்லூரி
முன்றலில் நிகழ்ந்த அவலம் வெளியானது 513

குருநகர்க் கண்மையில் குடியேற வசதியாய்
கட்டடம் கொண்டது பத்திரிசியார் கல்லூரி
விரைந்து புறப்பட்ட வக்கற்ற மக்கள்
விரும்பிய இடமாகவே கல்லூரி இருந்தது
நிரம்பிய கல்லூரியில் நாநூறு குடும்பங்கள்
நெருக்கத்தால் பலரும் நகர்ந்தனர் வேறிடம்
சார்ந்து உறவாடி சேர்ந்திருந்த மக்கள்
தம்மிடர் மறந்தனர் துணையான வாழ்வில் 514

சகோதரியைச் சந்தித்து சல்லாபித்து சென்றிட
சிரிப்புடன் வந்தார் கல்லூரிக்கு கிறிஸ்ரியன்
அகம் குளிர்ந்த வரவேற்பு அவருக்கு
அண்ணன் வரவினால் ஆனந்தம் கொண்டதால்
தாகத்தை தீர்த்திட்ட தன்மையில் இருந்தவர்
தங்கை கேட்டதால் தங்கினார் உண்டிட
சோகத்தின் சாயலோ இல்லாம லில்லை
சோதனைக் களமாக இடப்பெயர் வுள்ளதால் 515



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியவுண வருந்திய மயக்கத்தில் கல்லூரி
மரநிழல் உறக்கத்தில் முதியோர் வாலிபர்
பதைக்கும் வெயிலிலும் பெற்றோரைப் புறந்தள்ளி
பிரிய விளையாட்டின் முனைப்பில் சிறுவர்கள்
எதையும் சிந்தியா இளமையின் உந்தலில்
ஏட்டிக்குப் போட்டியான விவாதத்தில் இளையோர்
இதையெலாம் சகிக்காத இறைவனின் செயலாக
இடையில் தடுத்தன எறிகணை ஒலிகள்
516

குறுகிய நேரத்தில் கலக்கத்தில் மக்கள்
குதூகல மிழந்த குழப்பத்தி லவர்கள்
சீறிடும் எறிகணை சீற்றத்தின் முன்னால்
துணிவுடன் நின்றெவர் செயற்பட முடியும்
ஆறுதல் தேடியோர் அலையென ஓடினர்
அந்நேரம் அவர்களால் ஆனது அதுவே
நிறைந்தது கல்லூரி நாற்புறமும் வந்தோரால்
நெஞ்சத்தின் பதட்டம் நீண்டு ஒலித்தது
517

இறைவனை வேண்டிட எடுத்தனர் செபமாலை
இணைந்து ஓதினர் இடரினை களைந்திட
இறுதித் தெரிவாக இருந்தது அவர்களுக்கு
இதைவிட வேறொன்றும் ஈடாக இன்மையால்
பொறுப்பாய் சொல்லிட பதட்டம் குறைந்தது
பலரும் மனதார செபித்தனர் செபத்தை
சீற்றம் அடங்கிட துலங்கிய அமைதியால்
சன்னங்கள் சிதைத்தவை வெளியே கசிந்தன
518

கோட்டைத் திசையால் கூவிவந்த எறிகணைகள்
கூட்டாக விதைத்தன கொடூர விதைகளை
அடங்கிய உயிர்கள் அறுபட்ட உறுப்புகள்
ஆதரவு தேடியும் அலைந்திடும் மக்கள்
முடங்கிய உடல்கள் விதையுண்டு கிடந்தவரின்
முனங்கல் ஒலிகள் மிகையாய் இருந்தன
அடங்காத தாகத்தால் அடுத்தும் எறிகணைகள்
ஆர்ப்பரித்து வந்தன ஆவலாய் உயிர்கொய்ய
519



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்நீர்க் களமாய் பத்திரிசியார் வீதி
திசையற்று சிதறிடும் மக்களின் களமுமாய்
முந்திச் செல்வதால் வாழ்வினைக் காத்திடும்
வழியென பலரும் முனைப்புக் காட்டினர்
பந்தங்கள் விடுத்து பிரிந்தும் ஓடினர்
பாதுகாப்பு ஒன்றையே பெரிதெனக் கொண்டதால்
எந்தையர் வாழ்ந்திடும் ஏற்றமிகு மண்ணில்
இத்தகை தாக்குதல் ஏக்கத்தில் மக்கள்

520

ஆட்டம் முடிந்ததாய் அடங்கின எறிகணைகள்
அதிர்வுகள் நீங்காது அதிர்ச்சியில் அனைவரும்
பாட்டமாய் புறப்பட்டு பறந்து வீழ்ந்ததால்
பரிதாபம் நான்குபேர் பலியானார் அவ்விடம்
படுகாயத் தில்சிலர் பலருக்கோ சிறுகாயம்
பத்துப்பேர் வரையொரு வாகனத்தில் ஏற்றினர்
அடைந்த காயத்தால் அலறல் சத்தத்தால்
அடுத்து வருவதை அறியாமல் சென்றனர்

521

வீதியின் அமைதியால் வியப்பு சாரதிக்கு
விரைந்து சேர்த்திடும் முனைப்பும் அவனிடம்
வைத்திய சாலையின் முன்னால் வாகனம்
வரலாறாய் மாறிய நிகழ்வை எதிர்கொண்டு
பத்திரிசியார் வீதியை பதம்பார்க்க எறிகணைகள்
புறப்பட்ட நேரத்தில் படையினரிடம் வைத்தியசாலை
எத்தகை எதிர்ப்புமின்றி இந்திய இராணுவத்தின்
எதிர்பார்ப்பு நிறைவேற முடங்கியது வைத்தியசாலை.

522



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். வைத்தியசாலை

யாழ்நகரில் கால்கள் இடுகையி லடைந்த
ஏமாற்றம் ஜீரணமற்று இருந்தது அவர்களிடம்
'**ஜாலியன்வாலா**' மைதானப் படுகொலைப் பாணியை
எடுத்தது கைகளில் இந்தியன் இராணுவம்
மிலேச்சத் தனமான வஞ்சம் தீர்க்கும்
முனைப்பு தொடர்ந்தது அடாவடித் தனத்துடன்
அலையென வந்தவர் அதிகாரப் பலத்துடன்
அழிக்கத் தொடங்கினர் அப்பாவி மார்களை

523

கருவறுப்பின் கருத்தியல் நிறைவேறிய பின்னர்
காணுமிட மெல்லாம் கண்டல் இரத்தம்
குரூர கருணையற்ற கொலைகளின் விளைவுகள்
குருதியாய் துண்டமாய் குற்றுயிராய் கிடந்தன
பொருதலற்ற இழப்புகள் போர்க்கள கருவிகளால்
பாரினில் நான்காவது படையினரின் செயல்கள்
காரணம் அறியவில்லை காக்கவந்தோர் செயலினை
குறியவர்க் கெதுவென குழம்பினர் அனைவரும்

524

வைத்தியசாலை 'எக்ஸ்றே' விடுதிச் சூழலில்
வைத்தியர் தாதியர் முடங்கிய நோயாளர்
கொத்தாக வீழ்ந்தனர் அறுபத்தி எண்மர்
காட்டுத் தர்பார் களமானது வைத்தியசாலை
வீதிகள் எங்கும் சந்திக்க வந்தவர்கள்
வீழ்ந்து கிடந்தனர் நூற்றுக்கு மேலாய்
இத்தரை நாணிடும் இழிசெயலை நிகழ்த்தியும்
இந்திய இராணுவம் வெறியுடன் நின்றது

525



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்குப் பக்க வைத்தியசாலை வீதியில்
தாகமாய் இராணுவம் ஏந்திய துவக்குடன்
காற்றென வந்தவான் கடிதினில் தரித்தது
காருண்யன் காந்தியின் கற்சிலைப் பக்கத்தில்
மற்றொரு தொகுதியினர் முத்திரை பதித்திட
முன்நோக்கி நகர்ந்தனர் வாகனம் நோக்கி
முற்றிலும் எதிர்பாரா மாற்றத்தில் இராணுவம்
முன்நீட்டிச் சுட்டவாறு முச்சந்தியை நெருங்கியது 526

துப்பாக்கிச் சன்னங்கள் வாகன முன்பக்கம்
தாக்கிட அப்பக்கம் சரிந்து கெளிந்தது
தப்பிக்கத் துடித்தனர் தம்நிலை உணர்ந்தோர்
தொடரான சன்னங்கள் சாரதியைக் குறியாக
அப்பக்கம் இருந்தவரை தாக்கிப் பிணமாக்க
அடுத்த தாக்குதல் அம்புகளாய் வந்தது
துப்பாக்கிச் சன்னங்கள் சல்லடை போட்டிட
எரிபொருள் கொட்டிட ஈடாட்டம் கண்டது 527

சிந்தியது எரிபொருள் சிதறியது இரத்தம்
சிதைந்தது உறுதி சிக்குறும் நிலையிலவர்
உந்தலின்றி உண்டான ஓலத்தை அப்போது
உள்வாங்கா படையினர் ஓர்மமாய் நின்றனர்
சிந்திய குருதியை சிரத்தையில் கொள்ளாமல்
சிலமணித் துளிகளில் நெருப்பு வைத்தனர்
இந்திய இராணுவத்தின் இரக்கமற்ற செயலால்
ஈனக்குரல்கள் ஒன்றாய் அடங்கிக் கொண்டன 528

நினைத்த காரியத்தை நிகழ்த்திய திருப்தியில்
நெஞ்சம் மகிழ்ந்த எக்காளச் சிரிப்பு
செந்நிறப் பிழம்பாய் சுவாலையின் வெளிச்சம்
செறிந்து பரந்தது வான்நோக்கி கரும்புகை
வானமும் இருளானது வன்முறை கண்டதால்
வரலாற்றுப் பதிவாக வெளியாகா திருந்திட
ஈனக்குணம் படைத்தோர் இருள்விடியு முன்னரே
இல்லாது துடைத்தனர் எதுவுமே நிகழாததாய் 529



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***

கூறிவிட்டுக் கிறிஸ்ரியன் குலுங்கியழத் தொடங்கிட
கேட்டவர் அனைவரும் கேள்வியின்றி அழுதனர்
தூறிவிட்ட மழையாக தேறிட முயன்றாலும்
துயருடன் சூசையப்பர் கல்லூரியில் மக்கள்
சிறகிழந்த வர்போல சிந்தையில் பயத்துடன்
செய்வது யாதென தெரிவின்றி அனைவரும்
மாற்றமின்றித் தொடரும் மீதமான துயரால்
மார்க்கம் தேடிடும் முயற்சியில் பலரும்

530

வஞ்சிக்க நினைத்ததே இந்திய இராணுவத்தின்
முரணான செயலுக்கு முதன்மைக் காரணம்
நெஞ்சைக் கல்லாக்கி நேர்மையை முடமாக்கி
நிழலாக நிற்காமல் மாறினர் நெருப்பாக
வஞ்சம் தீர்த்திட முனையலாம் என்றங்கு
வெளியான செய்தியால் வெருட்சியில் மக்கள்
சஞ்சலம் மேலிட செல்வதற்கு வேற்றூரை
தேடிடும் முயற்சியில் சளைக்காத தீவிரம்

531

வெளியேறி விடுவதே முற்றிலும் சிறந்ததாய்
விதையான எண்ணம் விருட்சமா யானது
நாளுக்கு நாளாக நலிந்து பிழைக்கும்
நம்பிக்கை இல்லாத நிலைமை வெறுப்பானது
முள்ளின் மீதேறி நிற்பதைப் போலவர்
மனத்தின் உளைச்சல் மார்க்கம் பெற்றது
அள்ளிடக் குறையாத ஆற்றின் நீராக
ஆனது எண்ணம் அற்பமும் குறையாமல்

532

தொழிலுக்கு போகாது மண்டைதீவு முனையில்
சிக்குறாத திருந்தோரில் சிலரும் இருந்தனர்
அழிப்பின்றி மீண்டவர் அழிவதை விரும்பாது
ஆதாரம் தேடிடும் ஆர்வத்தில் துடித்தனர்
செழிப்பான வாழ்வு தடையாகிப் போனாலும்
சென்றுயிர் வாழ்ந்திடல் நன்றெனஎண்ணினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்பாக செயலாற்றி விருப்பத்தை ஏற்படுத்த
வழிகளில் சந்தித்து வலியுறுத்தி நின்றனர்
533

கண்முன்னே முகத்துவாரக் கடலில் நிகழ்ந்தது
கனவாக இல்லாமல் கொழுந்தாக எரிந்தது
மண்டைதீவில் கொல்லப்பட்ட மவுணின் மைந்தனும்
விதையான சேதியால் விரக்தியில் உறவுகள்
இன்னமு மென்னென்ன ஏக்கங்கள் தொடருமோ
இருப்பதைக் காப்பதே ஏற்றதாய் இருந்தது
இணைந்தனர் பலரும் எண்ணத்தில் ஒன்றாக
இனியவர்க் காலோசனை இயம்பிட முடியாது
534

செல்லும் இடமதை சல்லடையாய் ஆராய்ந்து
சரியான தேர்வினை கூறினார் கிறிஸ்ரியன்
அல்லலால் சலிப்புற்ற அனைவரும் தீர்வால்
ஆள்மாறிப் பார்த்தனர் ஆனந்தம் கொண்டுமே
சொல்லிவிடை பெற்றிட சந்தித்து மீண்டனர்
சிலநாட்கள் ஒன்றாய் சேர்ந்திருந்த காரணத்தால்
கல்லூரியில் இருந்தவரில் ஈரைந்து குடும்பங்கள்
கூட்டாகப் புறப்பட்டன 'சாட்டி'யை நோக்காக
535

தீவகத்தின் தெற்கை சார்ந்தது சாட்டியூர்
தாக்குதல் தருகின்ற தொல்லைக ளில்லையாம்
கவலையின்றி காலத்தைக் கழிக்கும் ஊர்களில்
கவர்ந்தது பலரையும் கடலோரச் சாட்டியூர்
தீவகம் செல்பவர்க்கு 'அராலி'யே துறைமுகம்
'தாங்கும்' வள்ளங்களே சகலர்க்கும் வாகனம்
தீவகப் பயணம் கிறிஸ்ரியன் தலைமையில்
சற்றும் புதைகுழி இருப்பதை அறியாமல்.
536



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகலிடம் தேடல்

அதிகாலை கதிரவன் ஆரவாரமாய் மேலெழ
'அராலி' நோக்கிய திசையில் 'பாரவூர்தி'
பாதைகளில் நடமாட்டம் பெரிதாக இல்லாமை
பயணிப்போர் கண்ணுக்குப் புதிதாக இருந்தது
சாதாரண நிலையாயின் திரும்பும் திசையெலாம்
சுறுசுறுப்பு மிக்க தெருக்களாய் இருக்கும்
அதிசயமாய் பார்த்தனர் அமைதியாய் இருந்தோர்
அனைவர் இதயத்திலும் அதிவேகத் துடிப்பு

537

நாவலர் வீதியால் நகர்ந்த பாரவூர்தி
நெரிசலின்றி கடந்தது 'நாவாந்துறை' சந்தியை
அவதானமாய் அராலியின் ஆழமான கடலையும்
ஆழமற்ற பகுதியையும் கடந்திட வேண்டும்
தீவகத்தின் வடக்குத் திசையிலுள்ள 'சரவணை'
திடலில் இறங்கியே சாட்டியூர் செல்லலாம்
ஆவலாய் சென்றாலும் ஆழமான பகுதியில்
ஆரவாரம் இருக்கும் ஆனந்தம் இருக்காது

538

'பண்ணைத் தாம்போதி' பிறப்பதற்கு முன்னர்
பாவனையில் இருந்த பிரதான பாதையிது
நீண்டகால வரலாறாய் நிகழ்ந்த போக்குவரத்து
நன்மையைக் கொடுத்தது நாளாந்தம் மக்களுக்கு
பண்ணைத் தாம்போதி பயணத் தடையினால்
பயணிக்கத் தொடங்கினர் பிறிதொரு தேர்வின்றி
கணிசமான பயணிகள் கடந்து செல்வதால்
கணமும் நெருக்கடி களமாகவே இருக்கும்

539



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக்கும் இதயத்தின் கடுந்துயர் நிலையினரை
காவிவந்த பாரவூர்தி கடலோரம் தரித்தது
தினந்தினம் பலரைச் சுமக்கும் நிலமின்று
சுமையின்றி ஓய்வாக சுருதியற்று இருந்தது
கனமழை போலவே கொட்டிய எறிகணைகள்
களத்தினில் மாற்றத்தை கொடுத்தன் விளைவிது
தனிமையைத் தனதாக்கி தகிக்கும் வெயிலையும்
தானேந்தி குப்பைச் சிதறலுடன் அத்தரை

540

கிழக்கில் மேலெழுந்த கதிரோனின் ஒளிக்கதிர்
கடலின் பிரதியால் கண்கள் உறுத்தியது
இளந்தாரி வெயிலால் எழுகின்ற அனலால்
ஈரலிப்பற்ற காற்று இதமாகப் படவில்லை
நிழலைத் தரமுடியா நெடிதற்ற மரங்களும்
நிசப்தமாய் நின்றன நலிவுற்ற காற்றினால்
கலகலப் பில்லாமல் காகங்கள் பறந்தன
காரணம் புரியாமல் கோலோச்சியது அமைதி

541

அராலியை அடைந்ததால் அகதிகட்கு மகிழ்ச்சி
ஆயத்தமாய் மூன்றோடம் அத்துறையில் நின்றன
பொருளுடன் பலரும் பகிர்ந்து ஏறினர்
புறப்பட்டன ஓடங்கள் போதியதாய் இருந்ததால்
சரவணை நோக்கிச் செல்கின்ற பயணத்தால்
சந்தோஷ நிலையில் சகலரும் இருந்தனர்
தரித்து நின்றனர் தாமதித்து வந்தோர்
திரும்பி வருகின்ற ஓடங்களை எதிர்பார்த்து

542

இருவர் வீதமாய் இருந்தனர் 'ஓட்டிகள்'
இடைவெளி இல்லாத இயங்கிகள் அவர்கள்
சிரமமின்றி வள்ளத்தை செலுத்தினர் லாவகமாய்
சாதாரண காற்றினால் சிக்கலற்ற பயணம்
மரக்கோலால் 'தாங்க'வே முன்னோக்கி நகர்ந்திட
முன்பின்னாய் வள்ளங்களின் முன்னேற்றம் இருந்து
விரைவாய் சென்றடைய வேண்டிய துடிப்பு
வள்ளத்தில் இருந்தோரின் உள்ளத்தில் இருந்தது

543



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அராலிக் கடல்

கரையிருந்து சிறுதூரம் கடந்ததும் வள்ளங்கள்
கடக்க வேண்டிய கடலோ ஆழமானது
நெருக்கமாய் பயணித்த மூன்று வள்ளங்களின்
நிரையில் ஒழுங்கற்ற நிலையே இருந்தது
மரக்கோல் உயரமாய் வைத்திருந்த வள்ளத்தை
முனைப்புடன் தாங்கிட முன்னேறிச் சென்றது
மரக்கோலை கட்டையாய் வைத்திருந்த வள்ளங்கள்
மெதுவாக 'வலித்து'ச் செலுத்திட வேகமிழந்தன 544

முன்செல்லும் வள்ளம் முன்னேற்றம் கண்டிட
முடியாத வள்ளங்கள் பிந்தியே சென்றன
கண்வெட்டா நிலையில் பார்த்திருந்த பயணிகள்
கதைப்பவை ஓட்டிகளைக் கடுப்பாக் கவில்லை
முன்னோக்கி செல்வதற்கு முடிந்தவரை முயன்றும்
முடியாத தன்மையே முழுமையாய் இருந்தது
தனித்து முன்னேறிச் செல்லுகின்ற வள்ளமோ
தாண்டியே போனது தடையான ஆழத்தை 545

ஆள்காட்டி எனப்பலர் ஆத்திரத்தில் அழைக்கும்
ஆகாயப் படையின் உலங்கு வானூர்தி
வள்ள மிரண்டையும் வட்டமிட்டுச் சுற்றவே
வகையற்ற நிலையில் வள்ளத்தில் பயணிகள்
வள்ளங்கள் ஆழத்தில் வலித்துச் செலுத்துவதை
கவனித்த மக்கள் கையறு நிலையானார்
கொள்ளையிட கூலிக்குவந்த கொலைகார வானூர்தி
கோபமாய் மீண்டும் சுற்றியே வந்தது 546



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்துவாரத் தாக்குதல் முள்ளெனக் குத்தியது
பள்ளிக்குடா அகதிகளின் படுகொலை கண்டதால்
அக்கரைத் தாக்கத்தால் அடைந்த துயரமே
அகதியாய்ப் புறப்படும் ஆர்வத்தைக் கொடுத்தது
இக்கரையும் தமக்கு இந்நிலை தந்திடுமோ
என்பதே கேள்வியாய் இதயத்தை அறுத்தது
அக்கணம் எல்லோரும் ஆள்மாறி ஆள்பார்த்தே
அடைந்த துயரை அடையாளம் காட்டினர் 547

ஆள்காட்டி சுழன்று ஐயத்தை உறுதியாக்க
ஆரவாரம் தொடங்கின ஆற்றாமை வெளிப்பாடாய்
வெள்ளைத் துணிகள் மேல்நோக்கி அசைந்தன
வெருட்சியால் செய்வதன் விபரம் புரியாமல்
பள்ளிக்குடா நோயாளர் பாவித்த யுத்திகள்
பாதுகாக்க தவறிடினும் பாவிக்கத் தொடங்கினர்
முள்ளின் மேல்நிற்கும் வலியுடன் எல்லோரும்
முயன்றனர் தம்மால் முடிந்ததைச் செய்திட 548

கைகளை உயர்த்திக் காட்டினர் அசைத்து
கண்டதும் உணருவர் காண்பது மக்களென்று
கூக்குர லிட்டவாறு கைகளை விரித்துக்
கதறினர் அவர்தம் காதினில் கேட்குமென்று
அக்குரல் கேட்காது ஆட்காட்டி இரைவதால்
ஆய்ந்து உணர்ந்திடும் அவகாச முமில்லை
அக்கம் பக்கமென அசைந்து முயன்றனர்
அபலைக ளென்றவர் உணர்ந்திடக் கூடுமென்று 549

பக்கமாய் சரிந்து புரண்ட ஆள்காட்டி
படகைக் கடந்து பறந்து சென்றது
அக்களிப்பு மிகுதியாய் அவருணர்ந்த போதிலும்
அன்றைய அனுபவம் அச்சத்தையே கொடுத்தது
மக்களிடையே கொந்தளிப்பு 'கெதியா வலியுங்க'
மனத்தின் பயத்தால் முனைப்புடன் வெளியேறியது
சிக்கலான கட்டம் தவிப்பில் முழுமையாய்
சீக்கிரம் சென்றடையும் துடிப்பும் மிகுதியாய் 550



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டிகளால் வேகமாய் உந்திட முடியவில்லை
ஓடங்கள் மாற்றமின்றி ஊர்வதாய்த் தெரிந்தது
"கடலிலே அன்றுசுட்ட ஆள்காட்டி யிதுதான்
கவனமாப் பாத்திட்டு கெதியாத் திரும்பிறான்"
பூட்டிவைத்த எண்ணத்தை பகிர்ந்தார் கிறிஸ்ரியன்
பயமிருந்தும் ஆள்காட்டி பறந்ததால் நிம்மதி
ஈட்டிய தூரம்தனில் இன்னுமோ அதிகமாய்
ஏக்கத்தின் பெருமூச்சு காற்றுடன் கலந்தது

551

வள்ளங்களில் இருந்தவர் ஆள்காட்டி மீண்டும்
வருவது கண்டதால் மின்தாக்கிய நிலையில்
கள்ளமின்றி மனதார கலந்து பகிர்ந்திட்ட
கணநேர சந்தோஷம் காற்றாய்ப் பறந்தது
வள்ளங்கள் மேல்நேராய் வந்திட்ட ஆள்காட்டி
வேகத்தைக் குறைத்து வட்டமாய் சுழன்றது
துள்ளிவந்த அலையாக துலங்கியது அலறல்
துடிப்புடன் தடுத்திட துரிதமான முயற்சி

552

'திலகம்' தனது திரிமாதக் குழந்தையைத்
தாங்கிய கைகளை தூக்கிக் காண்பித்தான்
உலகமே சுற்றிடும் உணர்வுடன் பலரும்
உடைகளை உயர்த்தி உணர்த்திட முயன்றனர்
அலையைத் தூண்டியது ஆள்காட்டி காற்றாடி
ஆட்டத்தில் வள்ளங்கள் ஆரவாரம் ஒருபுறம்
மெல்லப் பதிவதை விழிகள் கண்டதும்
முன்னரை விடவும் மேலான பதட்டம்

553

எண்ணிய வழிகளில் எண்ணத்தை உணர்த்திட
எல்லோரும் இணைந்து எடுத்தனர் முயற்சி
பெண்கள் எழுந்து பெருங்குரல் கொடுத்து
பேரிடரைத் தடுக்க பெரிதும் முயன்றனர்
கண்ணியில் பட்டதாய் களநிலை உணர்த்திட
கடவுளே என்கின்ற குரலொலி வியாபித்தது
திண்ணமாய் உணர்ந்தனர் சிக்குண்டு விட்டதை
திரண்ட உணர்வுகள் அலறலாய் வெளியேறின

554



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவலக்குர லொலியோடு ஐக்கியமாய் துப்பாக்கி
அதிர்வுகளும் சேர்ந்ததால் ஆரவாரமே அரசாட்சி
அவர்களுடல் பதறியது நினைவுகள் சிதறியது
ஆற்றலிழந்து வரம்பைமீறி இதயம் துடித்தது
மேவிவிட்ட நிலைமை வரம்புமீறிய செயற்பாடு
முன்னைய நம்பிக்கை மூழ்கிடத் தொடங்கியது
கூவியே அழைத்தும் கைதர யாருமில்லை
குரலைக் கேட்டாலும் உதவிட எவருமில்லை
555

“சுடவேணாம் சுடவேணாம் நாங்க அகதிகள்
சுற்றிவரப் பாருங்க தாயையும் பிள்ளையையும்
கடவுளே எங்களைக் காப்பாற்ற மாட்டீரா?”
கண்ணீர் வெளியேறின இயலாமை வெளிப்பாடாய்
உடைப்பெடுத் தெழுந்த ஓலத்தின் ஒலியையோ
உணர்வின் செயலையோ உணரவில்லை படையினர்
படையெடுப் பெனவே பறந்தவாறு சுட்டனர்
பதுங்கிட இடமின்றி பயணிகள் தவித்தனர்
556

அணியத்தில் வலித்த ஓட்டியின் தலையில்
ஆழமாய்ப் புகுந்தது துப்பாக்கிச் சன்னம்
பிணமாகி வள்ளத்துள் புரண்டு விழுந்தான்
பார்த்த மக்களிடை பயத்தின் ஓலம்
காண்பித்த திலகத்தின் குழந்தையை தாக்கிட
கைகளிலிருந்து வழுகிக் கடலில் வீழ்ந்தது
எண்ணம் சிதறுண்டு எரியுண்டது நம்பிக்கை
ஏக்கத்தில் இதயம் எரிமலையாய் வெடித்தது
557

குதித்தனர் கடலில் ஓட்டிகள் மூவரும்
கைவிட்ட நிலையால் கலங்கினர் மக்கள்
பதைப்பு ஆதரவை பார்வையால் எதிர்பார்த்து
பயனில்லை எனும்நிலை இடிமேல் இடியானது
அதிவிரை வாய்மரணம் அணைக்கத் துடிப்பதை
அனைவரும் உணர்ந்ததால் அழுகுரல் அபயக்குரல்
அதனோடு இணைந்து ஈனக்குரல் “ஆண்டவரே...!”
அறுதியும் இறுதியுமாய் அகத்திலிருந்து உருவானது
558

கோழிதன் குஞ்சுகளை சிறகுக்குள் மறைப்பதாய்
காத்தனர் பெற்றோர் கலக்கத்தின் மிகுதியால்
கொல்லட்டும் தங்களை காப்போம் பிள்ளையென
கடைசி நம்பிக்கையில் கிளர்ந்த உணர்ச்சியால்
வள்ளங்களில் பயணிகள் வெளியின்றி அமர்ந்ததால்
விரயமின்றிச் சன்னங்கள் வீரத்தைக் காட்டின
எள்ளளவும் மாற்றமின்றி எதிரியைத் தாக்குவதாய்
ஏவுகின்ற சன்னங்கள் எல்லாமே பயனாயின
559

துடித்தனர் துவண்டனர் தாங்கிடா வேதனையால்
தாக்குதலின் மூர்க்கம் தளர்ந்த தாயில்லை
கடலில் வீழ்ந்தனர் கலத்தின் தழும்பலால்
காயமுற்றும் வீழ்ந்தனர் காயமற்றும் விழுந்தனர்
திடமுடன் நீந்தத் தெரிந்தவரும் விழுந்தனர்,
தெரியாதாரும் விழுந்தனர் தடுப்பற்ற நிலையில்
தடுமாறிய வள்ளமொன்று சரிந்து மூழ்கியது
மரவள்ள மாகையால் கடலடி செல்லவில்லை
560

தொடர்ந்த தாக்குதலின் துளைகளால் மறுவள்ளம்
தண்ணீரில் கவிழ்ந்து தாபரிப்பை விடுத்தது
கடலினடி அமிழாத கலங்களில் பிடித்தவாறு
கடல்நீரில் மிதந்தனர் காத்திடத் தமதுயிரை
கூடவே வள்ளங்கள் காவிவந்த பொதிகளும்
கடலில் மிதந்து காற்றால் வழிந்தது
கடலில் கலங்களும் கலங்களில் பயணிகளும்
காப்பாரற்ற நிலையில் கோலோச்சியது தாக்குதல்
561

குற்றுயிரான நிலையில் கலத்திலிருந்து வீழ்ந்து
கடலடியைத் தேடியது கடைமூச்சு அடங்கியுடல்
முற்றிலும் உயிரிழந்த மனிதர் சடலமாய்
மூழ்கியே கதியென முடங்கினர் வள்ளத்துள்
ஆற்றாமை மிஞ்சிட ஆதாரம் தேடுவோரும்
அமிழ்ந்து மிதந்தனர் ஆதரவை எதிர்பார்த்து
சீற்றம் அடங்காமல் சீறியவாறு சன்னங்கள்
சாவின் விளிம்பை சகலரும் உணர்ந்தனர்
562



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயங்கள் வலித்தது கடல்நீரின் உப்பால்
கண்ணீரும் இணைந்தது கடலுக்கு உவப்பாய்
ஓய்வில்லாத் தவிப்பால் உடலிலே நடுக்கம்
உதவிட முனைந்தனர் உறுதியாய் மிதந்தவர்
பயத்தால் ஒதுங்காமல் பிரித்துப் பார்க்காமல்
பாதுகாத்தனர் ஊனமானோர் பெண்கள் சிறியோரை
ஓயாமல் முயன்று ஓடத்தின் ஒட்டத்தில்
ஒருவாறு சேர்த்தனர் உயிரோடு மிதந்திட
563

திடீரென வடதிசையில் தென்பட்டது உலங்குவானூர்தி
தடுமாற்றம் மக்களுக்கு தொடரும் பேரிடியால்
தடுமாறியது தண்ணீரில் தவித்தவர் மட்டுமல்ல
சளைக்காது அறுவடையை சாதித்த ஆள்காட்டியும்
கடுதினில் திரும்பியது சுடுவதை நிறுத்திவிட்டு
கிழக்கே செல்வதை கண்டதால் நிம்மதி
முடிவினைப் பார்ப்பதுபோல மும்முறை சுழன்று
முகங்காட்டி மறைந்தது மாற்றானின் ஆள்காட்டி
564

வாடிக்கையான நிகழ்வை விழிமூடா நிலையிலே
வேதனையில் பார்த்தனர் முன்னர்கரை யேறியோர்
விடைகூறிச் சென்றதுபோல் வந்தவழியே திரும்பிய
வானூர்தியை அவதானித்து விரைந்தனர் உதவிட
நடைபெற்ற அறுவடை நெஞ்சை வலித்திட
நாலிரண்டு வள்ளங்கள் நிரையாகப் பறந்தன
படகின்றி அராலியில் பார்த்தவாறு நின்றவர்கள்
பாய்ந்து கடலில் விரைந்தனர் நீந்தியே
565

கடலைக் கிழித்தவாறு கலங்களைச் செலுத்தி
காற்றாய் வந்தனர் கண்டனர் காட்சியை
திடங்கொண்ட அவர்களின் தேகமும் தடுமாறியது
தரித்திட நேரமின்றி தண்ணீரில் குதித்தனர்
கடலில் மிதந்தோரை கைகொடுத்து ஏற்றினர்
காயத்தால் தவித்தோரை காப்பாற்றி ஏற்றினர்
கடலில் அமிழ்ந்து கிடந்த உடல்களை
காத்திடும் முயற்சியில் கண்ணாக இருந்தனர்
566



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்த கண்களுடன் மூச்சடங்கி கடலினடி
விதையான கிறிஸ்ரியனை கண்டதால் அதிர்ச்சி
அழைப்புக் குரலில் அர்த்தம் கொள்பவர்கள்
அசைவற்ற உருவத்தின் அர்த்தம் உணரவில்லை
சுழியோடி கடலாழம் செல்லும் மேலாப்பாச்சி
சத்தமின்றி கிடந்தார் தலைமுடி மேலெழ
உழைப்பால் உயர்ந்து உருவக மானவர்
உயிரடங்கி கிடந்தார் ஊரோடு ஒத்தோடி

567

நெஞ்சைப் பிளந்திடும் நெடுந்துயர் இருப்பினும்
நிலைதடு மாறிடாமல் நினைப்பதை செய்தனர்
சஞ்சலம் ஆள்காட்டி திரும்பி வரலாமெனினும்
சளைக்காது கடமையை தமதாகக் கொண்டனர்
கொஞ்சமும் பிசகாமல் கடலினாழம் தேடித்தேடி
கடையாள் வரையில் கிடைத்ததில் உறுதியாகினர்
அஞ்சாத செயலால் ஆட்களுடன் வள்ளங்கள்
அடுக்காக கரைநோக்கி ஆர்வமாய் புறப்பட்டன

568

உயிரற்ற உடல்கள் உயிருடன் உள்ளோருடன்
ஊர்காவற்றுறை கரைக்கு ஏற்றிச் சென்றிட
காயப்பட்ட பதின்மரை கடுகதி வேகமாய்
கொண்டு சென்றனர் அராலித் துறைக்கு
நியாயமற்ற கொலைகளால் யாழ்ப்பாண வைத்தியசாலை
நோக்கிச் செல்வதை முற்றாகத் தவிர்த்து
உயிர்காக்க தவித்தோரை ஊர்தியில் ஏற்றிக்கொண்டு
உடனேயே சென்றனர் 'மூளாய்' வைத்தியசாலை

569



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதையுண்ட உறவுகள்

நின்றவரின் வேதனை கதறலுக்கு மத்தியில்
நிலைகுலைந்த உறவுகளின் துடிப்புகளுக் கிடையில்
மூன்றைந்து உடலங்கள் 'காவலூர்' சேமக்காலை
மண்ணில் ஒன்றாய்ப் புதைக்கப் பட்டன
ஒன்றித்துப் புறப்பட்ட ஒவ்வொரு குடும்பங்களும்
ஒன்றுக்கு மேற்பட்டோரை இழந்த தவிப்பில்
புண்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற நிலையில்
பெருகிய கண்ணீரே துயரத்தின் சாட்சியாகும்

570

பரந்தவெளி கொலையின் பரபரப்பு அடங்குமுன்
பத்திரிகை செய்தி பரபரப்பை ஏற்படுத்தியது
"அராலிக் கடலில் இருபது புலிகளை
அழித்து சாதனை புரிந்தது ஆகாயப்படை"
உருமாறி வெளிவந்த ஊடகச் செய்திகள்
உண்மையாய் உலகத்தின் காதுகளை அடைந்தது
இருப்பவர் சாட்சியல்ல இறைமையுள்ள அரசென்ற
இரும்புக் கவசத்துள் வெளியான செய்திகள்

571

எண்பத்தி எட்டுநாள் கொன்சனா உட்பட
எழுபது வயதுள்ள கிறிஸ்ரியனும் புலிகள்
கண்பார்வை அற்றோரும் குடுகுடு கிழவிகளும்
குழந்தைகள் பலரும் கணக்கில் புலிகள்
கணக்குப் பார்த்தால் மருண்டவன் கண்ணுக்கு
காரிருள் எல்லாம் பேயெனும் நிலைதான்
காண்பவ ரெல்லாரும் கொடியவராய் தெரிவது
காரணம் பிறப்பால் தமிழராய் இருப்பதே.

572

## வாழ்வும் ஒளியாகும்

மண்டைதீவு முனைமுதல் அராலிவரை நடத்தப்பட்ட
மிலேச்சத் தனமான அறுவடை கொடுமையானது
இன்னுயிரை ஈர்ந்தவர்கள் அறுபத்தி ஆறுபேர்
இறவாத நினைவுடன் முடமானவரும் பலருளர்
அன்னையை தந்தையை ஆதரவானோரை இழந்து
அநாதை ஆகிவிட்ட அவலத்தில் சிலருளர்
கண்முன்னே பிள்ளைகள் கொலையுண்ட நிலைகண்டு
காலமெலாம் துயரில் சிக்குண்டவ முள்ளர்

573

சிறிதல்ல பட்டகாயம் சிகிச்சை அளிப்பதற்கு
தந்ததோ பெருந்துன்பம் தாங்குமா பலருள்ளம்
மாறும்முன் தொடராய் மரணத்தின் ஓலங்கள்
மென்மையான உள்ளம் மீண்டெழ வழியேது
மறையாத இடரெல்லாம் மண்ணுறச் செய்வதற்கு
மனித மனமென்ன அட்சய பாத்திரமா
ஏற்கவும் தாங்கவும் ஏற்பாய் இருந்திருக்கும்
இரும்புக் கலவையால் இதயம் இருந்தால்

574

மின்னாமல் முழங்காமல் துயரங்கள் பெருமழையாய்
முளைவிட்ட தாக்கங்கள் வற்றாத வெள்ளமாய்
ஒன்றல்ல இரண்டல்ல ஒருகணம் மறப்பதற்கு
ஓய்வின்றி தொடர்கிறது உண்மையின் பிறழ்ச்சிகள்
கண்ணாற் கண்டவர் காயத்தில் தப்பியவர்
கைகோர்த்து நின்றாலும் கைமேல் பயனில்லை
உண்மைச் சாட்சியம் உள்ளத்தில் உறைகின்றது
உண்மைகள் உறங்காமல் இன்னமும் வாழ்கின்றன

575



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலொடிந்த ஆட்டுக்காய் கண்ணீரைக் கொட்டிய
கௌதம புத்தரின் காருண்ய போதனையில்
நிலைத்து நிற்போர் நிகழ்த்திய கொலைகளால்
நயனம் திறந்து நாணியது நானிலம்
போலியான கருத்துகள் போக்கற்ற நியாயங்கள்
பொருந்தாத விளக்கங்கள் பொருதுதற் கேதுவாய்
கிலிகொள்ளச் செய்யதிட கொலைசெய் கலாசாரம்
கைகளில் எடுப்பதை காலந்தான் மாற்றவேணும்

576

விதையாகக் கொடுத்த விலையற்ற உயிர்கள்
வருங்கால சந்ததிக்கு விளக்காக நின்று
புதையாத உறுதியில் பலம்பெற வேண்டிய
பிரதான கடமையை பகுத்து உணர்த்தின
சிதையாகிப் போனாலும் சிதறாத உணர்வுகள்
சிலையாக நிலைத்து சுடராக விரிந்து
கதையாக அல்லாமல் கடமையை உரைத்து
காலத்தின் தேவையை கருத்தாக விதைக்கும்

577

வெளிவர முடியாமல் முடங்கிய உண்மைகள்
வரலாறாய் பதிவாகும் வருங்கால சந்ததிக்கு
வெளிச்சம் உருவாக மறையும் இருள்போல
விளைவுகள் வெளியாக வாழ்வும் ஒளியாகும்
பழங்கால புராணங்கள் படிமங்கள் முதலாக
புடமிட்டுக் காட்டுவதும் மொழிவதும் இதுவாமே
செழிப்பான வாழ்வுக்காய் செங்குருதி சிந்தியோர்
சிதையாத உறுதியும் செழிப்புறும் ஒருநாள்!

578

குருநகர் மண்ணில் குறுகிய காலத்தில் கொடியோர் கரங்களால்
அறுபத்தி ஆறுபேர் ஆகுதி ஆனார்கள் அகிலமும் அறியும்
வரலாறாய் உரைத்திட காவியம் வடித்து அவர்க்கே அர்ப்பணித்து
உரமார்ந்த பெரியோர் ஒண்கவிதை ஆற்றுவோரின் பாதம் ஒப்படைத்தேன்.

579

**கலையார்வன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரு. பின்னிணைப்பு

## அறுவடையானவர்கள்

**மண்டைதீவு முனையில் (10.06.1986)**

| | | |
|---|---|---|
| 01. | திரு. ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை | 16.02.1918 |
| 02. | திரு. செபதேயு சேவியர் (புதியவர்) | 04.03.1924 |
| 03. | திரு. யோசேப் பர்னாந்து | 08.05.1924 |
| 04. | திரு. மனவல் பற்றிக் | 13.03.1926 |
| 05. | திரு. அருளானந்தம் பொனிபஸ் | 15.05.1926 |
| 06. | திரு. பற்றிக் அலோசியஸ் | 27.08.1928 |
| 07. | திரு. செபமாலை யோசேப் சாமிநாதர் | 19.04.1929 |
| 08. | திரு. ஜோண் ஜோச் | 07.04.1930 |
| 09. | திரு. மனவல் பயஸ் | 09.07.1930 |
| 10. | திரு. கிறிஸ்தோப்பர் எஸ்தாக்கி | 09.05.1932 |
| 11. | திரு. அருளானந்தம் பெனடிக்ற் | 15.09.1934 |
| 12. | திரு. மனவல் மரியநாயகம் | 27.05.1948 |
| 13. | திரு. அலோசியஸ் லிகோரி (மவுண்) | 18.10.1952 |
| 14. | திரு. பங்கிராஸ் அன்ரனி யூலியஸ் | 17.09.1953 |
| 15. | திரு. பங்கிராஸ் தாசீசியஸ் | 14.02.1956 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 16. | திரு. பெனடிக்ற் அலிஸ்ரன் | 02.06.1956 |
| 17. | திரு. முடியப்பு அன்ரனிதாஸ் | 27.09.1956 |
| 18. | திரு. பெனடிக்ற் லிகோரி | 08.04.1959 |
| 19. | திரு. டேமியன் றூபட் உதயகுமார் | 25.08.1960 |
| 20. | திரு. பெனடிக்ற் மகேந்திரன் | 12.08.1961 |
| 21. | திரு. அலோசியஸ் டீயுக் | 28.12.1962 |
| 22. | திரு. பங்கிராஸ் விமலதாசன் | 07.10.1963 |
| 23. | திரு. அன்ரன் செல்டன் வெயின் | 28.04.1965 |
| 24. | திரு. எமலியூஸ் மக்சிமஸ் ஈஸ்வரன் | 27.12.1965 |
| 25. | திரு. சு. கோபாலகிருஷ்ணன் (புதியவர்) | 10.06.1967 |
| 26. | திரு. பெனடிக்ற் கியூபேட் | 24.06.1967 |
| 27. | திரு. ஞானப்பிரகாசம் ஜெயபாலன் | 26.04.1968 |
| 28. | செல்வன் ஞானப்பிரகாசம் ஜெயகாந்தன் | 02.11.1969 |
| 29. | செல்வன் சவிரியான் யேசுராசா | 08.09.1973 |
| 30. | திரு. முத்துசாமி (மலையகத்தவர்) | 00.00.0000 |
| 31. | திரு... (வட்டுக்கோட்டை வாலிபன்) | 00.00.0000 |

**முகத்துவாரக் கடற் பகுதியில்... (15.10.1987)**

| | | |
|---|---|---|
| 01. | செல்வன் லிகோரி தயான் | (15 வயது) |
| 02. | செல்வி ஹென்றிக்கூஸ் மர்லின்பென்ரா | (16 வயது) |
| 03. | திரு. இராசமணி கிறிஸ்ரியன் | (31 வயது) |
| 04. | திருமதி ஹென்றிக்கூஸ் மெல்டா | (45 வயது) |
| 05. | திருமதி வெனோ திரேசம்மா | (47 வயது) |

**புனித பத்திரிசியார் கல்லூரி பகுதியில்... (21.10.1987)**

| | | |
|---|---|---|
| 01. | செல்வி பஸ்ரியன் விஜயந்தி | (16 வயது) |
| 02. | திரு. சிங்கம் அப்பலோ | (21 வயது) |
| 03. | திருமதி பெரியதம்பி சின்னப்பிள்ளை | (60 வயது) |
| 04. | திரு. யோசை சிறில் | (66 வயது) |

**யாழ். வைத்தியசாலை முன்னால்... (21.10.1987)**

**(எரியூட்டப்பட்டவர்கள்)**

| | | |
|---|---|---|
| 01. | செல்வி அழகரட்ணம் நொய்லின் | (08 வயது) |
| 02. | செல்வி செல்வரட்ணம் கொறற்றி ரேணுகா | (08 வயது) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| *03. செல்வி பிலிப் ஜெயா* | *(13 வயது)* |
| *04. செல்வி பிலிப் ஜெனா* | *(15 வயது)* |
| *05. செல்வி பிலிப் மேவின்* | *(21 வயது)* |
| *06. செல்வி செல்வராசா றோசலின்* | *(21 வயது)* |
| *07. திரு. அந்தோனிமுத்து விக்ரர் (சாரதி)* | *(30 வயது)* |
| *08. திரு. ஐயாத்துரை அன்ரன்* | *(33 வயது)* |
| *09. திரு. சூசை செனாவதி* | *(40 வயது)* |
| *10. திரு. பொன்னுத்துரை நவரெட்ணம்* | *(48 வயது)* |
| *11. திரு. சுவாம்பிள்ளை செல்வராஜா* | *(52 வயது)* |

## அராலி கடற் பகுதியில்... (22.10.1987)

*01. திருமதி சூசை மொனிக்கம்மா*
*02. திரு. அந்தோனிப்பிள்ளை இராசதுரை*
*03. செல்வி இராசதுரை றொபினா*
*04. திரு. இராசரெட்ணம் அகஸ்ரின் (திலகம்)*
*05. திருமதி அகஸ்ரின் கொன்சி*
*06. செல்வி அகஸ்ரின் கொன்சனா (03 மாதம்)*
*07. திரு. செபதேயு கிறிஸ்ரியன்*
*08. திருமதி மரியதாஸ் மனோறாணி*
*09. செல்வி மரியதாஸ் சுலோஜினி*
*10. திருமதி சேவியர் சலோமைப்பிள்ளை*
*11. திருமதி கிறிஸ்துராஜா அமலநாயகி*
*12. திருமதி மிக்கேல் சிசிலியா*
*13. செல்வி யேசுதாசன் தேன்மொழி*
*14. ........... (வள்ளம் ஓட்டுனர்)*
*15. ........... (வள்ளம் ஓட்டுனர்)*

■

| | |
|---|---|
| மண்டைதீவு முனை | 31 |
| முகத்துவாரக் கடற்பகுதி | 05 |
| புனித பத்திரிசியார் கல்லூரி | 04 |
| யாழ். வைத்தியசாலை முன்பாக | 11 |
| அராலி கடற்பகுதி | 15 |
| **அறுவடையானோர்** | **66** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்கான விளக்கம்

**சிறுத்தீவு:** தெற்கே அணைபோல உள்ள சிறிய தீவு.

**சோளகம் (சோளகக்காற்று):** தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று.

**ஜெற்றி:** கடலைநோக்கி 100 மீ. நீளமுள்ள, 'T' வடிவிலான இறங்குதுறை.

**நாவாய்:** நெய்தல் நிலப் பறை, மரக்கலம்.

**அலுப்பாந்தி:** பழமைவாய்ந்த மீன்பிடி வர்த்தகத் துறைமுகம்.

**வத்தை:** மரப்பலகைகளிலானான பாரிய தோணி ('பாய்' மூலம் செலுத்தப்படும்).

**சம்மாட்டி:** கணிசமான முதலீடு உள்ள கடற்றொழிலுக்கு உரிமையாளர்.

**சிறகுவலை:** 150 வருடங்களுக்கு முன்னரிருந்து செய்யப்பட்டுவரும் தொழில். ஆழ் மற்றும் பரவைக்கடலில் கம்புகளின் உதவியுடன் வேலிபோன்று வலைகளை நிறுத்தி, சிறைபோன்று 'பட்டி' அமைத்து மீன், இறால்களை பிடித்தல்.

**கரைவலை:** ஏதாவது ஒரு கரையை அண்டிய கடற்பகுதியில், இயந்திரப் படகின் உதவியுடன் ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழிலாளர் இணைந்து செய்யும் தொழில்.

**ஆளரட்டுதல்:** அதிகாலை தொழிலுக்குச் செல்வதற்கு ஏதுவாக தமது தொழிலில் வரும் தொழிலாளர்களது வீடுகளுக்குச் சென்று பெயர்சொல்லி அழைத்து அவர்களை நித்திரையிலிருந்து எழுப்புதல்.

**போடுகாசு:** வருவாய் குறைவானபோது அல்லது வருவாயுடன் மற்றும் வருடத்தில் இரண்டுமுறை சம்மாட்டியால் தொழிலாளருக்கு வழங்கப்படும் பணம்.

**உடக்குப்பாஸ்:** 'உடக்கு'களுக்கு அந்தந்த பாத்திரத் தன்மைக்கேற்ப வேடஉடை அணிவித்து, ஒப்பனை செய்வித்து அவற்றின் துணையுடன் இயேசுவின் திருப்பாடுகளை காண்பிக்கும் நிகழ்த்துக்கலை.

**கிறிச்சான்:** துக்கப்பறை எழுப்பும் கருவி.

**உடக்கு:** சாதாரண மனிதனின் அளவில், ஒரு காலத்தில் வாழ்ந்த வரலாற்று மனிதனின் தோற்றத்தில், மரத்தினில் செதுக்கப்படும் உருவம்.

**மேலாப்பாச்சி:** கரைவலைத் தொழில் நுணுக்கங்கள் அறிந்த அனுபவசாலி. கடல் வளங்கள், கடலின் நீர் வகைகள், கால மாற்றத்துக்கேற்ற மீன்பிடிப் பகுதிகளை நன்கு அறிந்து வழிநடத்தக்கூடியவர். தொழில் செய்யும் பகுதியில் (பாடுக்குள்) அரவமின்றி நுழைந்து சிக்கியுள்ள மீனினங்கள், அவற்றின் அண்ணளவான எண்ணிக்கைகளைக் கணக்கிடக்கூடியவர், இவரை 'மண்டாடி' என்றும் அழைப்பர்.

**பாடு:** இடுப்புக்குக் கீழ்பட நீர் இருக்கக்கூடிய கரைப்பகுதியை ஒரு எல்லலையாகக் கொண்டு கடவத்துக்காரர் நிற்க, படகின் உதவியுடன் கணிசமான தூர - அகலத்தை பலவகை வலைகளினால் உள்ளடக்கி, மத்தியில் 'மடி' சமாந்தரமாக வருமாறு சுற்றி வளைக்கப்பட்ட கடற்பகுதி.

**நிலவு படுகிற (மறைகிற) நீர் :** கடலின் நீரோட்டம் 'வெள்ளம்' (கடல் நீரின் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரம்), 'வடு - வற்று' (கடல் நீரின் குறைந்த நிலை) என இருவகையாக உள்ளது. நிலவு மறைவதற்கு மூன்று மணித்தியாலம் இருக்கும்போது குறையத் தொடங்கிய நீரோட்டம், நிலவு மறையும்போது உச்ச வடுவுக்குச் சென்றுவிடும். தொடர்ந்து மூன்று மணித்தியாலத்தின் பின்னர் அதிகரிக்கத் தொடங்கும் நீரோட் டம், மேலும் மூன்று மணித்தியாலத்தால் உச்ச வெள்ளமாக மாறிவிடும். இவ்வாறே ஆறு மணித்தியால இடைவெளியில் வெள்ளம், வடு என மாறிமாறி நிகழும்.

***பழங்கயிறு:*** மூன்று அடி நீளமுள்ள 'சைக்கிள் ரியூப்' பிற்குள் பத்துக்கும் மேற்பட்ட இழைக் கயிறுகள் ஒன்றாக இருபக்கமும் ஒவ்வொரு முளம் வெளியே இருக்கும் வகையில் புகுத்தப்பட்டிருக்கும். 'ரியூப்' நாரியில் இருக்கும் வண்ணம் இழைக் கயிற்றால் வலைகளுடன் இணைந்த கம்பான் கயிற்றைச் சுற்றி இழுப்பார்கள்.

***அற்றோம் (அற்ஹோம்):*** ஒருவருக்கொருவர் உதவுதலை, பகிர்தலை அடிப்படை யாகக்கொண்ட சம்பிரதாய நிகழ்வு. பணத் தேவையுள்ளவரால் வீடுவீடாக 'அற்றோம்' அழைப்பிதழ் கொடுக்கப்படுவதுடன் மதிய விருந்துக்கும் அழைப்பு விடப்படும். அன்றைய தினம் மதியம் வருகை தருவோருக்கு விருந்து வழங்கப்படும். மாலையில் பலரும் தம்மால் கொடுக்கக்கூடிய பணத்தை கொடுத்துதவுவார்கள். இது அவர் பெற்ற வட்டியில்லாக் கடனாகும். பணம் கொடுத்தவர்கள் இடைவெளிவிட்டு ஒவ்வொருதராக அற்றோம் வைக்கும்போது முன்னையவர் அவர்களுக்கு தாம் பெற்ற பணத்துடன் மேலதிகமாகவும் கொடுத்து உதவுவார். மேலதிக பணம் இவர் கொடுத்த கடனாகும். இப்படியே மாறிமாறி நடைபெறும்.

***விடியச்சோறு:*** அதிகாலை தொழிலுக்குச் செல்வோர் கொண்டுசெல்லும் உணவு. ஓலைப் பெட்டியினால் மூடப்பட்ட அலுமினியச் சட்டியில் மூன்றிலொரு பகுதி வரை கறி விடப்பட்டு மேலாக நிறைய சோறு போடப்பட்டிருக்கும்.

***மடிப்பெட்டி:*** (மடியில் சொருகி வைக்கும் பெட்டி) குருத்தோலையால் (பனை) இரண்டு மூலைகளுடன் நீள் சதுரமாக இழைக்கப்பட்ட மூடியுடன் அமைந்த கையடக்கமான பெட்டி. இவற்றுள் வெற்றிலை, பாக்கு, புகையிலை, பணம் போன்றவற்றை வைத்துக்கொள்வர்.

***படையாளி:*** மனமுருக புனித யாகப்பரை அழைக்கும் சொல்.

***அரியதரம் (அதிரசம்):*** திருமணம் செய்த பின்னர் முதல் தடவையாக தொழிலுக்கும் செல்லும் மணமகனால் தொழிலாளருக்கு வழங்கப்படும் பலகாரம். இதற்கு பிரதியுபகாரமாக அன்றைய தொழிலில் பிடிபட்டதில் பெரியமீன் அவர்களால் அன்பளிப்பு செய்யப்படும்.

***கலப்பத்து:*** மரப் பலகைகள் கொண்டு செய்யப்படும் படகின் பலகைப் பொருத்து களிடையே ஏற்படும் வெளிகளை விசேடமாகத் தயாரிக்கப்பட்ட தென்னந் தும்புகள் மற்றும் பருத்தி நூல்கள் மூலம் நெருக்கமாக இறுக்கி அடைத்து மேலாக குங்கிலியம் உருக்கிப் பூசுதல்.

***கச்சான்(காற்று):*** மேற்குத் திசையிலிருந்து வீசும் காற்று. பொதுவாக குளிராய் இருக்கும். கடல் பெருகும் ஆனால் பயங்கரமில்லை.

***கொண்டல்(காற்று):*** கிழக்குத் திசையிலிருந்து வீசும்காற்று. இக்காற்று சூறைக் காற்றாக மாறினால் பயங்கரமாகவும் அழிவுகள் அதிகமாகவும் இருக்கும். கடல் மட்டம் உயரும். வேறு திசையிலான காற்று சூறைக்காற்றாக வீசி இக்காற்றுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பினால் அமைதியை உண்டாகும்.

**திருந்தாதி:** றோமான் கத்தோலிக்க ஆலயங்களில் அதிகாலை, மதியம், சாயந்தரம் என அடிக்கப்படும் மணி.

**தலைக்காற்று:** மூர்க்கத்தனமாக வீசும் ஆரம்பச் சோளகக்காற்று.

**அணியம்:** படகின் முன்பக்கம். படகின் மையப் பகுதியைவிட உயரமானது.

**லாவுதல்:** கையை அசைத்து அல்லது துணியால் அசைத்து சைகை செய்தல்.

**தண்டையல்:** போகவேண்டிய இடத்திற்குப் படகைச் செலுத்தும்போது அதனை தேவையான திசைக்கு திருப்புவதற்கு 'சுக்கானை' பயன்படுத்துபவர். நட்சத்திரங்கள், திசைகள், கடற்பகுதிகளை நன்கு அறிந்திருக்கும் இவர், படகிற்குச் 'சுக்கானை'ப் போல பிரதானமானவராகும்.

**வார்த்தைப்பாடு:** திருமணம் செய்துகொள்ளவிருக்கும் மணமக்கள் ஆலயத்தில் பங்குக் குருவுக்கு முன்னால் தமது சம்மதத்தை தெரியப்படுத்தி பதிவுசெய்தல்.

**கானாத்தடி:** சுக்கானை வேண்டிய திசைக்குத் திருப்புதற்கென அதனில் பொருத்தப் படும் 5 அங். விட்டம் வரையிலான தடி.

**கடையால்:** படகின் பின்பக்கம் (சுக்கான் மற்றும் இயந்திரம் உள்ள பகுதி). அணியத்தைவிட பதிவாகவும், மையத்தைவிட சற்று உயரமாகவும் இருக்கும்.

**சுக்கான்:** படகின் கடையாலில் பொருத்தப்பட்டிருக்கும். இது படகை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர, உரிய திசைக்குத் திருப்ப, நேராகச் செலுத்த உதவும்.

**கவிர்:** கடல் நீரினுள் மின்மினிப் பூச்சிகளைப்போல பரவலாகத் தெரியும் ஒளி.

**தவ்வல்:** சிறிய 'மணலை' இன மீன்.

**வளிச்சல் (வலை) போட்:** நைலோன் நூலிலான வலைகொண்டு தொழில் செய்யும் படகு. கீழே கற்களும் மேலே புணைகளும் பொருத்தப்பட்ட பல நைலோன் வலைகள் இணைக்கப்பட்ட, இரண்டு மைல் வரையிலான நீளங்கொண்ட வலை களை ஆழ்கடலில் இறக்கிவிட அவை நீரோட்டத்தில் வளிந்து செல்லும்.

**கட்டா:** கட்டாப்பாரை மீன். இது பெரும்பாலும் தொகையாகவே பிடிபடும்.

**மான்பாடு:** கடல்நீர் அசைவெதுவுமின்றி காணப்படும் நிலை.

**உவட்டு:** அடுக்கு அலை அல்லது தொடர் அலையின் தன்மையை ஒத்தது.

**முள்ளிச்செடி:** வலைபோன்று பின்னப்பட்ட கொடிகளாலான தரையில் படரும் பச்சைநிறச் செடி.

**பாதங்கழுவிய தண்ணீர்:** ஆலயங்களில் வழிபாட்டுக்காக வடிவமைக்கப்பட்டி ருக்கும் சுரூபங்களில், மனம் விரும்பிய ஒரு சுரூபத்தின் பாதத்தைச் சொற்ப தண்ணீர் கொண்டு கழுவி அந்நீரைப் போத்தலிலிட்டு தொழிலுக்குச் செல்லும்போது கொண்டு செல்வர். தொழில் ஆரம்பிக்கும் முன்னர் அதனை படகின்மீது, தொழில் உபகரணங் களின்மீது தெளிப்பர். இது நம்பிக்கையின் அடிப்படை.

**சாதாளை, இராவணன்மீசை:** கடலடியில் வளரும் தாவரங்களின் பகுதிகள். காற்றின், நீரோட்டத்தின் வேகத்தால் துண்டாடப்பட்டு, மிதந்துவந்து கரையில் ஒதுங்குபவை.

**வெண்சொறி:** ஒருவகை உயிரினம். கடலில் மிதப்பவை. அதன்மீது உடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்புகள் பட்டால் சுணைக்கும். காற்றால், நீரோட்டத்தால் கரையில் ஒதுங்கி மடிந்துவிடும். மடிந்தவற்றிலிருந்து துர்மணம் வீசும்.

**கடவத்தார்:** ஒரு பக்கத் தரையில் நின்று வலை இழுப்பவர்கள்.

**நீரடையாளம்:** கடலில் இறங்கும்போது தமக்கு விருப்பமான தெய்வத்தை மனதில் நினைத்து, நீரைத்தொட்டு, உடலில் 'சிலுவை' வரைதல். இடையூறின்றி காக்க வேண்டுமென்ற வேண்டுதலாகும்.

**கம்பான்கயிறு:** இளைக்கயிறுகள் பலவற்றை ஒன்றாக இணைப்பது புரியாகும். மூன்று புரிகள் ஒன்றாக இணைத்து முறுக்கப்படும் நீண்ட கயிறு கம்பான்கயிறு. பொதுவாகத் தூரத்தை கம்பான் கயிறின் நீளத்திலே கணக்கிடுவர் (ஒருகம்பான்).

**ஈரவலை, ஈலக்கண்ணி, நடுவணி, மாலக்கண்ணி, மாரிவலை:** கடலில் பாட்டு எல்லையை வேலிபோன்று அடைப்பதற்கு பயன்படுத்தும் கயிற்று வலைகள்.

**மடி:** 'வாய்வலை' (முன்பக்கம்) 8 பாகத்தை விட்டமாகக்கொண்ட வட்டமாக விரிந்து, 12 பாகம் வரை நீண்டு, 'தூறு' (பின்பக்கம்) 5 பாகத்தை விட்டமாகக் கொண்ட வட்டமாக ஒடுங்கிக் காணப்படும் வலை. வாய்வலையின் இரு பக்கமும் பொருத்தப்பட்டிருக்கும் 'கைவலை'யிலேயே 'மாரிவலை' இணைக்கப்படும். மீன்கள் சிறைப்படுவதும் இவ்வலையில்தான்.

**மடவலை:** வலையின் கீழ்ப் பகுதி. ஓட்டையுள்ள கற்கள் பல கட்டப்பட்டிருக்கும். கற்கள் கடல் நிலத்தடி நோக்கி வலையை இழுத்து நிற்கும்.

**மோவலை:** வலையின் மேற்பகுதி. 'புணை'கள் நிரையாகக் கட்டப்பட்டிருக்கும். புணைகள் கடல் நீரின் மேல் மட்டம்வரை வலையை இழுத்து நிற்கும்.

**புணைகள்:** காட்டு மரக் கொப்புகள். இவை பாரமற்றதாகையால் நீரில் நன்றாக மிதக்கக்கூடியது.

**அம்பா:** கூட்டாக வலை இழுக்கும்போது ஒத்திசைந்து இழுப்பதற்காககவும், உற்சாகத்தை ஏற்படுத்துவதற்காகவும், வேலையின் கடினத்தை மறப்பதற்காகவும் கடற்றொழிலாளர்களால் பாடப்படும் கிராமியப் பாடல்.

**கூறியான்:** மீன்களுக்கான விலைகூறலை முன்னின்று நடத்துபவர்.

**முறைத்தொழிலாளர்:** ஆழ்கடல் தொழில் செய்யும் படகில் எட்டுத் தொழிலாளர் இருப்பர். இவர்கள் இரு பிரிவினராகப் பிரிந்து ஒரு நாளுக்கு ஒரு பிரிவினர் தொழிலுக்குச் செல்வது வழக்கம். தொழிலுக்குச் செல்லாத பிரிவினரே முறைத் தொழிலாளர். கிடைக்கிற வருவாய் இரு பிரிவினருக்கும் சமமாக இருக்கும்.

**வெள்ளாப்பு:** அதிகாலை வெளிச்சம்.

**இடையாடி:** பாஷையூரிலிருந்து ஆழமான பகுதிவரை உள்ள வெட்டு ஓடை.

**புல்லு:** மேல் நாடுகளிலிருந்து வருகைதரும் வெள்ளை நிற பருவகாலப் பறவை.

**விலங்காக:** காற்று வீசும் திசைக்கு குறுக்காக.

**எல்வ்:** குருநகரில் பாவனையிலிருந்த பாரவூர்தி ரக வாகனம்.

**இறைப்பாரித்தல்:** மரணம் நிகழ்ந்த செய்தியை மக்களுக்கு தெரியப்படுத்தும் ஆலய மணி. இதனை 'அடிக்கிறது' என்றின்றாமல் 'இறைப்பாரிக்கிறது' என்றே கூறுவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒட்டம்:** படகின் மேல் விளிம்பு. அதனில் வழமையாகத் தொழிலாளர் அமருவர்.

**நோர்மாண்டி தரையிறக்கம்:** பிரான்ஸ் நாட்டில் ஆங்கிலக் கால்வாய்ப் பக்கமாகவுள்ள 'நோர்மாண்டி' மாநிலத்திலுள்ள உதா, ஒமாகா, கோல்ட், ஜுனோ, சாரோ நகரங்களின் (*Omaha, Utah, Gold, Juno, Szord*) கடற்கரைகளில் 06.06.1944 அன்று ஜேர்மனியரின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக அமெரிக்கக் கூட்டுப் படைகள் மாபெரும் தரையிறக்கத்தை மேற்கொண்டன. அத்தரையிறக்கத்தில் கடல்நீரே சிவப்பாக மாறியிருந்தது. அதனை 'நெப்டியூன் நடவடிக்கை' (*Operation Neptune*) அல்லது 'நோர்மாண்டி தரையிறக்கம்' (*Normandy Landings*) எனவும் அந்நாள் *D-Day*' எனவும் அழைக்கப்படுகிறது.

**வியாகுல பிரசங்கம்:** ஆதித் திருச்சபையின் போதனை மையமான 'பாஸ்கு' நிகழ்வுகளை உள்ளடக்கி, நாட்டார் இசை மரபுடன், 1730 இல் 'யாக்கோமே கொன்சால்வேஸ்' அடிகளாரால் ஆக்கப்பட்ட கிறிஸ்தவ நாட்டார் இலக்கியம்.

**ஜாலியன்வாலா** : 13.04.1939 அன்று இந்தியா பஞ்சாப் 'ஜாலியன்வாலா பாக்' மைதானத்தில் நிராயுதபாணிகளாகத் திரண்டிருந்த மக்களை பிரித்தானிய படைகள் சுட்டுத் தள்ளின. அதில் 800 பேர் மாண்டனர், 1,580 பேர் படுகாயமுற்றனர். ■




யாழ் குடாநாட்டில் குருநகர் அமைவிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மண்டைதீவு முனை அறுவடையின் அடையாளங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவூட்டல் படங்கள்



கரைவலைத் தொழில்



. பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் 30 சடலங்கள் ஒன்றாகப் புதைக்கப்பட்ட இடம். தற்போது தனித்தனியாக பிரிக்கப்பட்டுள்ளன (2012).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிலுவை சுமக்கும் இயேசுவின் உடக்கு


சிலுவையில் அறையப்படும் இயேசுவின் உடக்கு



31 ஆவது நாள் நினைவுகூரல்





நினைவு மலர் (10.07.1986)



நினைவுத் தூபி 1986 1995இல் உடைக்கப்பட்டது

உடைக்கப்பட்ட பின்னர் கட்டப்பட்ட நினைவுத் தூபி 2004






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனித யாகப்பர் ஆலயம் (1986)




முகத்துவார வெளிச்சவீடு (1980)
(தற்போது முற்றாக அழிந்துவிட்டது)



பண்ணைத் தாம்போதி
(1982)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போர்த்துக்கேயர் காலத்து (1658இற்கு முன்னர்) நாற்சதுரக் கோட்டையும்
கடற்கரையோர குருநகர் குடியிருப்புகளும்




குருநகர் துறையின் ஒரு பகுதி (1982)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருநகர் இறங்குதுறை சிதைவுற்று சிறுதிருத்த நிலையில் (2005)



ஊர்காவற்றுறை சேமக்காலையில் 16 சடலங்கள்
ஒன்றாகப் புதைக்கப்பட்ட இடத்தின் அடையாளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலையார்வன், உப்புக்காற்று (2012) என்ற நாவலின் மூலமாக என்னைக் கவர்ந்தவர். யாழ்ப்பாணத்து குருநகர் பகுதியில் வாழும் மீனவர்களின் வாழ்க்கையை மையமாகக்கொண்டு அவர் எழுதிய உப்புக்காற்று என்னும் நாவல் இலங்கையில் விருதுகள் பலவற்றை வென்றெடுத்தது சாதாரணமானது; ஆனால், உப்புக்காற்று ஈழத் தமிழ் நாவல் உலகில் அழியாத ஓரிடத்தை பிடித்துக்கொண்டது என்பதுதான் கலையார்வனின் அயராத முயற்சிக்கு கிடைத்த பெரு வெற்றி.


போர்க்காலச் சூழலில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்களின் அவலம் நிறைந்த வாழ்வை எடுத்துக்கூறுவது இவரது இரண்டாவது நாவலான வேப்பமரம் (2013). சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இந்த மண்ணிலே நடைபெற்றுவந்த போராட்டங்களின் மத்தியில் மக்களோடு மக்களாக வாழ்ந்து போரின் அவலங்களைத் தானும் அனுபவித்த ஒரு கலைஞனின் உள்ளத்தில் தீயாய்க் கொளுந்துவிட்டெரியும் எண்ணங்களுக்கு உருக்கொடுப்பனவே கலையார்வனின் எழுத்துக்கள்.

இவரது எழுத்துக்கள் தான் வாழ்ந்த மண்ணையும் மக்களையும் விட்டு விலகிச் செல்லாதவை. கதை கூறும்போதும் காவியம் படைக்கும்போதும் அவரின் பாடுபொருள் மண்ணில் நடந்த அவலங்களாகவே இருப்பது, அவர் இந்த மண்ணோடும் மக்களோடும் கொண்டுள்ள பிரிக்கமுடியாத பிணைப்பின் இறுக்கத்தையே எமக்கு எடுத்துக் காட்டுவதாயுள்ளது...

... ஆசிரியரின் விபரிக்க முடியாத வேதனையின் வெளிப்பாடு போல்த் (அறுவடை) தெரிந்தாலும் தமது விதியை நினைத்து ஏங்கும் ஈழத் தமிழ் மக்களின் வேதனையின் பிரதிபலிப்பாகவே இதனைக் காணமுடிகின்றது. ஆனால், பேரழிவுகளைச் சந்தித்த பின்னரும் குருநகர் மக்கள் மீண்டும் தமது மண்ணில் தலைநிமிர்ந்து நிற்பதைக் காணும்போது காலம் என்பது கறங்குபோல் சுழன்று மேலது கீழாய், கீழது மேலாய் மாறிடும் என்ற உலகத்தியற்கையை நம்பிக்கையோடு நினைத்துக்கொள்ளவே முடிகிறது.

வரலாற்றில் மறக்கப்பட முடியாத சம்பவங்களை ஆவணப்படுத்தும் வகையில் குறுங்காவிய வடிவில் தொகுத்தளித்த கலையார்வனின் முயற்சி பாராட்டப்பட வேண்டியது. அவரது இலக்கிய முயற்சி மென்மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்.

அணிசெய் குறிப்பிலிருந்து...




ISBN 978-955-0197-04-0

ஜெயந்த் சென்ரர் 021 222 9021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org